கதர் மலர்

மலர் 5 | காந்தீய - சர்வோதய தத்துவப் பிரசார மாதப் பத்திரிகை | இதழ் 8

பூமிதான யக்ளுத் தலைவர்: ஆச்சாரிய விநோபா பாவே

காசி - சேவாபுரி

சர்வோதய சம்மேளன

மலர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 MAY 1952
MADRAS

நந்தன-ஹூ

வைகாசி-மீ

★

வருட சந்தா ரூ. 3 | ஸர்வோதய பிரசுராலயம் (A. I. S. A.,) வீரபாண்டி, திருப்பூர் | விலை அணா 4

இலங்கையில் தனிப் பிரதி: 30 சதம்

கதர் மலர்

நந்தன-வைகாசி தொடர் நெ. 56

பொருளடக்கம்

பிரார்த்தனையின் பொருள் என்ன?

— மகாத்மா காந்தி

பூமிதான யக்ஞம் — வினோபாஜியின் பேருரை:

— ச. ஜெகந்நாதன்

காந்தியும் மார்க்ஸிஸமும்:

— ஆச்சாரிய வினோபாஜி

காசி - சேவாபுரி சர்வோதய சம்மேளனம்:

வினோபாஜியின் ஆரம்ப தினப் பிரசங்கம்:

விமர்சனம்:

பூமிதான இயக்கமும் பரவல்முறை குடிசைத் தொழிலும்:

மக்களுக்கு வினோபாஜியின் வேண்டுகோள்:

குறிப்பும் செய்தியும்:

தமிழ் நாட்டில் பூமிதான யக்ஞப் பிரசாரம்:

வருந்துகிறோம்

தமிழ் நாட்டு சர்க்கா சங்கம் தனது திருப்பூர்-காந்திநகர் தொழிற்சாலையில் பல வருஷங்களாக கையால் செய்த காகிதம் உற்பத்தி செய்து வந்தது. மில் காகிதம் கிடைக்காத காலத்தில் இக்காகிதம் சங்கத்தின் கணக்குப்புத்தகம் முதலிய தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்தது. பின்னர் உற்பத்தியான காகிதத்தின் பெரும்பாகம் கதர் மலர் பத்திரிகையின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள உதவியாக இருந்தது.

சமீப காலத்தில் சில காரணங்களால் காந்திநகர் தொழிற் சாலையை மூடவேண்டி நேர்ந்தது. தொழிற்சாலை மூடப்பட்டவுடன் காகித உற்பத்தியும் நின்றுவிட்டது. எங்கள் கைவசம் உள்ள கைக் காகிதம் எல்லாம் சென்ற சித்திரை மாத இதழுடன் தீர்ந்துவிட்டது. முயற்சி செய்தும் வேறு இடங்களிலிருந்து எமது சௌகரியத்திற்குத் தகுந்தவாறு கைக்காகிதம் கிடைக்கவில்லை.

கையால் செய்த காகிதம் சர்க்கா சங்கத்தில் உற்பத்தியாகி வந்தபோழுது அதைக் கதர் மலருக்கு உபயோகிப்பது சௌகரியமும், சாத்தியமுமாயிற்று. ஆனால், இனி சங்கத்தின் காகிதம் கிடைக்காதாதலால் கதர் மலருக்கு மில் காகிதத்தை உபயோகிக்க நேரிடுகிறதைப்பற்றி மிக்க வருந்துகிறோம்.

வாசகர்களுக்கு

கதர் மலர் வைகாசி மாத இதழை, வழக்கம்போல் முதல் தேதி (ஆங்கில மாதம் 15-ந் தேதி)யில் வெளியிட முடியவில்லை; 5 நாள் தாமதித்துப் பிரசுரிக்க நேர்ந்தது பற்றி வருந்துகிறோம். காசி - சேவாபுரியில் நடைபெற்ற சர்வோதய சம்மேளன நடவடிக்கைகளையும், ஆச்சாரிய வினோபாஜியின் பிரசங்கங்களையும் பூரணமாகத் தொகுத்து வெளியிடவேண்டும் என்ற நோக்கமே இதற்குக் காரணம். ஆயினும், விவரங்கள் தாமதித்து வந்ததனாலும், இடம் போதாமையினாலும், வினோபாஜியின் பிரசங்கங்களில் ஒரு பகுதியை மட்டுமே இவ்விதழில் வெளியிட முடிந்தது. எஞ்சிய பகுதிகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரமாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கதர்  மலர்

மலர் 5 | நந்தன-ஸு * வைகாசி-மீ | இதழ் 8

MAY 952

★ பிரார்த்தனையின் பொருள் என்ன? ★

மகாத்மா காந்தி

பிரார்த்தனை என்பதற்கு யாசித்தல் அல்லது இரத்தல் என்பது மூலப்பொருளாகும். கடவுளிடமோ, பெரியோரிடமோ, பணிவுடன் வேண்டிக்கொள்ளுதலே பிரார்த்தனை. இங்கே இந்தப் பொருளில் பிரார்த்தனை என்ற சொல் கையாளப்படவில்லை. பிரார்த்தனையென்பதற்கு கடவுளைத் துதித்தல், பஜித்தல், பாடுதல், உபாசித்தல், நல்லோருடன் சேர்ந்திருத்தல், தனித்திருந்து தியானித்தல், ஆத்ம சுத்தி ஆகியவையே இங்கே பொருள்களாகும்.

ஆனால் கடவுளென்பது யார்? அவர் நமது உடலுக்கோ, உலகத்திற்கோ, புறத்தே இருந்து வரும் நபரல்ல. அவர் எங்கும் நிறைந்தும், எல்லாம் அறிந்தும், சர்வசக்தியும் பொருந்தியும் இருப்பவர். அவருக்கு ஸ்தோத்திரத்தின் அவசிய மென்ன? எங்கும் இருந்துகொண்டு எல்லாவற்றையும் அவர் கேட்கிறார். நம்முடைய எண்ணங்கள் அவருக்குத் தெரியும். உரக்கக் கூவி அவர் காதில் நாம் எதை விழச் செய்யப் போகிறோம்? அவர் நம் உள்ளங்களிலேயே இருந்து வருகிறார். நகத்திற்கும் சதைக்கும் எவ்வளவு நெருக்க முண்டோ அதைவிட அவர் நமக்கு நெருங்கியவர். இங்கே பிரார்த்தனையினால் என்ன ஆகும்?

இம்மாதிரியான சந்தேகங்கள் தோன்றுவதில் பிரார்த்தனை என்பதற்கு ஆத்ம சுத்தியென்றும் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. வாயினால் சொல்லி கடவுளுக்கு எதையும் தெரிவிக்கத் தேவையில்லை. சொல்லியோ, பாடியோ நமக்கேதான் நாம் அறிவுறுத்த வேண்டியிருக்கிறது. நம்மையேதான் உறக்கத்திலிருந்து எழுப்பிவிடவேண்டியிருக்கிறது. நம்மில் பலர் கடவுளை புத்திபூர்வமாக உணருகிறார்கள். பலருக்கு இவ்விஷயத்திலும் சங்கையிருக்கிறது. எவரும் கடவுளைக் கண்ணால் கண்டதில்லை. நாம் அவரை உள்ளத்தால் உணரவேண்டும், தரிசிக்கவேண்டும், அவருடன் ஒன்றிவிடவேண்டும். இதற்காகவே பிரார்த்தனை செய்கிறோம்.

நாம் காண விரும்பும் கடவுளே சத்தியம்; அல்லது சத்தியமே கடவுளென்று சொல்லலாம். சத்திய மென்பதற்கு உண்மையே பேசுதல் என்பது மட்டும் பொருளல்ல. இந்த உலகில் தன் உருவிலேயே எப்பொழுதுமே எது இருந்து வந்ததோ, இன்றுமிருக்கிறதோ, இனியும் இருக்குமோ, எது ஒன்றைத் தவிர வேறு எதுவுமே இல்லையோ, எது தன் சக்தியினாலேயே இருந்து வருகிறதோ, எதற்கு வேறு எந்த உதவியும் தேவையில்லையோ, ஏன், உலகத்தில் உள்ளவை அனைத்தும் எதன் ஆதாரவினால் இருந்துவருகின்றனவோ, அதுவே சத்தியமெனப்படுவது. சத்திய மொன்றே என்றென்றும் இருப்பது; மற்றவையெல்லாம் ஒரு கணமிருந்து மறுகணத்தில் மரிப்பவை. அதற்கு எந்த உருவமும் தேவையில்லை. அதுவே சுத்த அறிவும், சுத்த ஆனந்தமுமாகும். அதை ஈச்வரன் என்கிறோம். ஏனெனில், அதன் சக்தியினாலேயே எல்லாம் நடக்கிறது. அதுவும் அதன் சட்டமும் ஒன்றாகையால், சட்டமும் அறிவு மயமானதே. இந்தச் சட்டத்தின் உதவியினால் எல்லாம் நடந்து வருகின்றன. இந்த சத்தியத்தை வழிபடுவதற்கே பிரார்த்தனை என்று பெயர்; அதாவது, தாமும் சத்திய மயமாக ஆவதைத் தீவிரமாக விரும்புதல். இந்த விருப்பம் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இருந்து வரவேண்டும். ஆனால் நமக்கு இவ்வளவு விழிப்பு ஏற்படாமையால் குறிப்பிட்ட சமயங்களில் மட்டும் பிரார்த்தனை, வழிபாடு அல்லது உபாசனையைச் செய்து கொண்டே வந்து, அறுபது நாழிகையும் சத்தியத்தை மறவாமல் இருந்துவர வேண்டியதே.

ஆசிரமம் இம்மாதிரியான பிரார்த்தனையை கைவரச் செய்ய விரும்புகிறது. இப்பொழுதோ அது அதிலிருந்து வெகு தொலைவிலேயே இருக்கிறது. மேலே கூறப்பட்டவை அனைத்தும் புற உபாயங்கள்; ஆனால் எந்த வகையிலேனும் பிரார்த்தனையை உள்ளத்தில் இறக்கும் கருத்து இருந்து வருகிறது. ஆசிரமத்தின் பிரார்த்தனை இதுவரையில் கவர்ச்சி உள்ளதாக ஆகவில்லையென்றால், இன்றும் ஆசிரமவாசிகளை பிரார்த்தனைக்கு வரும்படித் தூண்ட வேண்டியிருக்கிறதென்றால், அதன் பொருள் நான் மேலே கூறிய வகையில் எங்களில் எவரிடத்திலும் பிரார்த்தனை அதன் உண்மை உருவில் இன்னும் இடம் பெற்றாகவில்லை என்பதே.

உள்ளத்தில் நன்கு இறங்கிய பிரார்த்தனையை ஒருவர் செய்யும்பொழுது அவர் மெய்மறந்த தசையில் இருப்பாராகையால் அப்பொழுது அவருக்கு வேறு எதன் நினைவோ உணர்ச்சியோ இராது. உண்மை பக்தன் விஷய போகத்தை விரும்புகிறவனை ஒத்தவனென்று சொல்லப்பட்டிருப்பது சரியே. போகத்தை விரும்புகிறவனுக்குத் தான் விரும்பும் போகப் பொருள் கிடைத்து விடும்பொழுது, அவன் தன்னையே மறந்து அந்தப் பொருளுடன் ஒன்றி விடுகிறான். அவன் புலன்கள் அனைத்தையும் அதிலேயே செலுத்திவிடுவதால் அவனுக்கு வேறு எதுவும் தோன்றுவதேயில்லை. இதைவிட அதிகமான கலப்பு உணர்ச்சி உபாசகனுக்கு இருக்க வேண்டும். இதை எவ்வளவோ முயன்று, தவம் புரிந்து, அடக்கத்தில் தேறிய பிறகு உரிய சமயத்திலேயே எய்த முடியும். இத்தகைய பக்தன் இருக்குமிடத்தில் பிரார்த்தனைக்கு வாவென்று கூவி எவரையும் அழைக்கவே தேவையிராது. அவனுடைய பக்தியே எல்லோரையும் வலித்திழுத்துவரும்.

இதுவரையில் சமூகப் பிரார்த்தனையைப் பற்றி எழுதப்பட்டது. ஆனால் ஆசிரமத்தில் தனித்துச் சொந்தமாகச் செய்யப்படும் பிரார்த்தனையும் வற்புறுத்தப்படுகிறது. ஏகாந்தத்தில் பிரார்த்தனை செய்யாதவன் சமூகப் பிரார்த்தனையில் கலந்துகொண்டபோதிலும் அதனால் அவனுக்கு அதிக லாபமில்லை. சமுதாயத்திற்கு சமூகப் பிரார்த்தனை மிகவும் அவசியமாகும். ஆனால் தனி மனிதர்களின்றி சமூகம் ஏற்பட முடியாததைப்போல, தனிப் பிரார்த்தனை இல்லாதபொழுது சமூகப் பிரார்த்தனையும் சாத்தியமில்லை. ஆகையால் ஆசிரமவாசி ஒவ்வொருவரும் உறக்கத்திலும் விழிப்பிலும் தனித்தே தம்முள் மனதைச் செலுத்தி தியானம் செய்தல் அவசியமென்று அடிக்கடி எச்சரிக்கப்படுகிறார். இதைச் செய்கிறார்களா இல்லையா என்று கண்காணிப்பதோ கணக்கு வைத்துக் கொள்வதோ சாத்தியமில்லை. ஆசிரமத்தில் இந்தப் பிரார்த்தனை எந்த அளவுக்கு நடக்கிறதென்று என்னால் சொல்ல முடியாது. எல்லோருமே இவ்வகையில் தம் தம் சக்திக்கு உகந்த வகையில் முயன்று வருகிறார்களென்றே நான் நம்புகிறேன்.

'ஆசிரம வாழ்க்கை'

ராட்டை: கல்வியின் சாதனம்

தேசீயப் பள்ளிக்கூடங்களில் ராட்டைக்கு இடமளிக்கும் சோதனையிலிருந்து நான் மிகப் பெரிய விளைவுகளை எதிர்பார்க்கிறேன். 7½ லட்சம் கிராமங்களுக்குக் கல்வி கிடைக்குமாறு செய்வதற்கு திறம் மிக்க கல்வி ராட்டையே என்று நம்பும் ஆசிரியர்கள் மூலமாக சாஸ்திரீய முறையில் இது நடத்தப்படுமானால், அலுப்பு ஏற்படுமோ என்று அஞ்சுவதற்குக் காரணம் எதுவும் இல்லையென்பதோடு, புதியவரி விதிக்காமலும் தர்மவிரோதமான முறைகளில் கிடைக்கும் வருமானத்தை நம்பியிராமலும் பொது மக்களின் கல்விச் செலவு என்ற பிரசினையைத் தீர்த்துக் கொள்ள முடியுமென்று எதிர்பார்ப்பதற்கும் இதில் இடமிருக்கிறது.

காந்திஜி

'ராட்டை—தத்துவ விளக்கம்' என்னும் புத்தகத்திலிருந்து

144137.

★ பூமிதான யக்ஞம் ★

ஆச்சாரிய வினேபாஜியின் பிரசங்கங்களும் யாத்திரைக் குறிப்புகளும்

ச. ஜெகந்நாதன்

1. கம்யூனிஸம் இந் நாட்டில் ஜீரணமாகிவிடும்

பர்ஹஜ் நகர மக்கள், ஆண்களும் பெண்களும் அதிகாலை 5- மணிக்கே பஜனை கோஷ்டியுடன் வினேபாஜியை வழியனுப்பியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. சோஷலிஸ்டுகளும் கலந்துகொண்டனர். அகண்ட சரயூ நதி நகர எல்லையில் பெருக்கெடுத்து ஓடுகிறது. நதியைக் கடந்து வினேபாஜி அஜம்கட் ஜில்லா எல்லையில் பிரவேசிக்க ஏற்பாடு. ஒரு பர்லாங் தூரம் தண்ணீரில் நடந்த பின் படகேறி அக்கரை செல்லவேண்டும். அதிகாலையில் குளிர்ந்த தண்ணீரில் வினேபாஜி நடப்பதை பர்ஹஜ்நகர மக்கள் விரும்பவில்லை. அன்றிரவே ஒரு பர்லாங் தூரத்திற்கு மூங்கில் பாலம் போட்டு விட்டனர். கழைக்கூத்தாடி கயிற்றில் நடப்பது போன்று வினேபாஜி ஆடி ஆடி மூங்கில் பாலத்தைக் கடந்து படகேறினர். ஜனங்களுக்குப் பிரிய மனமில்லை. பெண்கள் தனியாய்படகு எடுத்து அக்கரை வந்து, மங்கல வாழ்த்துப் பாடிக் கொண்டு, பிரிய முடியாது கண் கலங்கி நின்றனர். வினேபாஜியின் வற்புறுத்தலின் பேரில் விடைபெற்றுச் சென்றார்கள். வினேபாஜி கண்ணிலிருந்து மறையும் வரை மக்கள் அக்கரையில் பஜனை பாடிக்கொண்டிருந்தனர்.

சாதாரணமாக ஒவ்வொரு நாளும் யாத்திரை தூரம் பதினைந்து மைலுக்குள்ளாகவே இருக்கும். இன்றோ இருபது மைல். குளிர் காலம் கடந்து கொடிய வெய்யில் காலம் ஆரம்பமாகி விட்டது. வினேபாஜியின் வருகையை எதிர்பார்த்து, கடும் வெய்யிலிலும் ஆங்காங்கு மக்கள் காத்திருக்கின்றனர். முகம்மதாபாத் வந்து சேர மதியம் 12-30 மணியாகிவிட்டது. அக்கிராம மக்கள் ஒரு மைல் தூரம் எதிர்கொண்டு வந்து பஜனைப் பாடல்களுடன் அழைத்துச் சென்றனர். இனிமையான பஜனைப் பாடல்களால் 20 மைல் நடந்து வந்த களைப்பும் நீங்கி விட்டது. வினேபாஜி அந்தக் கடும் வெய்யிலிலும் தன்னை மறந்து பஜனையில் லயித்து, தாளம் போட்டு நடந்து சென்றார். கிராம எல்லையில் முஸ்லிம் மக்கள் உர்து பாஷையில் 'நல்வரவு கமான்கள்' அலங்கரித்து, 'குர்ரான்' ஓதி வரவேற்றனர். அனைவரும் முகாம் சேர்ந்த பின், "என் முகத்தைப் பாருங்கள். இந்த வயதுக் காலத்தில் இந்த மெலிந்த உடம்போடு இருபது மைல் நடந்தேன். சிறிது களைப்பாகவே இருந்தது. ஆனால் கிராம மக்களை தரிசித்தவுடன் களைப்பெல்லாம் நீங்கி விடுகிறது!" என்றார்.

25,000 ஏக்கர் சேர்க்க
சுவாமி சத்தியானந்தரின் சங்கற்பம்

சுவாமி சத்தியானந்தர் அஜம்கட் ஜில்லா போர்டுத் தலைவர். இந்தத் தேர்தலில் தன்னை எதிர்த்து நின்ற 13 அபேக்ஷகர்களைத் தோற்கடித்து காங்கிரஸின் சார்பில் வெற்றி பெற்ற சட்டசபை அங்கத்தினர். ஜில்லாவில் பல இடங்களில் நிர்மாண ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி விசேஷமாக ஹரிஜனங்களுக்கு அரும் பணியாற்றி வருகிறார். காந்திஜியுடன் சபர்மதி ஆசிரமத்திலும் பின் சேவாகிராமத்திலும் சில வருஷங்கள் தங்கியிருந்தவர். இவரும் இவருடைய சக ஊழியர்களும் 25,000 ஏக்கர் இந்த ஜில்லாவில் பூமிதானம் வழங்க சங்கற்பம் செய்து தீவிரமாக உழைத்து வருகின்றனர்.

ஒவ்வொரு கிராமமும் ஒரு
காந்தி கிராமம்

வினேபாஜி இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில், "உங்களுடைய சங்கற்பம் 25,000 ஏக்கர் நிறைவேறிய பின்பும் நீங்கள் சும்மா இருக்க முடியாது. அதன் பிறகும் உங்களுக்கு வேலை இருந்து கொண்டிருக்கும். ஏழைகளுக்குச் சேவைசெய்யும் ஆர்வத்துடன் சங்கற்பத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். குடும்பத்திற்கு 5 ஏக்கர் விகிதம் 5000 குடும்பங்களுக்கு 25,000 ஏக்கரும் பிரித்துக் கொடுக்கப்படும். தானம் கொடுப்பவர்கள், அனுதாபிகள், 5000 குடும்பங்கள். இவ்விதம் உங்களுடன் பத்தாயிரம் குடும்பங்களுடன் தொடர்பு ஏற்படுகிறது. நிலம் பிரித்துக் கொடுத்த பின் விவசாயம் எப்படி நடக்கிறதென்று கவனித்து, கிணறு, மாடு,

வித்து, மற்றும் ஏழைகளுக்கு வேண்டிய உதவி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பின் கிராம சுகாதாரம், கல்வி, குடிசைத் தொழில், பஞ்சாயத்து, பொதுப் பண்டக சாலை, பொதுக் கடை, ஆத்மீக உற்சவங்கள் இவைகளுக்கு ஏற்பாடு செய்து ஒவ்வொரு கிராமமும் 'காந்தி கிராம'மாகச் செய்யவேண்டும். இவ்விதம் கிராம ஊழியர்களுக்கு தொடர்ந்து வேலை இருந்து கொண்டேயிருக்கும்.

"தெலுங்கானாவில் கம்யூனிஸ்டுகள் இரவில் பிஸ்டல் எடுத்து நிலம் பிடுங்கினார்கள். நான் பகலில் அன்பினால் நிலம் வாங்கினேன். அவர்கள் பிஸ்டலை எறிந்து விட்டு பகலில் என்னுடன் சேர்ந்து வேலை செய்தால், அவர்களுக்கும் தேசத்திற்கும் நல்லது. கம்யூனிஸ்டுகளின் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் நான் பாராட்டுகிறேன். ஏழைகளுக்கு சேவை செய்யத் துடிக்கிறார்கள். ஆனால் வெறுப்பையும் வர்க்க பேதத்தையும் உண்டு பண்ணுகிறார்கள். எத்தனையோ கருத்துக்களும் கொள்கைகளும் நம் நாட்டுக் கலாசாரத்தில் கலந்து ஒன்றாகி விட்டன. கம்யூனிஸமும் நம் நாட்டில் ஜீரணமாகிவிடும். கம்யூனிஸ்டுகள் நம் நாட்டில் கர்ம யோகிகளாகி விடுவார்கள். நமது புராதன சக்தியில் எனக்கு நம்பிக்கை யிருக்கிறது. நூற்றுக்கணக்கான வருஷங்களாக அந்தகாரம் இருந்தாலும் ஒரு சிறு விளக்கினாலும் மறைந்துவிடும். சூரிய ஒளிக்கு முன்னால் அவ்விருட்டு எம்மாத்திரம்? நம் நாட்டு ஆத்மீக ஒளியின்முன் கம்யூனிஸம் இங்கு நிலை நிற்காது. மக்கள் அனைவரும் தீவிரமாக பூமிதான இயக்கத்தில் ஈடுபட்டு இதை வெற்றியடையச் செய்ய வேண்டும். இது நம் சாத்மீகத் தத்துவம் பொதிந்த பொருளாதார சமத்துவ இயக்கம். இதற்கு சர்வோதய ஊழியர்கள் உயிரைக் கொடுத்து வேலை செய்ய வேண்டும்'' என்றார்.

மேலும், பூஜ்ய வினோபாஜி "கிராமம் கிராமமாக பஜனை நடக்கிறது. இது நல்லது தான். ஆனால் பகவான் எங்கு இருக்கிறார்? காசியிலும் கைலாசத்திலும் இருக்கிறாரா? நமது மந்திரிகளும் அதிகாரிகளும் நைனிடால், முசோரி சுக வாழ்க்கைக்குப் போவது போன்று, கடவுளும் வெய்யில் காலத்திற்குக் கைலாசத்திற்கும் பின் மாரிக் காலத்தில் காசிக்கும் வருகின்றாரா? அல்லது, நம் நாட்டில் குழந்தைகளுக்கும் விசம் படிப் பால் இல்லாதிருக்கும் போது, அவர் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கிறாரா? அவர் நம் சமீபத்திலும் சமீபமாக இருக்கிறார். நமது புத்தியே கைலாசம். விசால சுத்த இதயமே திருப்பாற்கடல். எதற்கும் அசையாத கைலாய கிரியைப் போன்று ஸ்திர புத்தியுடையவர்களாக, கடலைப் போன்று விசால இதயம் உடையவர்களாக இருக்க வேண்டும். அப்போது நம் அறிவிலும் சச்சிதானந்த சொரூபியாக ஆண்டவன் அமர்ந்துவிடுகிறார். கிராம பஜனை நடத்துவதோடு, பிறரின் துன்பம் கஷ்டம் நீங்கவும் சேவையில் ஈடுபடுங்கள். தாராள மனதுடன் பூமி தானப்கொடுத்து ஏழைகளுக்கு சேவை செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

— அஜம்கட், 25-3-'52

2. ஏழைகளின் உரிமையை மனமுவந்து கொடுங்கள்

கதர் கண்ணியம் நிறைந்த தேசீய ஆடை

அஜம்கட் ஜில்லா போர்டு சார்பாக அளிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தில், சர்க்கார் கதர் உற்பத்திக்கு உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அதற்குப் பதிலளிக்கும் போது வினோபாஜி, "சர்க்கார் கதருக்கு ஆதரவு கொடுப்பது கதரின் உற்பத்திப் பெருக்குக்காக அல்ல. சர்க்கார் கதரின் மகிமையை உணரவேண்டுமென்பதற்காகவே. கதரின் உபயோகம் ஆஸ்பத்திரிகளில் மாத்திரமல்ல, சர்க்கார் அதிகாரிகளின் அணியுடையாகவும் வேண்டும். கதரினால் அஹிம்சா சமுதாயம் நிர்மாணமாகும்" என்றார்.

ஏழைகளின் உரிமையை மனமுவந்து கொடுங்கள்

"நிலப் பிரசினையே எல்லாவற்றிற்கும் அடிப்படையானது. எல்லா சம்பத்துக்களிலும் பூமியே சிறந்தது. நாம் உயிர் ஓம்புவதும் பூமியிலிருந்தே தான். இது, சூரியன் தண்ணீர் காற்றுப் போன்று, பகவான் அருளிய மூலப் பொருள். இவைகளில் தனிப்பட்டவர் எவருக்கும் உரிமை கிடையாது. பூமிதான இயக்கத்தில் நில அமைப்பில் குழப்பத்தை உண்டுபண்ணி அராஜகத்தைக் கிளப்புகிறேன் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். இப்பொழுதிருக்கும் நிலப் பரிவர்த்தனையை ஒழுங்கான அமைப்பு என்று சொன்னால், அதைக் காட்டிலும், மாறுதலை

உண்டுபண்ணும் அராஜகத்தையே நான் விரும்புகிறேன். மக்களுக்குப் பசிதீர உணவில்லை. நிலம் இல்லாதவர்கள் அடிமைகள் போன்று பண்ணையாட்களாக வேலை செய்கிறார்கள். 'ஸ்ரீமான்கள்' ஏழைகளை வஞ்சித்து நிலங்களை சுவீகரித்துக் கொண்டிருப்பது எந்த நியாயத்தைச் சேர்ந்தது? இனி இந்த நிலைமை ஒரு நிமிஷமும் சகித்துக் கொண்டிருக்கக் கூடியதல்ல. நான் ஆரம்பித்திருக்கும் இயக்கம், குழப்பத்தையோ அராஜகத்தையோ உண்டு பண்ணுவதற்காக அல்ல; ஒழுங்கான ஒரு அமைப்பையும் நல்ல ராஜ்யத்தையும் தோற்றுவிக்கவே. இந்த இயக்கத்திற்கு நேர் விரோதமாக, தெலுங்கானாவில் நடந்தது போன்ற, பலாத்கார இயக்கம் தோன்றலாம். நான் வகுத்திருக்கும் வழி நமது தேசீயப் பண்பை ஆதாரமாகக் கொண்டது. அத்தியந்த விநயத்துடனும், அன்புடனும், மக்களுக்கு நிலைமையை எடுத்துச் சொல்லுகிறேன். என்னைத் தங்கள் குடும்பத்தில் சகோதரராகவோ மகனாகவோ ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதைக் காட்டிலும் நான் என்ன சொல்ல முடியும்? அநேகர் உதவாக்கரைக் குழந்தைகளை சுவீகாரம் எடுத்து அதனால் சந்தோஷமடைய நினைக்கிறார்கள். என்னை சுவீகாரமாக எடுத்துக்கொள்ளக் கூடாதா? நான் தேசம் முழுவதும் சுபிட்சம் உண்டாகும் காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறேன். அனைவரின் சக்தியும் சுயமரியாதையும் பரிணமிக்கும் வேலையை மேற்கொண்டிருக்கிறேன். ஏழைகளுக்கு அவர்களுக்குரிய பங்கை மனமுவந்து கொடுங்கள் என்று சொல்லுகிறேன்.

"சோஷலிஸ்டுகள் அதிகபட்சம் முப்பது ஏக்கர் வரை இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கிறார்கள். ஆனால் நான் குறைந்தது ஒவ்வொருவருக்கும் எத்தனை ஏக்கர் இருக்க வேண்டுமென்பதை முதலில் நிர்ணயுங்கள் என்று சொல்லுகிறேன். குடும்பத்திற்கு 5 ஏக்கர் வீதம் கொடுத்து வருகிறேன். இவ்விதம் கொடுப்பதால் 30 ஏ. அதிகபட்சம் இருக்க வழியில்லை என்று சொல்கிறார்கள். அதனால் ஒரு சிறிது வருத்தமும் எனக்கில்லை. தாகம் உள்ளவனுக்குத் தண்ணீர் கேட்க உரிமையுண்டு. அவ்விதமே உழைக்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் நிலம் கேட்க உரிமை உண்டு.

"அதுமாத்திர மல்ல. ஒவ்வொருவரும் தினமும் இரண்டு அல்லது மூன்றுமணி நேரமாவது நிலத்தில் பாடுபடுவது அவசியம் என்பதை வற்புறுத்துகிறேன். இதனால் ஆரோக்கியம் நன்றாக அமைவதுடன், உற்பத்தியும் பெருகும். உற்பத்தி பெருகாமல் நமது தேசப் பிரசினை தீரப்போவதில்லை. அறிவும் உணவும் வெவ்வேறு சக்தி ஊட்டுபவை. அறிவுக்குப் பதில் உணவு உபயோகப்படாது. அவ்விதமே அறிவால் வயிற்றுப் பசி தீராது. ஆகையால் தான் ஏழைகளுக்கு உடனே நிலம் கிடைக்க வேண்டுமென்று என் மனம் துடிக்கிறது. என்னுடைய கருத்துக்களை நீங்களும் உணர்ந்து கொண்டால் உங்களுடைய இதயமும் அவ்விதமே துடிக்கும்.

"சிலர் நான் கம்யூனிஸ்டுகளையும் மாற்றிவிட முடியுமா என்று கேட்கிறார்கள். 'ஆம், முடியும்' என்று சொல்கிறேன்." அவர்களும் தேச சேவை செய்ய விரும்புகிறார்கள். எப்பொழுதும் மக்களிடையில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏழைகளின் துன்ப வாழ்வு வெகு விரைவில் சுகவாழ்வாக மாற வேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் துடிக்கிறார்கள். அவர்களின் வழி தவறாக இருப்பது தான் ஒரு குறை. அவர்களின்மேல் எனக்கு கோபமோ வருத்தமோ இல்லை; ஏனெனில் அவர்கள் அறியாமல் செய்கிறார்கள். நம் நாட்டு உன்னத வழியை அவர்கள் இன்னும் உணர்ந்து கொள்ள வில்லை. பூமிதான இயக்கத்தை விரோதித்து இதுவரை எந்தக் கம்யூனிஸ்டும் சொல்ல வில்லை. இது பழய புராதன வழி; இதனால் ஒன்றும் மாறுதல் வந்துவிடாது என்று கருதுகிறார்கள். ஆனால் இதன் மகத்துவத்தை உணர்ந்தார்களானால் அவர்களும் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்வார்கள். ஆகையால் தான் இந்த அஹிம்சா இயக்கம் ஒவ்வொரு வீட்டிலும் புகுந்து அங்கு மாறுதல் ஏற்பட வேண்டுமென விரும்புகிறேன். நான் வழியைக் காட்டிவிட்டேன். இதன் மூலம் நமது நாடு சர்வோதய லட்சியத்தை அடைந்து விட முடியும். இனி அந்த வழியில் செல்வது உங்களுடைய கடமையாகும்."

உ. பி. காங்கிரஸ் வாதிகளுக்கு

இம்மாதம் 30ந் தேதியிலிருந்து ஏப்ரல் மாதம் 13ந் தேதி வரை இரண்டு வாரங்களும் பூமிதான இயக்க வாரங்களாக அனுசரித்து, கிராமம் கிராமமாகச் சென்று அதன் கருத்துக்களை விளக்கி பூமிதானம் சேர்க்க வேண்டுமென்று மாகாண காங்கிரஸ் கமிட்டி கிராம கமிட்டிகளுக்கும் ஜில்லாக் கமிட்டிகளுக்கும் அறிக்கை விடுத்திருக்கிறது. இதை

வரவேற்று வினோபாஜி, "உத்தரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி பூமிதான இயக்க வேலைக்கு 15 நாட்கள் கொடுத்திருக்கிறது. இது நல்லதே. ஆயினும் 15 தினங்களில் இந்த வேலை முடிந்துவிடாது. இதன் நோக்கம் நிறைவேறும் வரை இந்த இயக்கத்தில் காங்கிரஸ்காரர்கள் பூரணமாக ஐக்கியப்பட்டுவிடுவார்களென்று நம்புகிறேன். இந்த இயக்கத்தை உலகம் உற்றுக் கவனித்துவருவதை காங்கிரஸ்காரர்கள் அறிவார்கள். இதனால் இந்தியாவின் பெருமை ஓங்கி வருகிறது. நாம் அரசியல் சுதந்திரம் அஹிம்சா வழியில் அடைந்ததைப்போன்று பொருளாதார சுதந்திரமும் அஹிம்சா வழியில் அடைந்தால் உலகம் நம்மைக் கௌரவிக்கும். மற்ற தேசங்களில் நமக்கு செல்வாக்கு இருக்கும். சுயராஜ்யத்திற்கு முன் நாம் சக்தியற்றிருந்தோம். நமக்கு வெளி நாடுகளில் மதிப்பில்லாமலிருந்தது. இங்கேயும் உள்நாட்டுப் பிரசினைகளையும் சாந்தி வழியில் தீர்ந்தால், உலகம் நம்மைப் பின்பற்றும் என்பதை உங்களுக்கு நிச்சயமாகச் சொல்கிறேன். உலகம் ஹிம்சை வழியிலிருந்து காப்பாற்றப்படும்.

"மேலும், அன்பு அறிவு இந்த இரண்டு சக்திகளைக் காட்டிலும் வேறு சக்தி உலகில் கிடையாது. அறிவால் நிறைவேறும் காரியம், கொலை வழியாலும் சட்டத்தின் மூலமாகவும் நிறைவேறாது. சிலர் இவ்வழியில் காரியம் விரைவில் பூர்த்தியாகாது என்று சொல்கிறார்கள். ஆனால் இவ்வழியே எக்காலத்தும் சிறந்தது, விரைவில் காரிய சித்தியாகக் கூடியது என்பதை உறுதியாகச் சொல்கிறேன். என்னிடம் வந்தாலே மனம் மாறிவிடுமென்று சிலர் வராமல் ஆத்மத் துரோகம் செய்து கொள்கிறார்கள். ஞானத்தைப் பெற பயந்து ஓடுவது எத்தனை அறியாமை. சிலர் தாராள மனத்துடன் பூமி தானம் கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுப்பது உசிதம், தவிர்க்க முடியாதது, தர்மம் என்று கருதிக் கொடுக்கிறார்கள். ஆனால் கொடுக்காமலிருப்பது அதர்மம். என் வார்த்தைகளைக் கேட்டவர்களின் மனதில் தர்மக்ஷேத்திர குருக்ஷேத்திரப் போராட்டம் ஆரம்பமாகி விடுகிறது. கொடுக்கவேண்டிய சமயத்தில் கொடுக்கத் தவறியவர்கள், உரிய காலத்தில் விதைக்காதவர்கள் போன்று அனைத்தையும் இழந்தவர்களாவர்."

இறுதியில் 25,000 ஏக்கர் பூர்த்தியாக உயிரைக் கொடுத்தும் வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

—மாவ், 27-3-'52

3. கம்யூனிஸ்டுகளின் கேள்விகளுக்குப் பதில்

அஜம்கட் ஜில்லா மாவ் நகரில் பெரிய கூட்டம். மைதானத்தில் இடம் கொள்ளாமல் மரங்களின்பேரிலும், வீடுகளின்பேரிலும் உட்கார்ந்துகொண்டு பலர் வினோபாஜியின் பிரார்த்தனைப் பிரசங்கத்தைக் கேட்டனர். வினோபாஜி பிரார்த்தனை மைதானத்திற்குப் போகும் வழியில் மாவ் நகர முனிசிபாலிடியார் தோட்டிகளுக்காகப் புதிதாகக் கட்டியிருக்கும் காலனியைத் திறந்துவைத்தார். அப்போது புரோகிதர்கள் ஹோம குண்டத்தில் நெய்வார்ப்பதைப் பார்த்து, "ஏன் இவ்விதம் நெய் வீணாகவேண்டும்? ஒரு விளக்கிற்குமுன், 'அக்னி' என்று பொறிக்கப் பட்ட பாத்திரத்தில், மந்திரங்கள் ஓதி நெய் ஆஹுதி செய்யலாம் என்று வேதங்களில் சொல்லப் பட்டிருக்கின்றன. பின்னர் நெய்யை நாம் உபயோகிக்கலாம். இதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களானால், சந்தோஷமாயிருக்கும்" என்றார்.

அஜம்கட், பலியா ஜில்லாக்களில் கம்யூனிஸ்டுகள் பல பலாத்கார இயக்கங்களை நடத்தியிருக்கிறார்கள். இன்று பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர்கள் செங்கொடிகளுடன் வந்து கலந்துகொண்டனர். தங்கள் கேள்விகளைப் பிரார்த்தனை ஆரப்பமாவதற்கு முன் எழுதி அனுப்பியிருந்தார்கள். அதற்கு வினோபாஜி கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்.

கேள்வி:- தங்களுக்கு மோசமான நிலங்களைக் கொடுத்து நிலச்சுவான்தார்கள் ஏமாற்றுகிறார்கள் என்பது தங்களுக்குத் தெரியுமா?

பதில்:- "கம்யூனிஸ்டு சகோதரர்களை என்னுடன் சில தினங்கள் யாத்திரையில் கலந்து கொள்ளும்படி அழைக்கிறேன். எத்தனை பேர்களிடத்தில் மகத்தான மன மாறுதல் நடக்கிறதென்பதைத் தாங்களே கண்ணால் நேரில் பார்த்தால் அவர்கள் சந்தேகம் நீங்கும். ராமபிரான் யாத்திரையில் சபரிக்கும், அகலிகைக்கும் கிடைத்த விமோசனம் எனக்கும் இந்த யாத்திரையில் கிடைத்துவருகிறது. கம்யூனிஸ்டுகள் தமது கடிதத்தில் என்னுடைய வழியால் நிலப் பிரசினை தீர்ந்தால் சந்தோஷப்

படுவதாக எழுதியிருப்பதை வரவேற்கிறேன். தானம் கொடுக்கப்படும் நிலங்கள் உபயோகமற்ற மோசமான நிலங்கள் என்று சந்தேகப் படுகிறார்கள். மோசமான நிலங்களென்று தெரிந்தால் சிறிதும் தயக்கமின்றித் திரும்பக் கொடுத்துவிடுகிறேன். நான் அனைவரையும் நேசிக்கிறேன், நம்புகிறேன். திரும்பக் கொடுத்த பொழுது பதிலாக இதுவரை வேறு நிலம் கொடுக்க யாரும் மறுக்கவில்லை. ஒருவர் ஹைதராபாத்தில் அதிலாபாத் என்ற ஜில்லாவில் 1000 ஏக்கர் கொடுத்திருந்தார். அதில் 500 ஏ. உபயோகமற்றது என்று அவருக்கு எடுத்துக்காட்டியபோது அதற்குப் பதிலாக தன்னுடைய சொந்த விவசாய நிலத்திலிருந்து மிகவும் நல்ல நிலம் கொடுத்தார். தானங்களிலும் சத்வ, ராஜஸ, தாமஸ, மூன்று வித தானங்களும் கிடைக்கின்றனவென்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஐந்து ஏக்கராவது குறைந்தது தங்கள் சொந்த விவசாய நிலத்திலிருந்து கொடுக்கவேண்டுமென்று கேட்கிறேன். ஏதோ நிலம் கிடைக்கிறதென்று நான் திருப்தியடைவதில்லை. பகவானுக்கும் திருப்தியிராது. தரித்திரநாராயணனுக்கு உரிமையைக் கொடுக்கும்படி மக்களுக்கு அறிவுறுத்துகிறேன். இவ்விதம் மக்கள் மனம் மாறினால் கம்யூனிஸ்டுகளும் தங்கள் போக்கைவிட்டு என் வழிக்கு வந்துவிடுவார்கள். இன்னும் அவர்கள் என்னுடையவர்கள்தான். நிலச்சுவான்தார்கள் என்னை ஏமாற்றிவிடுவார்கள் என்று கம்யூனிஸ்டுகள் சந்தேகிப்பதற்கும் காரணம் இருக்கிறது. ஆனால் அவர்கள் என்னை ஏமாற்றமுடியாது. அவர்கள் பூமிதானம் வழங்குவதால் தங்களுக்குத்தான் உதவி செய்துகொள்கிறார்கள் என்பதைத் தெளிவாக தெரிவித்துவிடுகிறேன். தகப்பன் பெண்ணை விவாகம் செய்து கொடுப்பது, மாப்பிள்ளைக்குப் பரோபகாரம் செய்வதாக அல்ல; தன் கடமையை நிறைவேற்றவே. அவ்விதமே பூமிதானம் கொடுத்துத் தங்கள் கடமையை நிறைவேற்றுகிறார்கள். தங்கள் பாவத்தின் பிராயச்சித்தத்திற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என்பதை உணர்ந்து தானம் கொடுக்கும்படிச் சொல்கிறேன். மத்திய பிரதேசத்திலிருந்து டில்லி வந்த தம்பதிகள் தங்களுக்கிருக்கும் 50 ஏ. அனைத்தையும் தானம்கொடுக்க முன் வந்தனர். இது 'சர்வஸ்வதானம்.' மதுராவில் மூன்று சகோதரர்கள், என்னை ஒரு மூத்த சகோதரனாக ஏற்றுக்கொண்டு, தங்களுக்கிருந்த 1900 ஏக்கரில் 500 ஏ. நான்காவது பங்காக எனக்கு அளித்தார்கள். இவ்விதம் பல உதாரணங்கள் கொடுக்கமுடியும். இதய சுத்தியுடன் கம்யூனிஸ்டுகள் என்னுடன் சில தினங்கள் யாத்திரையில் வந்தால், தானங்களில் அத்தியந்த அன்பு கலந்திருப்பதை உணர்வார்கள்."

கேள்வி:- சர்க்கார் அதிகாரிகளும் தங்களுக்காக வேலை செய்கிறார்களே? அதனால் தங்களுக்கு அதிகாரத்தினால் பூமிதானம் கிடைக்கிறதாக ஆகுமல்லவா?

பதில்:- "இப்போது நம் அதிகாரிகள் ஆங்கில அரசாட்சிக் காலத்தில் இருந்த அதிகாரிகள் அல்ல; மக்கள் தேர்ந்தெடுக்கும் சேவகர்களின் சேவகர்கள். இவர்களும் இயக்கத்திற்கு உதவி புரியலாம். கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ்காரர்கள், ச்மாஜவாதிகள் (Socialists), சாமியவாதிகள் (Communists), ஜனசங்க வாதிகள் எல்லோரும் என்னுடையவர்களே. அவர்கள் என்னுடையவர்கள் அல்லவென்று சொன்னால் நான் அவர்களுக்கு 'உங்களுடையவன்' என்று சொல்கிறேன். அதிகாரத்தினால் அல்லது பலாத்காரத்தினால் பூமிதானம் வாங்கப்பட்டது என்று தெரிந்தால் பூமிதானப் பத்திரத்தைக் கிழித்தெறிந்துவிடுவேன். நான் அன்பினால் மக்களுக்கு அறிவித்து மன மாற்றத்தை உண்டுபண்ண ஆத்மீக பலத்தைப் பிரயோகிக்கிறேன். நீங்கள் ஆத்மீக பலமும் கூடாதென்றால், நாம் காற்றில் சஞ்சரிக்கவேண்டியதுதான். ஆத்மீக பலம் யாரையும் பலவந்தப்படுத்துவதல்ல."

கேள்வி:- சாமியவாதம், சாமியயோகம் இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

பதில்:- இது நல்ல கேள்வி. சாமியவாதம் (Communism) ஆத்மீக ஒற்றுமையில், அஹிம்சையில், நம்பிக்கையில்லாதது. வெளியிலிருந்து மேலெழுந்தவாரியாக சமத்துவத்தை பலாத்காரமாகத் திணிக்க முயற்சிக்கிறது. சாமிய யோகம் (சர்வோதய மார்க்கம்) ஆத்மீக அடிப்படையில், விவேக பேதத்தை அனுசரித்து, சமத்துவத்தை நிர்மாணிப்பது. சாமியவாதத்தில் தனி மனித சுதந்திரம் பறிபோகிறது. அதில் தனி மனித வளர்ச்சிக்கு சந்தர்ப்பம் இல்லை; மனிதத் தன்மைக்கு மதிப்பில்லை. இந்த வித்தியாசத்தை நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். இன்று மற்றொரு முக்கியமான வித்தியாசத்தை அறிவிக்கிறேன். சாமியவாதிகள் சனாதனிகள். புரோகிதர்கள் பாடம் ஒப்புவிப்பது போன்று மந்திரம் ஓதுகிறார்கள்; தங்கள் புத்தியால் ஒன்றும்

யோசிப்பதில்லை. தமக்கென்று ஒரு நூலை கிரந்தமாக வைத்துக்கொண்டு திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சாமிய யோகிகளுக்குத் தங்கள் சொந்த ஆத்மானுதியே ஆதாரம். கம்யூனிஸ்டுகள் புரட்சிக்கும் சில சூத்திரங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். சமாதியில் இருப்பவர்களுக்கு கால தேச வர்த்தமான பேதங்களை உணர முடியாதது போன்று, ஒன்றையே எங்கும் எக்காலத்திலும் பிரயோகிக்கிறார்கள். காலம், நிலைமை, பண்பு, நாகரிகம் இவைகளை அனுசரிக்க வேண்டாமா? இன்று மார்க்ஸ் இருந்தால் அவர் தன் கொள்கைகளை நிச்சயம் மாற்றிக் கொண்டிருப்பார். ஏனெனில், அவர் அறிவாற்றலுடையவர். அவர் மாறுதலை விரும்புகிறவர். ஆனால் சிஷ்யர்கள் கண்ணை மூடிக்கொண்டு மாறுதலை ஏற்க மறுக்கிறார்கள். ஆனால் சாமிய யோகிகள் 'ரெடிமேட்' வழிக்காக காத்திருப்பதில்லை. தினம் தினம் ஆத்மானுபூதியால் வளர்ந்து நூதன வழி வகுத்துச் செல்லுவார்கள். மாறுதலுக்குத் தயாராக இருப்பார்கள். சாமிய வாதத்தில் சில நல்ல கருத்துக்கள் இருப்பினும், அதைச் சில கெட்டவையும் சூழ்ந்திருக்கின்றன. அவர்கள் கோஷங்கள் கிளப்புகிறார்கள். அதில் அவர்களுக்குப் பிரியம். கோஷங்களால் காரியம் ஒன்றும் ஆவதில்லை. சனாதனிகளும் அவர்களைப் போன்று தான் மந்திரங்களை ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜெபத்துடன் தபம் இல்லை. அதனால் என்ன பயன்? சாமியவாதிகள் எல்லாப் பழியையும் பணக்காரர்கள் பேல் சுமத்துகிறார்கள். செல்வந்தர்கள் சரிப்படுவதுடன், ஏழைகளும் நல்வழி நடக்கவேண்டும். ஏழைகளின் எல்லாக் கஷ்டங்களுக்கும் செல்வந்தர்கள் தான் காரணம் என்று சொல்வது முற்றிலும் தவறாகும். ஏழைகளிடமும் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு நிலம் கொடுத்து விட்டால் மாத்திரம் எல்லாம் சரியாகி விடாது. அவர்களுக்கும் அறிவும் அற வழியும் வேண்டும். நியாய வழி நடந்து அநியாயத்தை எதிர்த்தார்களானால் பெரிய மாறுதல் ஏற்படும். அது ஸ்திரமான மாறுதலாக சமுதாயத்திற்கு நன்மை பயக்கும்."

காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு விசேஷ வேண்டுகோள்

அஜம்கட் ஜில்லாவில் இன்று கடைசி தினம். ஜில்லா ஊழியர்கள் 25,000 ஏக்கர் சேர்த்து தங்கள் சங்கற்பத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக, பூஜ்ய விநோபாஜி பேசியதாவது:

"சங்கற்பத்துடன் பிரயத்தனமும் இருந்தால் தான் சங்கற்பம் பூர்த்தியாகும். காங்கிரஸ் வாதிகள் இதற்காக முழு முயற்சி செய்து, கிராமங்களிலும் நகரங்களிலும் பூமிதான யக்ஞத்தின் கருத்தை விளக்கி, வெற்றிபெறுவார்கள் என்று நம்புகிறேன்" என்றார். மேலும் அவர், காங்கிரஸ் ஸ்தாபனத்திடம் தனக்குள்ள மதிப்பையும் உரிமையையும் விளக்கி, "நான் இந்த இயக்கத்தில் அனைவரின், மற்றும் எல்லா ஸ்தாபனங்களின் உதவியையும் வேண்டுகிறேன். இது எல்லோருடைய காரியமாகும். காங்கிரஸ் ஸ்தாபனம் இதில் ஈடுபடத்தான் செய்யும். அது மகத்தான புனித ஸ்தாபனம். தியாக சக்தியும் புனிதமும் அதன் சரித்திரத்தில் பொதிந்து கிடக்கின்றன. மக்கள் மறுபடியும் காங்கிரஸ் ஸ்தாபனத்தை அதிகாரத்தில் வைத்திருக்கிறார்கள். ஆகையால் பொறுப்பும் இன்னும் ஐந்து வருஷங்களுக்கு சிறந்த பணியாற்ற வேண்டிய கடமையும் இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் காந்திஜியின் பெயரால் பல காரியங்கள் செய்கிறார்கள். சர்வோதய விசாரம் அவர்களுக்குப் பிரியமானது. ஆகையால் அவர்களிடத்தில் எனக்கு அதிகாரம் இருக்கிறது. அன்பினால் இந்த உரிமை கொண்டாடுகிறேன். முழு மனதுடன் இந்த இயக்கத்தில் ஈடுபடுவார் என்று நம்புகிறேன். இந்த இயக்கம் காந்திஜியின் வழியில் இயங்குவது. இதைத் தான் காந்திஜி விரும்புவார் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஏழைகளுக்கு சேவை செய்ய நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அனைவரும் காங்கிரஸ் ஸ்தாபனம் சக்தி பெற வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் சுத்தியில்லாமல் சக்திபெற முடியாது. சக்தியும் சுத்தியும் வெவ்வேறு காரியங்கள். மக்களின் அபிலாஷைக் கிணங்க காங்கிரஸ் ஸ்தாபனம் அஹிம்சா வழியில் அனைவரையும் தியாக இயக்கத்தின் மூலம் ஒன்று திரட்டக் கூடுமானால், இந்த சுத்தியின் மூலம் சக்தி பெறும். தியாகமும் சேவையும் செய்ய சந்தர்ப்பம் இல்லாதவரை ஸ்தாபனத்தின் சுத்தி நிறைவேறாது. பூமிதான யக்ஞம் சேவையும் தியாகமும் பொதிந்த சிறந்த இயக்கம். நான் அரசியல், பொருளாதார, சமூக, மற்றும் எல்லாத் துறைகளிலும் மாறுதல் செய்யக் கூடிய ஒரு வழியைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அந்த வழி எனக்கு தெலுங்கானாவில் புலப்பட்டது. இந்த இயக்கம் வெற்றியடைவதில்தான் தேசத்தின் சுபிட்சம் இருக்கிறது. புதிய சமுதாயத்தை உருவாக்கும் சக்தி இந்த

இயக்கத்தில் இருக்கிறது. இது என்னுடைய வேலை என்று எண்ணவேண்டாம். ஒவ்வொருவரும் தங்கள் கடமை என்று கருதி இதில் தீவிரமாக ஈடுபடவேண்டும்."

30–3–'52

4. ஒரு அதிகாரியின் ஒப்பற்ற தியாகம்

உத்தரப் பிரதேச கிழக்குப்பகுதி ஜில்லாக்களில் சிறிய சிறிய தானங்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. தினம் சராசரி நூறுபேர் வரை தானம் அளிக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கும் குறைந்து கொடுக்கும் ஏழை விவசாயிகளே அதிகம். பெரிய விவசாயிகளும், நிலச்சுவான்தார்களும் வினோபாஜியைச் சந்தித்துப் பேசவும் அஞ்சி விலகிக் கொண்டிருப்பது (இந்த ஜில்லாக்களில்) வினோதமாக இருக்கிறது. "என்னைச் சந்தித்துப் பேசினால் மனம் மாறிவிடும் என்று ஒரு சிலர் என்னிடம் வராமலேயே ஆத்மத் துரோகம் செய்துகொள்கிறார்கள். ஞானத்தைப் பெற பயந்து ஓடுவது எத்தனை அறியாமை!'' என்று வினோபாஜி ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் அறிவித்தார். ஆயினும் சாதாரண விவசாயிகள் பக்தி சிரத்தையுடன் தங்களுக்குச் சொந்தமான சிறிது நிலத்திலும் பங்கு கொடுக்கின்றனர். வினோபாஜி ஒரு கிராமத்திலாவது நிலம் உள்ளவர்கள், சிறிய பெரிய விவசாயிகள், அனைவரும் ஒருவர் பாக்கியில்லாமல் பூமிதானம் வழங்கி தேசத்திற்கு மாதிரி காண்பிக்கவேண்டும் என்று கேட்டு வருகிறார்.

ஜனவரி 30ந் தேதி காந்திஜியின் பலிதான தினத்தின் ஞாபகார்த்தமாக ஒரு அதிகாரியின் சர்வஸ்வ தானம் இன்று தபால் மூலம் கிடைத்தது. அவர் நைனிடால் ஜில்லாவில் சுகாதார இலாகா இன்ஸ்பெக்டர். தனது கடிதத்தில் தனது நான்குவித தானங்களை கீழ்க்கண்டவிதம் குறிப்பிட்டிருக்கிறார்:-

1) "31ந் தேதி மகா தியாக தினத்தன்று எனக்குச் சொந்தமாக இருக்கும் அனைத்தையும் வினோபாஜியின் பூமிதான யக்ஞத்தில் சமர்ப்பிக்கிறேன். ஐந்து சகோதரர்களில் நான் மூத்தவன் எங்களுக்குள் பாகம் பகிர்ந்தாகிவிட்டது. எனக்குக் கிடைத்திருக்கும் 25 பீகா (ஐந்து ஏக்கர்) முழுவதும் அர்ப்பணிக்கிறேன்.

2) எனக்குச் சொந்தமான வீடு ஒன்றையும் வினோபாஜியின் இஷ்டம் போல் நிர்மாண காரியங்களுக்கோ, அல்லது பூமிதான யக்ஞத்திற்கோ பயன் படுத்திக்கொள்ளும்படிக் கோருகிறேன்.

3) எனது ஜமீன்தாரிக்காக சர்க்காரிலிருந்து கிடைக்கும் நஷ்ட ஈடு முழுவதும் அளிக்கிறேன்.

4) வேலையில்லாது கஷ்டப்படும் பட்டதாரி, சுகாதார வேலையைப் பார்ப்பதற்கு லாயக்குள்ள ஒருவருக்கு என்னுடைய உத்தியோகத்தையும் அவருக்காக விட்டுவிடத் தயாராக இருக்கிறேன்."

சர்வத்தையும் தியாகம் செய்த இந்த அதிகாரியைப் பாராட்டி வினோபாஜி கடிதம் எழுதியுள்ளார்.

மற்றும் ஒரு பெரிய தானம்

இன்றைய தபால்மூலம் மற்றொரு சிறந்த தானம் கிடைத்திருக்கிறது. மத்திய பாரதப் பிரதேசத்தில் பாடீன் என்ற கிராமத்தின் ஜாகீர்தார் ஸ்ரீராஜா கங்காசிங்ஜி 1745 ஏக்கருடைய ஒரு கிராமம் முழுவதும் வினோபாஜியின் யக்ஞத்தில் தானமாக அளித்திருக்கிறார். இவ்விதம் தினமும் தபால் மூலம் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பெரிய சிறிய தானங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

30–3–'52

5. அற்ப தானம் வேண்டாம்

"பலியா ஜில்லா வாலிப வீரர்களின் புரட்சிக் காரியங்களும், அவர்களின் 1942 போராட்ட தீரச் செயல்களும் ஜெயிலிலிருக்கும்போதே எங்கள் காதுகளுக்கு எட்டின. அவற்றில் சில தவறுதல்கள் இருந்தாலும் போற்றுதற்குரிய பல வீரச் செயல்கள் புரிந்திருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் கம்யூனிஸ்டுகளும் நல்ல வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பலியா மக்கள் பல புரட்சி இயக்கங்களில் சம்பந்தப்பட்டவர்கள். ஆகையால் இந்த பூமிதான இயக்கத்தையும் நீங்கள் சுலபமாக அறிந்துகொள்ளக்கூடும்.

இதில் உங்களுடைய பரிபூரண ஒத்துழைப்பும் கிடைக்குமென்று நம்புகிறேன். சிலர் நான் புரட்சியைத் தடுக்கிறேனு அல்லது தோற்று விக்கிறேனு என்று கேட்கிருர்கள். நான் இரண்டும் செய்ய விரும்புகிறேன். பலாத் காரப் புரட்சியைத் தடுத்து, அஹிம்சா புரட்சியைத் தோற்றுவிக்க விரும்புகிறேன். சிலர், புரட்சியை விரும்பினுலும், அஹிம்சா புரட்சியை விரும்புவதில்லே. அவர்களுக்கு இந்த இயக்கம் தீங்கு விளைவிப்பதாகக் கருது கின்றனர். எந்த வித மாறுதலேயும் விரும்பாத சிலர் சமுதாயம் இப்போது இருக்கிறபடியே என்றென்றும் இருக்கவேண்டுமென்று கருது கிருர்கள். பூமிதான யக்ஞத்தால், இன்று வாயில்லாப் பூச்சிகளாக இருக்கும் ஏழைகள் தங்கள் உரிமைகளைக் கேட்க ஆரம்பித்துவிட் டால், குழப்பமும் கஷ்டங்களும் இன்னும் அதிகரிக்கும் என்பது அவர்களுடைய ஆட்சேபம். இது ஆபத்தான காரியம் என்று கருதுகிருர்கள். இவ்விதம் இந்த இரு தரப்பி னரும் பூமிதான இயக்கம் தங்களை பாதிக்கும் என்று பயந்து விரோதிக்கிருர்கள். வலம், இடம் ஆகிய இரண்டு பக்கங்களிலிருந்தும் ஆட்சேபம் வருவது, நாம் நேரான பாதை யில் செல்கிருேம் என்பதற்கு அறிகுறி. இந்த இரண்டு சக்திகளும் ஒன்றுக்கொன்று இன்று மோதிக் கொண்டிருப்பதை நான் தடுக்க விரும்புகிறேன். அதற்காக இந்த சாந்தி வழியை ஆரம்பித்திருக்கிறேன். இதில் எந்தக் கட்சியினராயினும், அனைவரும் உதவி செய்யக்கூடும். சிறிது ஆலோசித்தால் பூமி தான இயக்கத்தால் ஏழைகளின் பிரசினை தீர்க்கப்படுவதை உணர்வார்கள்:'' இவ்வாறு விநோபாஜி, பலியா நகர் வந்து சேர்ந்தவுடன், நகரப் பிரமுகர்களும் ஊழியர்களும் அடங் கிய வரவேற்புக் கூட்டத்தில் பேசினுர்.

இன்று காலை பலியா நகரத்திற்கு வந்து கொண்டிருக்கும் வழியில் சுக்புரா என்ற கிராம மக்கள் 100 ஏக்கர் வரை ஆச்சாரிய விநோபாஜியிடம் பூமிதானம் அளித்தார்கள். அக் கிராமத்தில் பெரிய ஜமீன்தார் வீட்டு முன்னிலையில் கிராம மக்கள் கூடியிருந்தனர். கிராம வாசிகளில் சாதாரண மக்கள் பலர் தானம் அளித்திருந்தார்கள். ஆனுல் ஜமீன்தார் மிகக் குறைந்த தானம் அளித்திருக்கிருர் என்பதை அறிந்து, விநோபாஜி, அவருடைய தானப் பத்திரத்தை திருப்பிக் கொடுத்துவிடும் படி ஆக்ஞாபித்து, மேலும், "ஊழியர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பெரிய ஜமீன்தார்கள் சிறிய தானங்கள் கொடுத்தால் வாங்கவேண்டாம். அவ்வித தானங்கள் வாங்கினுல் நான் தானப் பத்திரங் களைக் கிழித்து எறிந்துவிடுவேன். நான் பிச்சை வாங்குவதற்காக யாத்திரை செய்யவில்லை. தரித்திர நாராயணனின் உரிமையைக் கேட் கிறேன்'' என்று அறிவித்தார்.

ரத்சண்ட் என்ற கிராமத்தில் 30 ஏக்கர் கிடைத்தது. அங்கு கிராம மக்களின் கூட்டத் தில் விநோபாஜி, "என் இந்த ஜில்லாவில் கம்யூனிஸ்டுகள் இடம் பெற்றிருக்கிருர்கள் என்பது எனக்கு விளங்குகிறது. ஏழைகளைக் கண்ணெடுத்துப் பார்ப்பதற்கும் என்னென்று கேட்பதற்கும் இங்கு ஊழியர்கள் இல்லை. ஆகையால் தான் இது கம்யூனிஸ்டுகளின் க்ஷேத்திரமாகி விட்டது. இங்கு மற்ற ஊழி யர்கள் வேலை செய்திருந்தால் கம்யூனிஸ்டுகள் இடம் பெற்றிருக்கமாட்டார்கள்'' என்ருர்.

— பலியா, 1—4—'52

6. சாமிய வாதமும் சாமிய யோகமும்

பலியா நகரில், ஜில்லா கம்யூனிஸ்டு கட்சி யின் சார்பாக ஆச்சாரிய விநோபாஜிக்கு வரவேற்புப் பத்திரம் அளிக்கப்பட்டது ஒரு விசேஷ சம்பவம். மற்றும் இரண்டு வர வேற்புப் பத்திரங்களும் அளிக்கப்பட்டன. இவைகளுக்குப் பதிலளிக்குமுன், விநோபாஜி, "ஜெயிலில் இருக்கும்பொழுது பல கீர்த்திப் பிரதாபங்கள் நடந்ததாகக் கேள்விப்பட்ட பலி யாவிற்கு இன்று வந்திருப்பது சந்தோஷமா யிருக்கிறது. இங்கு ஆதி காலத்தில் பல தபஸ் விகளும் இருந்ததாகக் கேள்விப்படுகிறேன். வால்மீகியின் வாழ்க்கையும், வாமனுவதார மும் இந்த ஜில்லாவில் நடந்ததாகச் சொல் கிருர்கள். இவ்விதம் பல இடங்கள் பழைய மகத்துவமான சம்பவங்களோடு இணைக்கப் படுவது நம் நாட்டின் பாக்கியமாகும். பலி யாவில் பலிச் சக்கரவர்த்தியின் கதை இணைக் கப்பட்டிருப்பது மிகவும் விசேஷமாகும். நான் வாமனுக, பூமி கேட்டு இங்கு வந்தி ருக்கிறேன். நீங்கள் முன்னேர்களின் புகழில் பெருமிதம் அடைவதோடு நின்றுவிடாமல், உங்களுடைய தியாகத்தாலும் பாரம்பரைப் புகழை நிலைநாட்டுவீர்கள் என்று நம்பு கிறேன்'' என்ருர்.

பின்னர் வரவேற்புகளுக்குப் பதிலளிக்கும்போது, வினோபாஜி: "கம்யூனிஸ்டுகள் வரவேற்புப் பத்திரத்தில் வெளியிட்டிருக்கும் சில கருத்துக்களுக்கு பதில் சொல்லவேண்டியது அவசியமாகிறது. கம்யூனிஸ்டுகளும் பூமிதான யக்ஞம் வெற்றியடைய விரும்புவது எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இந்த மகத்தான புரட்சியால் நிலப் பிரசினை முக்கியத்துவம் பெற்று வருகிறது என்றும், மக்கள் இதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்றும் அறிவித்திருக்கிறார்கள். மேலும், சாந்தி வழியில் நிலப் பிரசினை தீர்ந்தால் தங்களுக்கு சந்தோஷமே என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

"கம்யூனிஸ்டுகள் எப்பொழுதுமே கெட்ட வழியை விரும்புவதில்லை என்பதை நான் அறிவேன். ஏழைகளுக்காக அவர்கள் நெஞ்சம் துடிக்கிறது. இந்த ஆத்திரத்தால் அவர்கள் தவறான வழியில் போனால், அதைத்தான் விரும்புகிறார்கள் என்று சொல்லமுடியாது. வேறு நல்ல வழியின் சக்தி நிரூபிக்கப்பட்டால் அவர்கள் திருப்தி யடைந்துவிடுவார்கள். நம் நல்ல வழியில் அவர்களுக்கு திடீரென்று நம்பிக்கை வராவிட்டாலும் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. நல்ல வழியின் சக்தியை நிரூபித்துக் காட்டவேண்டியது நம் கடமை. நல்வழிகளின் சக்தியை ஸ்தாபிக்கவும் முயற்சி செய்யாமல், நல்லெண்ணத்தையும் தூண்டாமல்,நாம் அசக்தர்களாக இருந்தால், வாழ்க்கையில் நொந்துபோயிருக்கும் மக்கள் எத்தனை நாட்கள் தான் சகித்துக்கொண்டிருப்பார்கள்? அவர்கள் பொறுமையாக இருந்தாலும், அதற்கும் ஒரு எல்லை இருக்கிறதல்லவா? தர்ம வழியின் சக்தியை நிரூபிப்பது அதில் நம்பிக்கை யுடையவர்களின் கடமையாகிறது. நான் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். இதில் அனைவரும், கம்யூனிஸ்டுகளும், உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். எனினும், கம்யூனிஸ்டுகள் 'தனி மனிதனின் மகத்துவத்தால் ஏதோ சில ஏக்கர் நிலம்கிடைக்கும்; ஆனால் பிரசினை தீராது' என்று நம்பினாலுங்கூட அவர்கள் இதில் வேறு எவ்விதம் உதவி செய்யக்கூடும் என்பதை விளக்க விரும்புகிறேன்.

"அவர்கள், தங்கள் வரவேற்புப் பத்திரத்தில், நிலம் இல்லாதவர்களிடம் நிலம் சேராதவரை இந்தப் பிரசினை தீராது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும், ஜமீன்தார்கள் தங்கள் முன்னோர்கள் கொள்ளையடித்துச் சேர்த்ததை பரம்பரையாக அனுபவித்து வருகிறார்கள் என்றும் அறிவிக்கிறார்கள். இதில் சிறிது உண்மையிருந்தாலும், நிலம் முழுதும் அநியாய வழியில்தான் சேர்த்தார்கள் என்று சொல்லமுடியாது. உண்மை விவரங்கள் தெரியாதிருக்கும்போது, முன்னோர்பேரில் பழி சுமத்துவது நியாயமல்ல. ஏழைகள் தங்கள் புண்ணியத்தால் நிலங்களை இழந்தார்கள் என்று நான் சொல்ல முன்வரவில்லை. தங்கள் பாவ காரியங்களின் காரணமாகவும் இழந்திருக்கிறார்கள்; குடி, சூதாட்டம், வீண் செலவுகள், கோர்ட்டு — கேசுகள் இந்த தோஷங்களாலும் அவர்கள் நாசமாகியிருக்கிறார்கள். நிலத்தைச் சேர்த்தவர்களும், அவ்விதமே, பாவ வழிகளில் என்று அல்ல, அரும்பாடு பட்டும் சேர்த்திருக்கக்கூடும். நான் இன்னும் ஒருபடி முன்செல்ல விரும்புகிறேன். அவர்கள் எல்லா நிலங்களையும் நல்ல வழிகளிலும் பராக்கிரமத்தாலும் பெற்றார்கள் என்றே வைத்துக்கொள்வோம். ஆயினும், நிலம் அனைத்தும் ஒரு சிலரிடத்திலும், மற்றவர் நிலம் இல்லாமலும் இருப்பதென்பது இனி, வருங்காலத்தில், சகித்துக் கொண்டிருக்கக் கூடியதல்ல. ஜனத்தொகை அதிகரித்து சராசரி நிலப் பரிமாணம் குறைந்துகொண்டு வர, கைத்தொழில்களும் ஒவ்வொன்றாக அழிந்துவிட்ட பிறகு, நிலத்தில் பாடுபடக்கூடியவர் நிலம் பெற விரும்பினால் அவர்களுக்கு அது கிடைக்கவேண்டியது அவசியம். நான் நிலச்சுவான்தார்களிடமிருந்து பூமிதானம் வாங்கும்போது, 'அவர்கள் கொடுப்பது அவர்களுடையதல்ல,பரமேசுவரனுடையது' என்று அறிவுறுத்துகிறேன். நீங்கள் கம்யூனிஸ்டுகளை நாஸ்திகர்களென்று சொல்கிறீர்கள். ஆனால் 'ஈசுவர நம்பிக்கை யுடையவர்கள் கடவுளின் சிருஷ்டியைத் தனதென்று சுவீகரித்து தங்கள் அதிகாரத்தில் வைத்துக்கொள்வது எவ்விதம் ஆஸ்திகமாகும்?' என்று அவர்களைக் கேட்கிறேன். சிலர் தங்களை பூமிபதி என்று கருதுகிறார்கள். பூமிபதி யார்? நாம் தினந்தோறும் பிரார்த்தனையில் 'விஷ்ணு பத்னி, நமஸ்துப்யம்' என்று பாடுகிறோம். இந்த பிருத்வி மாதாவின் சுவாமி பகவான். நாம் அவனது புத்திரர்கள். மனிதன் தன்னை பூமிபதி என்று சொல்வது அவச்சொல்லாகும். அனைவருக்கும் பூமியில் உரிமை இருப்பது தான் நியாயமாகும். தன் உயிர் வாழ்வதற்கும் பூமியே ஆதாரம். இறந்த பிறகும் சிறிது நிலம் வேண்டியிருக்கிறது. உழைக்க விரும்புகிறவர்களுக்கு நிலம் கொடுப்பது நிலச்சுவான்தார்களின்

கடமையாகிறது. இவ்விதம் நிலச்சுவான்தார்களுக்கு அறிவிப்பதிலிருந்து, அவர்களின் முன்னோர் பூமியை எந்த வழியில் சேர்த்தார்கள் என்பதைப் பழித்துக்கொண்டிருக்க வேண்டியது அவசியமுமல்ல, புத்திசாலித்தனமு மல்ல. நல்ல காரியத்தை ஆரம்பிக்கும்போது, பிறரைப் பழிக்கும் அபசகுனம் ஏன்? ஆனால் கம்யூனிஸ்டுகள் வர்க்க பேதத்தை உண்டாக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் எந்தப் பிரசினையை எடுத்துக்கொண்டாலும், தங்களால் முடிந்த மட்டும் துவேஷத்தைக் கிளப்பிவிடுவதில் கவனம் செலுத்துகிறார்கள். அது சரியல்ல. பழய சரித்திரங்கள் மறக்கப்படுகின்றன. பொதுவுடைமைவாதிகளும் அபேதவாதிகளும் பழய சரித்திரத்தைப் புரட்டிக் கொண்டிருப்பதில் சமர்த்தராயிருக்கிறார்கள். நடந்ததைத் திரும்பத் திரும்பக்கிளப்பிக்கொண்டு துவேஷத்தை வளர்க்க விரும்புகிறார்கள். சரித்திரத்தை இவ்விதம் பயன்படுத்தக்கூடாது. உண்மையான சரித்திரமும் நமக்குத் தெரியாது. பழய கதையைப் புரட்டுவதை விடுத்து, இன்றைய நிலைமையில் நாம் செய்வது நியாயமா அல்லவா என்பதைத்தான் கவனிக்கவேண்டும். இப்போது என்ன செய்யவேண்டும் என்பதைச் சிந்தித்தால் போதுமானது. நாம் இன்று நல்ல காரியத்தைச் செய்தால், முன்னோர்கள் அநியாய காரியங்கள் செய்திருந்தாலும், நாம் நியாயத்தில் துவேஷம் கொள்ள இடமில்லை. அவ்விதமே முன்னோர்கள் எத்தனை நியாய காரியங்கள் செய்திருந்தாலும், நாம் அநியாயம் செய்தால் அதனால் என்ன பயன்? நாம் இதை உணர்ந்தால், பிறர் மேல் பழி சுமத்துவதை விடுத்து நல்லெண்ணத்தைப் பெருக்குவதன் மூலம், நம் காரியத்திற்கு பிறரின் உதவியைப் பெற முடியும். இக்கருத்துக்களை அனுசரித்து கம்யூனிஸ்டுகள் பூமிதான யக்ஞ இயக்கத்தில் உதவி செய்யக்கூடும். அவர்கள் பழயவற்றைக் கிளப்பி துவேஷத்தை உண்டு பண்ணாதிருந்தார்களானால், அவர்களைப் பற்றியும் மக்களிடையில் நல்லெண்ணம் தோன்றும். கம்யூனிஸ்டுகள் யாருக்கும் கெடுதல் விரும்பவில்லை என்பதை மக்கள் உணர்வார்கள்.

"அவர்கள் தங்களுடைய வரவேற்புப் பத்திரத்தில் நிலம் இல்லாதவர்கள் சங்கமாக ஒன்றுபடாதவரை நிலப்பிரசினை தீராது என்ற மற்றொரு கருத்தும் வெளியிட்டிருக்கிறார்கள். இது சரியே. நான் செய்வதும் ஏழைகளை ஒன்றுபடுத்தவே. கம்யூனிஸ்டு சகோதரர்கள் என்னுடன் சில நாட்கள் வந்தால் அவர்களுக்கு உண்மை விளங்கும். ஏழை மக்கள், நிலம் மாத்திரமல்ல, பேசுவதற்கு வாயும் இல்லாதிருக்கிறார்கள். நான் அவர்களுக்காக சிறந்த முறையில் வாதாடிக்கொண்டிருக்கிறேன். நான் கேட்பது யாசகமல்ல, உரிமை என்பதை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிறேன். ஐந்து பீகா இருப்பவர்களிடமும், அன்பின் அடையாளமாக, ஒரு பீகா, அரை பீகா வாங்குகிறேன். ஆயினும், ஆயிரம் ஏக்கர் உடையவர் நூறு ஏக்கர் கொடுத்தாலும் நான் வாங்குவதில்லை. இவ்விதம் அநேக தானப் பத்திரங்களை நான் திருப்பிக்கொடுத்துவிட்டேன். பெரிய நிலச்சுவான்தார்கள் தரித்திரநாராயணனின் உரிமையென்று சரியான பங்குகொடுத்தால் அந்த தானத்தை வாங்கிக்கொள்கிறேன். ஆக்ராவில் மூன்று சகோதரர்கள், என்னைத் தங்கள் மூத்த சகோதரராக ஏற்றுக்கொண்டு, தங்களுக்கிருந்த 1900 ஏக்கரில், நாலில் ஒரு பங்கிற்கும் சிறிது அதிகமாக, 500 ஏ. அளித்தார்கள். சாத்வீக, ராஜஸ, தாமஸ, மூன்றுவித தானங்களும் கிடைக்கின்றன. ராஜஸ, தாமஸ தானம் என்று தெரிந்தவுடன், கொடுப்பவர்களுக்கு நியாயத்தை எடுத்துச்சொல்கிறேன். ஆனால் குடும்பத்தில் ஒருவனாக ஏற்றுக்கொண்டு தரித்திர நாராயணனின் உரிமையென்று பங்கு கொடுக்காவிட்டால், நான் அந்த தானத்தை நிராகரித்து வருகிறேன். நான் இவ்விதம் செய்வது ஏழைகளை ஒன்றுபடுத்தும் வேலையாகும். ஏழைகளின் உரிமை சரியான முறையில் பிரகடனப் படுத்தப்படும்பொழுது அதனால் அதிக பலன் உண்டு. இதுவரை என்னுடைய கருத்துக்களை யாரும் மறுக்கவில்லை. ஆசையின் காரணமாக இன்று நிலம் கொடுத்திருக்கலாம். அந்த ஆசையிலிருந்து விடுவிப்பதும் நம்முடைய வேலையாகும். ஏனெனில், காற்று தண்ணீரைப் போன்று நிலமும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற கொள்கை பரவும்பொழுது சட்டம் இயற்றுவது சுலபமாகிவிடும்.

"சோஷலிஸ்டுக் கருத்துள்ள நண்பர் ஒருவர் என்னுடைய காரியம் சட்டத்தின் மூலமாக நிறைவேறிவிடாதா என்று கேட்டிருக்கிறார். 'முடியாது' என்று சொல்கிறேன். ஏனெனில், மன மாறுதலால் நிறைவேறும் காரியம் வெளியிலிருந்து திணிப்பதால் நிறைவேறாது. கொள்கைகளை நன்றாகப் பிரசாரம் செய்து சரியான சூழ்நிலை ஏற்படாமல் சட்டம் இயற்றினால், சமூகம் இரண்டு படும். ஒன்றுக்கொன்று மோதுதலால் தேசத்திற்கு

நஷ்டமேற்படும். மக்கள் புத்தி பூர்வமாக மனதில் உணரும்படிச் செய்தால் காரியம் சுலபமாக முடிந்துவிடும். நான் சட்டம் வேண்டாமென்று சொல்லுபவனல்ல. சட்டம் இயற்றுவது அவசியமானால் பூமிதான இயக்கம் அதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். மக்களின் பூரண சம்மதத்திற்குப் பிறகு இறுதிக் கட்டமாக சட்டம் அமையும்; புஸ்தகம் எழுதி முடிந்த பின் இறுதியில் 'முற்றிற்று' என்று எழுதுவது மாதிரி. ஆனால் அத்தியாயங்கள் பூர்த்தி செய்யப்படாமல் வெறும் 'முற்றிற்று' என்று எழுதிவிட்டால் புஸ்தகம் எழுதியதாகாது. என்னுடைய வழியில் சட்டம் இயற்றவேண்டிய அவசியமும் இராது; அவசியமானால் அது கடைசிக் கட்டமாக இருக்கும். பொதுவுடைமைவாதிகள் சட்டம் இயற்றுவதைப் பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் எப்போது அதிகாரத்தைக் கைப்பற்றி தங்கள் சர்க்கார் அமைக்கப் போகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இன்னும் ஐந்து வருஷங்களுக்கு முடியாதல்லவா? இந்த ஐந்து வருஷங்கள் கழித்து, தேர்தலில் வெற்றிபெற்று, தங்கள் ஆட்சியில் சட்டம் இயற்ற நினைத்தாலும், இந்த பூமிதான இயக்கம் அதற்கு உதவியாக இருக்கும். அதற்கிடையே காங்கிரஸ்காரர்கள் சட்டம் இயற்றினால், அவர்களும் இந்த இயக்கத்தால் நன்மையடைவார்கள். அவர்கள் பூமிதான இயக்கத்திற்கு சாதகமாக இருந்து அதன் நோக்கத்தை நிறைவேற்றுவிட்டால் அவர்கள் காலம் முடிந்துவிடும். நான் பல தடவைகளில் சொல்லியிருப்பதைத் திரும்பவும் சொல்கிறேன். சட்டத்தால் நிறைவேறுவதற்கு மகத்துவம் கிடையாது. எந்த பிரசாரமும் நன்றாக மக்கள் உணர்ந்து ஏற்றுக் கொள்ளும்படி செய்தால், அதைச் சட்டமாக இயற்றலாம். வேறு எந்தத் தொழிலும் இல்லாமல் நிலமும் இல்லாதோர் விவசாயம் செய்ய நிலம் விரும்பினால், அவர்களுக்கு அவசியம் நிலம் கிடைக்க வேண்டும். இது ஒரு ஆத்மீகப் புரட்சி. இதை மக்கள் நியாயமான உரிமைதான் என்று ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். இவ்விதம் ஆத்மீக திருஷ்டியில் மாறுதல் செய்யாமல் சட்டம் இயற்றினால், அது நிறைவேறுவது கஷ்டமாக இருப்பதுடன், அதற்கு விரோதமும் கிளம்ப இடமிருக்கிறது.

“பொதுவுடைமைவாதிகள் மற்றொரு நல்ல கேள்வி கேட்டிருக்கிறார்கள்; ‘ஆதி காலத்திலிருந்து நம் நாட்டில் மகான்கள் தோன்றி சமூகத்தைச் சீர்திருத்த முயன்றும் ஏன் சமூகம் இன்னும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறது?’ என்ற கேள்வி. நம் முன்னோர்கள் அக்காலத்தில் செய்ததெல்லாம் நல்லெண்ணத்தை உண்டாக்குவதற்காகவே. காரிய சித்திக்கு இதுவும் ஒரு வழிதான். அவர்கள் சமூகப் பிரசினைகளை எடுத்துக் கையாளவில்லையென்பதனால் அவர்கள் உண்டாக்கிய நல்லெண்ணத்தால் பயனில்லை என்று சொல்லிவிட முடியாது. நமக்காக ஒரு சூழ்நிலையை உண்டுபண்ணினார்கள். இன்று வினோபாவுக்கு பூமிதானம் கிடைத்தால் அது வினோபாவின் சாதனை என்று சொல்லிவிட முடியாது. முன்னோர்கள் ஸ்தாபித்திருந்த நல்லெண்ணங்களால் இப்போது நமக்கு பலன் கிடைத்து வருகிறது. அவர்கள் நமக்காக விட்டுச் சென்றதைக் காட்டிலும் விலைமதிக்கக்கூடிய வேறு என்ன சொத்து இருக்கிறது? காந்திஜியும் ஒரு பிரசினையைக் கையாண்டு, சாந்தி–அன்பு வழியில் வெற்றி பெற்று, உலகிற்கு எடுத்துக் காட்டியதைப்போல் பண்டைப் பெரியோர் செய்யவில்லை. அப்போதிருந்த நிலைமையும் அதற்குக் காரணமாக இருக்கக் கூடும். இதுவரை சரித்திரத்தில் நிலப் கேட்டு வாங்கி அதனால் நிலப் பிரசினை தீர்ந்ததில்லை என்று சொல்கிறார்கள். சரித்திரத்தில் இதுவரை நடக்கவில்லை, ஆகையால்தான் இனிமேல் நடக்கும் என்று சொல்கிறேன். சமூகத்தில் நல்லெண்ணங்களை உருவாக்கும்போது பிற்காலத்தில் தோன்றும் பிரசினைகளைத் தீர்ப்பதற்கு அவை பயன்படும் என்ற எண்ணத்துடனே செய்திருப்பார்கள். மேலும், பின்னால் வருபவர்கள் காரிய வீரர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக, பிரசினைகளைக் கையாளாமல், வெறும் நல்லெண்ணங்களை மாத்திரம் உருவாக்கிச் சென்றிருக்கிறார்கள். சூரியனைப் போன்றும், அக்னியைப் போன்றும், மகாபுருஷர்கள் இருவகைப்படுவார்கள். சிலர் சூரியனைப்போன்று வெகு தொலைவிலிருந்து பிரகாசத்தைக் கொடுக்கிறார்கள். அந்த ஒளி வீட்டில் அரிசி சமைக்கப் பயன்படுவதில்லை. இரண்டாவது வகைப்பட்டவர்கள் வீட்டில் சமையலுக்கு உதவும் அக்னியைப் போன்றவர்கள். ஆனால் சூரியனில்லாமல் அக்னி வெளிப்பட முடியாது. என்னைப்போன்று சமாஜத்தில் பிரத்தியட்ச சேவையில் ஈடுபடுபவர்கள், சூரியனைப் போன்று சமாஜத்திற்கு வெளிச்சம் கொடுக்கும் மகான்களின் ஆதரவில்லாமல் வாழ முடியாது.

"ஜில்லா போர்டார் தங்கள் வரவேற்புப் பத்திரத்தில் நான் சாமியவாதத்திற்குப் பதிலாக சாமிய யோக லட்சியத்தை சமூகத்திற்குமுன் வைத்திருப்பதைக் குறிப்பிட்டிருக்கிருர்கள். இது சரியே. சிந்தனை உலகிற்கு நான் அளித்திருக்கும் பெரிய கருத்து. இரண்டும் எனது வார்த்தைகளல்ல. சாமியவாதம் என்னும் வார்த்தை கீதையில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸத்தின் ஹிந்தி மொழிபெயர்ப்பு சாமியவாதம். இரண்டுக்கும் உள்ள பேதங்களை நான் விளக்கி வருகிறேன். சாமிய வாதம், சாமிய யோகம் இரண்டிலும் 'சாமிய' என்பது இருந்தாலும் சாமிய யோகத்தில் அத்யாத்மீக திருஷ்டியிலிருந்து சமத்துவம் அனுபவிக்கப்படுகிறது; சாமிய வாதத்தில் பிறரின் மேல் துவேஷம், பொருமை இதன் ஆதாரத்தில் சமத்துவம் அமைந்திருக்கிறது. சாமியவாதம் செல்வந்தர்களிடம் பொருமை கொள்ளக் கற்பிக்கிறது. பொருமைப் படும்படி செல்வந்தர்களிடம் என்ன இருக்கிறது? நாசிக்கில் அச்சடிக்கப்படும் ரூபாய் நோட்டுகள் அவர்களிடம் இருக்கின்றன; தங்கம் வெள்ளி என்று சொல்லப்படும் மஞ்சள் வெள்ளைக் கட்டிகள் இருக்கின்றன. அவைகளைச் சாப்பிட முடியுமா, அல்லது குடிக்கத்தான் முடியுமா? சிலர் செல்வந்தர்களிடம் ரிவால்வரைக் காட்டிக் கொள்ளையடிப்பது போல், உற்பத்தியாளர்களிடமிருந்து செல்வந்தர்கள் தங்களிடமிருக்கும் காகித நோட்டு, வெள்ளைத் துண்டுகளினல் ஏமாற்றி சாமான்கள் வாங்கிவிடுகின்றனர். மக்கள் துப்பாக்கிகளுக்கும் அஞ்சாமல் தங்கம் வெள்ளித் துண்டுகளுக்கும் ஆசைப்படாமல் இருந்தால், செல்வந்தர்கள் அவைகளை வைத்துக்கொண்டு என்ன செய்வார்கள்? லட்சுமி உற்பத்தியாளர்களிடந்தானே இருக்கிருள்? பணத்திற்கு ஆசைப்பட்டு, தங்கள் உற்பத்திப் பொருள்களை உழைப்பவர்கள் விற்றுவிடுகிருர்கள். உற்பத்தியாளர்கள் சுயதேவைப் பூர்த்தியாளர்களாகிவிட்டால், அவர்கள்தான் செல்வம் படைத்தவர்கள். தங்கள் பால், நெய், பழத்திற்கு பைசா சிறிதும் ஈடல்ல என்பதை அவர்கள் உணர்ந்த அக்கணமே அவர்கள் தனவான்களாகவும் இப்போதிருக்கும் செல்வந்தர்கள் ஏழைகளாகவும் ஆகிவிடுவார்கள். ஆகையால் செல்வந்தர்களிடம் பொருமைப்படுவதற்கு ஒன்றும் இல்லை. கம்யூனிஸ்டுகள் துவேஷம், பொருமை, பலாத்காரத்தால் காரியம் சாதிக்க விரும்புகிருர்கள். நான் அன்பினல், ஆத்மீக சிந்தனையால் செய்ய விரும்புகிறேன். இதுதான் இரண்டு வழிகளுக்குமிடையே உள்ள வேற்றுமை."

— பலியா, 2–4–'52

7. ஸ்ரீ ராமநவமி தினம்

இன்று ஸ்ரீ ராமநவமி தினம். வினேபாஜி பிரார்த்தனைக் கூட்டத்தில் மிகவும் சுருக்கமாக, ஆனல் ஆழ்ந்த பக்தி பாவத்துடன் பேசினர்.

"ஒவ்வொரு நாளும் சூரியன் உதயமாகிறது. அதன் அஸ்தமனமும் வருகிறது. இது தினசரிச் சம்பவம். வாழ்நாளில் ஒவ்வொரு நாளாகக் கழிந்துகொண்டு போவதை மனிதனுக்கு தினமும் ஞாபகப்படுத்துகிறது. சூரிய பகவான் நமது எல்லாச் செயல்களுக்கும் சாட்சியாக விளங்குவதுடன், நமது வாழ்நாளின் அளவுகோலாகவும் இருக்கிருர். ஆகையால், காலையும் மாலையும் அந்த முக திருஷ்டியில் இதயப் பரிசோதனை செய்வது அவசியமென பெரியோர்கள் நமக்கு அறிவித்திருக்கிருர்கள். இதனல் வாழ்க்கையில் பின்பு பச்சாதாபப்பட வேண்டியிராது. பச்சாதாபப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் நிகழ்ந்தாலும், மறுபடியும் அதே தவறு செய்யாமல் முன் ஜாக்கிரதையா யிருப்பதற்கு நான் 'பூர்வதாப்' என்ற புதுப்பெயர் புனைந்திருக்கிறேன். ஒவ்வொரு நாளும் செய்யும் காரியங்களை நன்ருகக் கவனித்து நியமங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதே 'பூர்வதாப்' என்பது. சீரிய கர்மங்களால் ஒவ்வொரு நாளும் தூயதானல், பின் பச்சாதாபப்படவேண்டிய சந்தர்ப்பம் எங்கேயிருக்கிறது?

"சூரியோதயம் தினசரி நடக்கும் சாதாரண சம்பவமாக இருந்தாலும், இன்று ராம ஜென்ம தினம். இன்று நாம் அனைவரும் ராமமயமாகிவிட வேண்டும். கோடிக் கணக்கான மக்கள் ராம ஜென்ம தினத்தில் ஆனந்தம் அனுபவிக்கும் நாள் இது. தங்களின் சகல குண தோஷங்களையும் சுக துக்கங்களையும் மறந்து, உற்சவத்தில் லயித்து விடுகிருர்கள். ஸ்ரீ ராம ஜென்மம் அயோத்தியில் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனல் நமக்கு ராம ஜென்மம் ஹிந்துஸ்தானத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் நிகழ்கிறது.

(240-ம் பக்கம் பார்க்க)

காந்தியும் மார்க்ஸும் — ஆச்சாரிய வினோபா பாவே

கடுமையான முறையும் சுதந்திரமான சிந்தனையும்

(கர—பங்குனி இதழ் 171-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ ராமாவதாரத்திற்கு வெகு காலத்திற்கு முன்னமேயே வால்மீகி முனிவர் ராமாயணத்தை எழுதி முடித்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அவர் எழுதி வைத்ததை அனுசரித்தே ஸ்ரீ ராமபிரானின் வாழ்க்கை வரலாறு ஒத்திருந்தது. இதனால் ஸ்ரீ ராமன் ஏதேனுமொரு பிரசினையைத் தீர்மானிக்கவேண்டி நேரிட்டால், தன் சொந்தப் பகுத்தறிவை உபயோகிக்கவேண்டிய சிரமம் எடுத்துக்கொள்வதில்லை; வால்மீகி என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அனுசரித்து அதன்படி நடந்து கொள்வார். நிகழப்போகும் சம்பவங்கள் முன் கூட்டியே தீர்மானிக்கப் பட்டுவிட்டபடியால், அவற்றின் பலா பலனைப் பற்றிய அக்கறையும் அவருக்கில்லை. இதுபோலவே தான் கம்யூனிஸ்டுகள் விஷயமும். கார்ல் மார்க்ஸ் வகுத்த விதிப்படி லெனின் செயலாற்றினார். அதைப் போலவே நாமும் மார்க்ஸைப் பின்பற்றி நமது லட்சியத்தை அடையவேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள். மார்க்ஸ் எழுதிவைத்துப் போனதற்கும் லெனினுடைய செயல் திட்டங்களுக்கு மிடையில் ஏதேனும் முரண்பாடு தென்படும்போது உண்மையிலேயே இது ஓர் முரண்பாடல்ல என்று நிரூபிக்கவேண்டி கம்யூனிஸ விற்பன்னர்கள் சிறிது சிந்தனைக்கு வேலை கொடுப்பார்கள். இதுவும் அவர்களுக்குச் சிரமமானதொன்றல்ல. ஏனெனில், ஸ்மிருதியின் பிரமாணம் சுருதியின் விதியை அனுசரித்திருக்க வேண்டுமென்பது ஒரு பிரசித்திபெற்ற வியாக்கியான முறை. பிரமாணம் தெளிவாயிருக்குமாயின் அதற்கேற்றாற்போல் விதியையும் வியாக்கியானம் செய்து சமாதானம் கூறவேண்டியதுதானே! அப்படிச் செய்யும்போது பாதை தெளிவாகி விடும்!

காந்தியக் கொள்கை அப்படியன்று. கம்யூனிஸம் உறுதியானதும் வளைந்து கொடாததுமானதொரு கருங்கல்லைப் போன்றதென்றால், காந்தீயமோ சதா உருமாறிக்கொண்டிருக்கும் உயிர்த் தத்துவமுடைய தொன்றாகும். காந்திஜியினுடைய அபிப்பிராயங்களைக் கூர்ந்து நோக்கினால் அவை எப்பொழுதும் வளர்ச்சி பெற்றுக்கொண்டிருப்பவை என்பது தெரியவரும். அவருடைய முந்திய கூற்றானது பிந்திய தொன்றுக்கு முரணாகப் படுகிறதே என்று காந்திஜியைக் கேட்டால், "அவ்விரண்டினையும் இணைத்துப் பொருந்தச் செய்வதிலே காலத்தை விரயம் செய்யவேண்டாம்; முந்தியதை ஒதுக்கி வைத்துவிட்டு, பிந்தியதை ஏற்று முன்னேக்கிச் செல்லுங்கள்" என்று கூறுவார். பெரும் போராட்டக் காலங்களில் கூட அவரிடம் முன் கூட்டியே ஏற்பட்ட திட்டங்களோ, செயல் முறையோ, கிரமமான ஒழுங்குகளோ இருந்ததில்லை. அவர் கூறுவதுபோல், "ஒரு காலடி தூரம் தெரிந்தாலே எனக்குப் போதும்" என்றிருக்கும்போது ஆண்டவன் அவருக்கு இரண்டடி தூரத்தைக் காட்டவேண்டுமென்பதென்ன? இங்ஙனமிருக்க, அவருடைய பிந்திய கூற்றே சரியானதென்று உறுதியளிக்கவுங்கூட என்ன அதிகாரமிருக்கிறது? "எதையும் அதிகார தோரணையில் கூறவேண்டாம். உங்களுடைய சுய சிந்தனையை உபயோகியுங்கள். நான் உயிரோடிருக்கும் போது வேண்டுமானால் என்னைக் கேட்கலாம் அதற்குப் பின் ஒவ்வொருவரும் சுயமாகச் சிந்தித்து முடிவுசெய்ய உரிமையுண்டு" என்றுதான் அவர் கூறுவார். இதனாலேயே காந்திஜியின் நெருங்கிய சிஷ்யர்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதங்க ளிருக்கின்றன. ஒரு விமர்சகர் என்னிடம் ஒருமுறை, "காந்திஜி கீதையினிடம் பக்தி பூண்டவர். அவருடைய சிஷ்யர்களும் அப்படியே. அவர்கள் ஒவ்வொருவரும் கீதையைப்பற்றிக் கொஞ்சமேனும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான வியாக்கியானம் கொடுத்திருக்கிறார்களே!" என்று கேலியாகக் குறிப்பிட்டார். இவ்வித பரிகாசத்தைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஏனெனில், இது கீதையின் எல்லையற்ற தன்மையையே எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இதன் உண்மை என்னவெனில் வாழ்க்கையின் எந்த ஒரு பிரசினையிலும் — ஏன், சர்வோதயத்திற்கே அடிப்படையான கதர் பிரசினையிலுங்கூட — காந்திஜியின் சிஷ்யர் எல்லோரும் ஒரே விதமான மனப்பான்மையைக் காட்டிய தில்லை. ஒரு சிலர் காந்திஜியை

அணுகி அவருடைய அபிப்பிராயங்களை ஒழுங்கானதொரு முறையில் ஒரு சித்தாந்தமாகத் தொகுத்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவர், "ஒரு விஷயத்தைக் குறித்து முடிவு செய்ய எனக்கு நேரமில்லை. இன்னொன்றைக் குறித்து இன்னும் சோதனை செய்துகொண்டிருக்கிறேன். ஆகவே அவற்றைத் தொகுத்து வைக்கவேண்டிய அவசியமில்லை. அது தானே வளர்ந்து உருவாக விட்டுவிடுங்கள்!" என்று பதிலளித்தார். அவர் கூறியது உண்மை. இன்னொரு காரணத்திற்காகவும் அது சரியென்று படுகிறது. நன்முக எழுதப்பட்டதொரு பிரபந்தங்கூட அதற்கு மாறுபாடான கொள்கைகளுக்குக் கொடுக்கப்படும் பதில் ரூபமாகவே இருக்கக் கூடும். ஒரு தேசத்தின் ராணுவப் பெருக்குத் திட்டமானது பிற தேசங்களின் ராணுவப் பெருக்கத்தைத் தடுப்பதற்குப் பதில் அதை அதிகப் படுத்தக் காரணமாகி மேன்மேலும் பல்வேறு பிரசினைகளைச் சிருஷ்டிக்கிறதே அது போல, சொற்போர் தொடுக்கும் பாண்டித்திய முறையும் கொள்கைகளை விளக்கிக் கூறி அபிப்பிராய பேதங்களைச் சுருக்குவதற்குப் பதிலாக மேலும் குழப்பத்தையே சிருஷ்டிக்கிறது. ஆகவே, எண்ணங்களை அலட்டியும் வெருட்டியும் கடுமையான சட்ட திட்டங்களுக்குள் போட்டுத் திணித்தும் அடக்கியும் வைப்பதைக் காட்டிலும் அவற்றைச் சுதந்திரமாக வேலைசெய்ய விட்டுவிடுவதே மேலாகும். இவ்வாறு செய்வது ஒரு வேளை இணக்கமின்மையையும் ஒற்றுமைக் குறைவையும் உண்டாக்கலாம். புத்தருடைய சிஷ்யர்கள் பிற்காலத்தில் நான்கு விதமான சம்பிரதாய முறைகளோடு பிரிந்து சென்றதைப் போல், காந்திஜியின் சிஷ்யர்களும் பத்து திசைகளாகப் பிரிந்து வெவ்வேறு வழிகளில் செல்லக்கூடும். இப்பிரிவினையை எளிதில் தடுக்க முடியும். காந்திஜி கூறியது போல், ஒவ்வொருவரும் தங்கள் சுய சக்தியையும் சிந்தனையையும் உபயோகித்து காந்திஜியின் பெயரால் அவருக்காகப் பேசும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் இதை நிவர்த்திக்க முடிகிறது.

(தொடரும்)

★ ★ ★

(238-ம் பக்கத் தொடர்ச்சி)

பூமிதான யக்ஞம்

அயோத்தி யென்பது நமது இதயமே. அஹிம்சாமயமான இதயந்தான் அயோத்தி. அங்கு ராம ஜென்மம் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது.

"போன வருஷம், ராம நவமியன்று, ஸ்ரீ ராமபிரானின் ஆசீர்வாதம் பெற்று தெலுங்கானா யாத்திரையை ஆரம்பித்தேன். மிகவும் கடினமான வேலையாக இருந்தும், பொருட்படுத்தாமல் அதை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆண்டவனின் கிருபை தான் என்னே! அதிலிருந்து புதியதொரு சக்தி பெருக்கெடுத்து வருகிறது. இது என் வாழ்நாளில் ராம ஜென்மமாக இருக்கிறது. வேற்றுமைகள் மிகுந்த இந்தக் கலிகாலத்தில், பூமிதான இயக்கத்தில் நம் நாட்டு மக்கள் கலந்துகொண்டிருப்பது அசாத்தியமான சம்பவமாகும். இந்திரியங்களுக்கு அடிமைப் பட்டு மக்களின் திருஷ்டி சுய நலத்திலும் தங்கள் குடும்பத்திற்குள்ளும் அடைபட்டுக் கிடக்கும்போதும், என்னைப்போன்ற ஒருவன் பூமிதானம் கேட்கும்போது மக்கள் கொடுத்துவிடுகிறார்கள் என்றால் இது ஸ்ரீ ராம மகிமையன்றி வேறு என்ன?

"கடந்த ஒரு வருஷம் முழுவதும் என் கண் முன் ராமஜென்மம் ஒவ்வொரு நாளும் நடந்துவருகிறது. பூமிதான யக்ஞத்தில் மக்கள் அவிர்ப்பாகம் அளித்து வருகிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பூமிதானம் கொடுத்திருக்கிறார்கள். ஏழை ஹரிஜனங்களும் தங்களுக்கு இருக்கும் சிறிய நிலத்திலும் சிறிது கொடுத்துத் தியாகம் செய்கிறார்கள். ஆதரவற்ற பெண்களும் பலர் கொடுத்திருக்கிறார்கள். சிலர் தங்கள் அனைத்தையும் அர்ப்பணித்திருக்கிறார்கள். இது ஸ்ரீ ராமபிரான் அருளினாலன்றி வேறு எங்ஙனம் நிறைவேற முடியும்?

"இன்று நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஸ்ரீ ராமன் என்னை இந்த சரீரத்தில் வைத்திருக்கும் வரை நிரந்தர சேவையில் ஈடுபடும் படிச் செய்ய அவரிடம் பிரார்த்தனை செய்கிறேன். என்னுடைய சேவை பகவானுக்கு சமர்ப்பிக்கப்படுவதற்குத் தகுதியுடையதாகுக. அகங்காரத்தின் சாயலும் மனத்தினின்று அகற்றப்படும்போதுதான் அது நிறைவேறும் என்பதும் எனக்குத் தெரியும். ஆகையால் ஸ்ரீ ராமச்சந்திரப் பிரபு என்னை அகங்காரத்திலிருந்து விடுவித்து ஆட்கொள்ளப் பிரார்த்திக்கிறேன். நீங்களும் எனக்காக இதே பிரார்த்தனையில் ஈடுபடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்."

★ ★ ★

— சிப்டாம், 4-4-'52

காசி - சேவாபுரியில் சர்வோதய சம்மேளனம்

ஆச்சாரிய வினோபாஜியின் ஆரம்ப தினப் பிரசங்கம் (13—4—'52)

சர்வோதய சம்மேளனத்தின் ஆரம்ப தினத்தில், மாலை 5 மணிக்கு, ஆச்சாரிய வினோபாஜி பேசியதன் மொழிபெயர்ப்பு; எதிர்பார்த்தபடி சம்மேளனம் சேவாகிராமத்தில் நடைபெறாமல், உத்தரப் பிரதேசத்தில், காசிக்கருகில், சேவாபுரியில் நடைபெற நேர்ந்தது பற்றியும், பண்டித ஜவாஹர்லால்ஜி தன்னை டெல்லிக்கு அழைத்தது பற்றியும் குறிப்பிட்டு விட்டு, அவர் பேசியதாவது:—

திட்டக் கமிஷனுடன் விவாதம்

முதலாவதாக நான் பண்டித ஜவாஹர் லால்ஜியுடனும், திட்டக் கமிஷன் அங்கத்தினர்களுடனும், நடந்த எனது சம்பாஷணையின் சாரத்தைக் கூறுவது அவசியமாகும். திட்டக் கமிஷனுக்கும் எனக்கும் இடையில் ஏதாவது சமாதானமான சம்பாஷணை நடைபெறக்கூடுமானால் நடத்தவேண்டும் என்பது எனது முயற்சியாக இருந்தது. சம்பாஷணையின் சாரத்தைச் சிறிதளவு நான் எனது யாத்திரையின் போது கூறியுமிருக்கிறேன். ஆனால் முழுவதையும் கூற இயலவில்லை. நான் அதிகமாக விவாதித்தேன்; அவர்களும் அனுதாபத்துடன் கேட்டார்கள். விவாதம் நன்றாக நடைபெற்றது. என்னை விவாதத்திற்கு அழைத்ததற்கும் ஒரு காரணம் இருந்தது. திட்டக் கமிஷன் மூலமாக ஸ்ரீ பாட்டீல் வர்தாவுக்கு வந்திருந்தார். அப்போது அவர் திட்டக் கமிஷன் அறிக்கை சம்பந்தமாக என்னிடம் சம்பாஷித்தார். அப்போது அறிக்கையைப் பற்றிய எனது அபிப்பிராயத்தைக் கூறினேன். அந்த அறிக்கையினால் எனக்கு அதிக வருத்தம் ஏற்பட்டது என்றுதான் சொல்லவேண்டும். ஆகையால் நான் தீவிரமாக என் அபிப்பிராயத்தைத் தெரிவித்தேன். அம்மாதிரி நான் அடிக்கடி கூறுவதில்லை.

டில்லியில் கமிஷன் அங்கத்தினர்களுடன் சம்பாஷணை நடந்தபோது பண்டித ஜவாஹர்லால் நேருவும் அதில் கலந்திருந்தார். நான் மறுபடியும் திட்டக் கமிஷன் அறிக்கையைப் பற்றித் தீவிரமான விமர்சனம் செய்தேன். பண்டித ஜவாஹர்லால் நேரு அநேக முறை, "1952-ம் வருஷத்திற்குப் பிறகு நாங்கள் வெளியிலிருந்து உணவுத்தானியம் வரவழைக்க மாட்டோம்" என்று பிரகடனப் படுத்தியிருந்தார். ஆனால் அவர் தனது உறுதிமொழியில் நிலைத்து நிற்க முடியவில்லை. அந்த சமயத்தில் நான் யாத்திரை செய்துகொண்டிருந்தேன். "உண்மையில் நமது சர்க்கார் 1952 வருடத்திற்குப் பிறகு வெளியிலிருந்து உணவுத் தானியம் வரவழைக்க மாட்டார்களா?" என்று ஜனங்கள் என்னிடம் கேட்டுவந்தனர். "ஆம், சர்க்கார் வரவழைக்க மாட்டார்கள்" என்று நான் நம்பிக்கையூட்டி வந்தேன். ஆனால் திட்டக் கமிஷன் அறிக்கை வெளிவந்தபோது, அதில் உணவு சுயதேவைப் பூர்த்தியைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் காலவரையின்றி வருடத்திற்கு முப்பது லட்சம் டன் தானியம் வெளியிலிருந்து வரவழைப்பது என்று குறிப்பிட்டிருந்தது. இவ்வருஷமோ நாற்பது லட்சம் டன் தானியம் வரவழைப்பது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம் தேசத்தின் சங்கற்பம் சிதைந்து கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றியது. இதைப்பற்றி வருத்தமும் ஏற்பட்டது. டில்லியில் இந்த வருத்தத்தை நான் கமிஷன் அங்கத்தினர்களிடம் வெளிப்படுத்தினேன். நான் நம்பிக்கை வைத்திருந்தேன். நம்பிக்கை வைப்பதற்குக் காரணமும் இருந்தது. சர்க்கார் கமிஷனை நியமிக்கிறார்களென்றால், கமிஷனிடத்தில் "நாங்கள் தீர்மானத்தை அமல் நடத்துவற்குரிய திட்டம் வகுப்பதற்கு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" என்று சொல்லிவிட வேண்டும்.

நான் அங்கு தெரிவித்த அபிப்பிராயத்தின் மீது போதுமான விவாதம் மூன்றுநாள் வரை நடைபெற்றது. இதற்கிடையில் அவர்கள் தேர்தல் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். இதற்குப் பிறகு அவர்கள் தங்கள் தீர்மானத்தை எனக்கு அனுப்பினார்கள். 'ஐந்து வருடங்களுக்குப் பிறகு சாதாரண நிலைமையில் வெளியிலிருந்து உணவுத் தானியம் வரவழைக்க மாட்டோம்' என்று சர்க்கார் விரதம் எடுத்துக் கொள்கிறதாக ஸ்ரீ நந்தா அவர்கள் என்னிடம் கூறினார். இதுதான் அதனுடைய சாரமாகும்.

அவர்களின் இந்த முடிவைக்கேட்டு நான் சந்தோஷமடைவது இயற்கையே. உங்களுக்கும் சந்தோஷமாக இருக்குமென்று நம்புகிறேன். டில்லியில் நடந்த சர்ச்சைக்கு மத்தியில் கமிஷன் அங்கத்தினர்களின் நோக்கத்துடன் எவ்வளவு ஒத்துப்போக முடியுமோ அவ்வளவுக்கு முயற்சிக்கவேண்டும் என்பதுதான் எனது எண்ணமாக இருந்தது. ஏனென்றால் அவர்களும் நம்மவர்கள்தானே! அவர்களும் காந்திஜியின் பெயரைச் சொல்கிறார்கள். நம் அனைவருக்கும் பிரியமான பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்களின் தலைவராவார். அவர்பேரில் என் இதயத்தில் தனி அபிமானம் இருக்கிறது என்று நான் கூறவேண்டும். அவரும் எனது கருத்துக்களைப் புரிந்துகொள்வதற்கு முயற்சி செய்தார்.

தேசத்திலுள்ள எல்லா மக்களுக்கும் போதிய வேலைகொடுக்க முடியாத எந்த தேசீயத் திட்டமும் தேசீயத் திட்டமென்று சொல்வதற்குத் தகுதியாக இருக்கமுடியாது என்பது இரண்டாவது விஷயமாகும். குடும்பத்தில் பன்னிரண்டு பேர் இருந்தால் அவர்களில் எட்டுப்பேரைப் பற்றி மட்டும் கவனிப்பதில்லை. தன்னுடைய வீட்டிலுள்ளோர் அனைவருக்கும் உணவு, வேலை முதலியவற்றிற்கு எற்பாடு செய்யாத வீட்டுக்காரர்கள் ஒருவரும் இல்லை. அனைவருக்கும் வேலை கொடுக்கவேண்டிய பொறுப்பு நம்முடையது என்பது தேசீயத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கையாக இருக்க வேண்டும். நம்மால் பொறுப்பை எற்றுக்கொள்ளக் கூடுமானால்தான் அதை தேசீயத் திட்டம் என்று சொல்ல வேண்டும். இம்மாதிரி பொறுப்பை எற்றுக்கொள்ள முடியாமல் சிபாரிசு செய்வதனால் மட்டும் இவ்வேலை நடைபெறாது.

அனைவருக்கும் வேலையும் உணவும்

"அனைவருக்கும் வேலை, அனைவருக்கும் உணவு" இது நமது அடிப்படைக் கொள்கையாக இருக்கவேண்டும். இதற்காக நாம் ஒவ்வொருவருக்கும் சாதனங்கள் கொடுக்க வேண்டும். உற்பத்தியாவதையும் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

ஆனால், அதற்கு விரோதமாக, 'திறமை' என்ற வாதம் சொல்லப்படுகிறது. 'திறமை' எனக்கும் வேண்டும். நான் ஒவ்வொருவருக்கும் வேலையும் உணவும் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறேன். சிலருக்கு வேலையும் உணவும் கொடுத்து, சிலருக்கு வேலையும் உணவும் நம்மால் கொடுக்க முடியவில்லையானால் அது தேசீயத் திட்டமாகாது. கமிஷன் அங்கத்தினர்களில் ஒருவர், "இது தேசீயத் திட்டமல்ல; பட்சபாதமான திட்டம்" என்று என்னிடம் கூறினார். "உங்களுடைய இந்தத் திட்டம் பட்சபாதமானதென்றால், எழைகளுக்கு அனுகூலமாகப் பட்சபாதம் காட்டுங்களேன்" என்று நான் கூறினேன். மேலும், "நாங்கள் அனைவருக்குமாகத் திட்டமிடவில்லை" யென்று கூறவேண்டும். தேசம் முழுவதற்குரிய பொறுப்பை நீங்கள் உணர வேண்டும். இப் பொறுப்பை சமாளிப்பதற்கு, இன்றைய நிலையில், கிராமங்களில் உண்டாகும் மூலப் பொருள்களைக்கொண்டு கிராமத்திற்குத் தேவையான பொருள்களை கிராமத்திலேயே தயாரிப்பதுதான் மிகவும் உத்தமமான முறையாகும். இதைத்தான் கிராம சுயதேவைப் பூர்த்தி என்று சொல்கிறோம். ஆனால் நான் இங்கு வார்த்தைக்காகச் சண்டையிட விரும்பமாட்டேன். அவர்கள் சுயதேவைப் பூர்த்தி என்ற வார்த்தையை எற்றுக்கொள்வதாக இல்லை. சுயதேவைப் பூர்த்தியை அவர்கள் கற்பனைக்குரிய பொருளாகக் கருதுகிறார்கள். மேலும், தாங்கள் கற்பனைக்குரிய பொருளின் பின்னால் செல்ல விரும்பவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். அனைவருக்கும் வேலை கொடுப்பதற்காக கைத்தொழில்களை எற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் வார்த்தையை எற்றுக்கொள்ள விரும்பவில்லையானால், எனக்கு வார்த்தையைப் பற்றி அக்கறை இல்லை. "உங்களால் எதாவது யந்திர சாதனங்களின் மூலம் அனைவருக்கும் வேலை கொடுக்கக் கூடுமானால் எனக்கு அதில் விரோதமில்லை" என்று நான் கூறிவிட்டேன். உங்களால் அம்மாதிரி செய்ய முடியவில்லையானால், நீங்கள் ராட்டையை சாதனமாக எற்றுக்கொள்ள வேண்டும். ராட்டை ஒரு மலிவான சிறந்த சாதனம். ஆனால் வேறு எந்தவிதமான கருவியையும் தேசத்தின் முன் சமர்ப்பிக்காத வரையில் கிராமக் கைத்தொழில்களை உடனே எற்றுக்கொள்வதில் என்ன ஆட்சேபம் இருக்கிறது? இதில் அடிப்படை நோக்கத்தில்தான் வித்தியாசம் இருக்கிறது. "நாங்கள் அனைவருக்கும் வேலை கொடுப்போம்" என்று அவர்கள் சொல்லவில்லை. "போதுமான ஜனங்களுக்கு வேலை கொடுப்போம்" என்று சொல்கிறார்கள். அம்முயற்சியில் கிராமக் கைத்தொழில்கள் தேவையாக இருந்தால் அதை எற்றுக்கொள்வார்கள். அதுவரை எனக்கும் பொறுமை இருக்கிறது. இவ்விதமாக எனக்கும் அவர்களுக்கும் அபிப்பிராய பேதமிருக்கிறது.

ஸர்வோதய நூல் காணிக்கை

காந்திஜிக்குப் பிறகு நான் கூறியதுபோல் 'பொது ஜனங்களுடன் நமக்குத் தொடர்பு ஏற்படக்கூடியதும், அஹிம்சையை ஆராயக் கூடியதுமான ஏதாவது ஒரு முறையைக் கையாள வேண்டும்' என்று நான் யோசித்துக்கொண்டிருந்தேன். இதைப்பற்றி ஆலோசித்த போது மூன்று விஷயங்கள் எனது கவனத்திற்கு வந்தன. காந்திஜியின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருஷமும் மேளா கூட்டுவது என்று நாம் திட்டமிட்டிருக்கிறோம். அப்போது காணிக்கையாகப் போதுமான நூல் சிட்டங்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு மனிதரும் ஒரு சிட்டம் கொடுக்கிறார் என்ற எண்ணம் எனக்கு இதிலிருந்து தோன்றியது. ஆனால் இதற்கு ஒரு அளவு தீர்மானிக்கப் படவில்லை. சிலர் குறைவாகக் கொடுக்கிறார்கள், சிலர் அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் ஒரு சிட்டம் அர்ப்பணம் செய்வது என்ற விதி ஏற்படுத்தினோமானால் ஒவ்வொருவருக்கும் ஒரு வோட் இருப்பதைப்போன்று ஒவ்வொருவரிடமிருந்தும் கிடைக்கக்கூடிய இந்த ஒரு சிட்டம் சர்வோதயத்தை ஏற்றுக்கொள்பவர்களின் வோட்டாகக் கருதப்படும். இதன் உள்ளே மறைந்திருக்கிற சக்தி எனக்குத் தோன்றியது. நாம் மக்களிடம் சென்று அவர்களுக்கு நம் கருத்துக்களை விளக்கினால் காந்திஜியின் ஞாபகார்த்த நிமித்தமாக உழைப்பின் மதிப்பை உயர்த்துவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சிட்டங்கள் கொடுப்பார்கள். இது ஒரு பரந்த வேலைத் திட்டமாகும். நம்முடைய காரியாலயத்தில் சிட்டம் கொடுப்பவர்கள் அனைவரின் பெயரும் இருக்கும். அவர்களுடன் எப்போதும் நமக்குத் தொடர்பு இருக்கும். எந்த இடத்திலிருந்து ஒருவர் மூலம் ஒரு சிட்டம் நூல் கிடைத்திருக்கிறதோ அங்கு, அவரை அணையா விளக்கெனக் கருதி, அவரைப் பற்றி நாம் அதிகம் சிரத்தைகொள்ளவேண்டும். மேலும், அவருடன் சதா தொடர்பு கொள்ள வேண்டும். இம்மாதிரி சமூகம் முழுவதுடன் நமக்குத் தொடர்பு ஏற்படும், இதன் பலன் சிறந்ததாக இருக்கக்கூடும். ஜனங்கள் காங்கிரஸில் சந்தாதாராகச் சேர்வதற்கு நாலணாக் கட்டணம் செலுத்துவதற்குப் பதிலாக ஒரு சிட்டம் நூல் கொடுக்கலாம் என்று காந்திஜி காங்கிரஸிடம் தெரிவித்திருந்தார். ஆனால் அம்முறை நடைபெறவில்லை. மத்தியிலேயே சந்தாத் தொகை நாலணாவிற்குப் பதில் ஒரு ரூபாயாக உயர்த்தப்பட்டது. இப்பொழுது மறுபடியும் நாலணா வாக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி, இவர்கள் கூட்டவும் குறைக்கவுமா யிருக்கிறார்கள் ஆனால் பணத்திற்கு மகத்துவம் கொடுக்கக் கூடாது என்பது அவர்களுக்குத் தோன்றுவதில்லை. பணத்திற்கு மதிப்பைக் கொடுப்பதனால் நாம் என்ன சாதிக்கப் போகிறோம் என்று எனக்குத் தெரியவில்லை. காங்கிரஸை சக்தியுள்ளதாக்க வேண்டும், அதைப் பரிசுத்தப் படுத்த வேண்டுமேன்று கூறுகிறார்கள். ஆனால் பணத்தினால் சக்தியும் ஏற்படாது, பரிசுத்தமும் வராது என்பதை யோசிப்பதில்லை. சர்வ சேவா சங்கத்தவர்கள் காந்திஜியின் ஞாபகார்த்தமாக லட்சக்கணக்கான சிட்டங்கள் வசூல் செய்கிறார்கள் என்றால், அதன் மூலம் உடலுழைப்பு தீக்ஷை கிடைக்கிறது; அவர்களின் மனப்பான்மையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படாது என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது. சென்ற வருஷம் இத் துறையில் சிறிது வேலைநடந்தது; இந்த வருஷமும் நடைபெற்றது. ஆனால் எப்படி நடந்திருக்க வேண்டுமோ அப்படி நடைபெறவில்லை. இதற்குத் தேர்தலே காரணமென்று ஜனங்கள் சொல்கிறார்கள். "தேர்தலின் காரணமாக, எங்காவது தங்கி விடுங்கள்" என்று எனக்கும் தெரிவித்தார்கள். ஆனால் கங்கை இடையில்தங்குவதில்லை என்று நான் எண்ணினேன் சூரியன் தடைப்படுவதில்லை; அப்படியெனில் நான் ஏன் நிற்க வேண்டும்? பரமேசுவரனே என்னைத் தடுக்க விரும்பினாலோ, அல்லது எனது கால் ஒடிந்து உட்கார வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டாலோ, அது வேறு விஷயம்.

பணப் பிடிப்பிலிருந்து முக்தி

இன்று வரை நமது ஸ்தாபனங்கள் பணத்தின் ஆதாரத்தில் நடந்துவந்திருக்கின்றன என்பது, காந்திஜியின் பிரிவுக்குப் பிறகு எனது கவனத்திற்கு எட்டிய இரண்டாவது விஷயமாகும். ஸ்தாபனங்கள் பணத்தின் ஆதாரத்தில் நடத்தப்பட வேண்டும் என்ற காலம் சென்றுவிட்டது. இப்பொழுது புதிய யுகம் வந்திருக்கிறது. இப்பொழுதோ முடிந்த வரை பணப் பிடியிலிருந்து விடுபட்டே ஸ்தாபனங்கள் நடைபெறவேண்டும். 'காந்தி நிதி'யின் விஷயமாக நான் எப்பொழுதும் மௌனமாக இருந்தேன். ஆனால் ஜனங்கள் வெளிப்படையாக ஒரு இடத்தில் கேட்ட பொழுது, "காந்திஜியின் நினைவு மேற்கொண்டு நீடிக்க வேண்டுமானால், அதற்குப்

பணம் சாதகமாக இராமல் பாதகமாகவே இருக்கும்" என்று சொல்லவேண்டியதாயிற்று. என்னுடைய அந்த அபிப்பிராயத்தில் இன்றும் கொஞ்சங்கூட மாறுதல் ஏற்படவில்லை.

குஷ்ட சேவை போன்று பணத்தினுல் நடைபெறக் கூடிய சில வேலைகளும் இருக்கின்றன. காந்திஜியின் சிராத்தத்திற்காகப் பணம் சேர்த்து, அதன் மூலம் ஸ்தாபனங்கள் நடத்தப்படுமானுல் நம்முடைய ஸ்தாபனங்களுக்கு ஒளி வராது. ஆகையால் முடிந்த அளவுக்கு நம்முடைய இந்த ஸ்தாபனங்களைப் பணத்திலிருந்து விடுவிக்க வேண்டும் அப்பொழுதுதான் புதிய உயிர் வரும். கிராமங்கள் யாவும் அப்பொழுது முன்னேற்றமடையும். அதன் பலன் சர்க்காருக்கும் ஏற்படும். அம்மாதிரி கிடைக்கும் அத்தாட்சியில் கவனம் செலுத்தவில்லையானுல் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி நாம் யோசிக்கக் கூடும்; நம்முடைய ஸ்தாபனங்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு லட்சிய கிராமத்தை நிர்மாணிக்கும் வேலையில் தங்களுடைய சக்தி முழுவதையும் ஈடுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

இது சம்பந்தமாக ஸ்ரீ தீரேந்திர மஜும்தார் உங்கள்முன் சமர்ப்பித்த தீர்மானம் மிகவும் சக்தி வாய்ந்தது. அந்தத் தீர்மானத்தை நாம் நமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியும்போதுதான் நாம் ஏதாவது செய்யக்கூடும். இல்லையானுல், நாம் சொல்வதற்கு எந்தவிதமான பயனும் ஏற்படாது.

மக்களும் சீர்திருத்தவாதியும்

இந்திய மக்கள் மிகவும் அனுபவசாலிகள். தம் உரைகல்லில் தேர்ச்சிபெருத ஊழியர்கள் சொல்வதை அவர்கள் மதிப்பதில்லை. ஒரு வகையில் அவர்கள் புராணத்தை நம்பக்கூடியவர்கள். அதில் அவர்களுக்குப் பாதுகாப்பு இருப்பதை நான் பார்க்கிறேன். இல்லையானுல், வருகிற சீர்திருத்தவாதிகளின் வார்த்தைகளை ஜனங்கள் கேட்டுக்கொண்டே சென்ருல் அவர்கள் மூழ்கிவிடுவார்கள். சீர்திருத்தவாதி எவ்வளவு பெரியவராயிருந்தாலுங்கூட ஜனங்கள் அவரைச் சோதனை செய்யாதவரை அந்தச் சீர்திருத்தவாதியின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பூமிதேவி கூந்தாலத்தினுல் ஏற்படும் காயத்தை (அதாவது கூந்தாலங்கொண்டு தோண்டுவதை)ச் சமாளித்துக் கொள்கிருள்; ஆனுல் தன்மேல் விழும் பந்தை மேலே எழும்பும்படிச் செய்கிருள். ஜனங்களும் இந்த பூமிதேவியைப் போன்றவர்களாவர். நாம் மக்களுக்கு முன் ஒவ்வொரு பொருளாக வைத்துக்கொண்டே செல்கிருேம், ஆனுல் அவர்கள் திடீரென்று ஒரேயடியாக அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. இதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். நாம் கதரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிருேம். ஆனுல் அதையும் அவர்கள் ஏற்றுக் கொள்கிறதில்லை. நம்முடைய கருத்துக்களைப் பரிசோதிக்காமல் ஜனங்கள் நம் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதில்லை. ஆகையால் நாம் நம்முடைய வாழ்க்கையில் யந்திரங்களை உபயோகியாமல் இருப்பது அவசியமாகும். நான் தெரிவித்தபடி பணப் பிடியிலிருந்து விடுபடும் முறையினுல் இது நடைபெறக்கூடும்.

பூமிதான யக்ஞத்தில் என் அனுபவம்

மூன்ருவது விஷயம், பூமிதான வேள்வியாகும். இது மிகவும் அடிப்படையான வேலை. ஆனுல், ஒரு சகோதரர் கூறியதைப் போன்று, இந்த வேலைக்கும் ஒரு எல்லையுண்டு. இருந்தபோதிலும், நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை உங்களுக்கு விளக்குகிறேன். மனிதனுடைய இதயத்தில் என்ன மறைந்திருக்கிறது, அவனுடைய சக்தி என்ன என்பது நமக்குத் தெரிவதில்லை. இது வெளிப்படையானது. நான் அந்த சக்திக்கு ஒரு எல்லை கட்டிவிட்டால் எனக்கு ஆத்ம தரிசனம் ஒருபோதும் கிட்டாது என்று சொல்ல வேண்டும். சட்டத்தின் உதவியின்றியே மக்கள் தங்கள் நிலத்தில் ஒரு பாகத்தைக் கொடுக்கக்கூடும் என்பதை நாம் பார்த்தோம். தண்ணீர், காற்று, சூரிய வெளிச்சம் முதலியவைகளை பகவான் மக்களுக்காகக் கொடுத்திருப்பதைப் போன்றே, நிலமும் பகவானுல் கொடுக்கப்பட்டதாகும்; நிலமில்லாதோருக்கு அதில் உரிமை உண்டு; ஆகையால் நிலம் இல்லாமல் இருப்போருக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்று மக்களுக்கு விளக்கிக் கூறினுல் நிலமிருப்பவர்கள் நிலமில்லாதோருக்கு சந்தோஷமாக நிலம் கொடுக்கிருர்கள். இம்மாதிரி இந்தப் புரட்சிகரமான வேலைத் திட்டத்தை மக்கள் ஏற்றுக்கொண்டதை நாம் பார்த்தோம். மேலும், ஆத்மாவில் மறைந்திருக்கும் அபார சக்தியின் தரிசனமும் நமக்குக் கிடைத்தது.

சர்க்கார் என்றைக்காவது ஒரு நாள் இல்லாமற் போகவேண்டுமென்று நாம் கருதினுல் அது 1952 வருஷத்திலேயே என் நிகழ்க்

கூடாது? நான் இந்தக் கருத்தை ஆதரிக்கிறேன். இம்முறையில் நம்பிக்கை வைக்கிறேன். இந்த வேள்வியில் என்னுடைய நிலம் முழுவதையும் கொடுத்துவிடுவேனானால் அந்தக் கருத்து மற்றவர்களுக்கும் இம்மாதிரி உள்ளெழுச்சியை ஏன் கொடுக்காது என்று நமக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். "ஐயா, நாங்கள் மூவர் இருக்கிறோம், தாங்கள் நாலாமவர்" என்று கூறி, தமது 1900 ஏக்கர் நிலத்திலிருந்து ஒரு சகோதரர் எனக்கு 500 ஏக்கர் நிலம் கொடுத்தார் மற்றொருவர் "நாங்கள் இரண்டு சகோதரர் இருக்கிறோம்; தாங்கள் மூன்றாமவர்" என்று கூறி, தன்னுடைய ஆறு ஏக்கர் நிலத்திலிருந்து எனக்கு இரண்டு ஏக்கர் கொடுத்தார். பெரும்பாலும் தினசரி இம்மாதிரி சம்பவங்கள் நடக்கின்றன. பகவான் கேட்பதற்கு என்னைத் தூண்டுகிறாரென்றும், நான் இவ்வளவு செய்யக்கூடும் என்றும் ஒரு மனிதர் எண்ணுகிறார் என்றால், ஒரு மனிதர் செய்யக்கூடிய வேலையை எல்லா மனிதர்களும் ஏன் செய்யக்கூடாது? மனிதர்களிடம் ஆத்மாவின் சுபாவம் வெவ்வேறாக இருக்கிறதா? ஆத்ம சக்திக்கு ஒரு எல்லை இருக்கிறதா என்ன? ஆகையால், எல்லா மனிதர்களிடமும் ஆத்ம சக்தி இருக்கிறது, அதற்கு ஒரு எல்லையும் கிடையாது, ஒரு மனிதர் செய்யக்கூடிய தியாகத்தை அனைவரும் செய்யக்கூடும் என்ற எண்ணத்தின் உதவியால் நான் முன்னேறுவேன். சட்டத்தைப் பற்றி எப்பொழுதும் பேசுகிறார்கள். சட்டத்தின் விஷயத்தை சட்டக்காரர்களிடம் விட்டுவிடுவோம். நாம் நம்முடைய வேலையை இம்முறையிலேயே செய்துகொண்டு போவோம். இம்முறையிலேயே நிலம் முழுவதும் நிலமில்லாதோருக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டு, சட்டத்தின் அவசியமே இல்லாமற்போனாலும் போகக்கூடும். ஆனால் மனிதருடைய சங்கற்ப சக்தி இந்தப் பிரசினையைத் தீர்ப்பதற்கு அவசியமான அளவு உபயோகமில்லாமற்போய் சர்க்காரின் உதவியை நாடித்தான் ஆகவேண்டுமானால், அந்நிலைமையில் நம்முடைய இந்த வேலையானது சட்டம் இயற்றுவதற்கு முழுவதும் உதவியாக இருக்குமென்று நாம் கருதவேண்டும். அதாவது, ஒன்று சட்டத்தின் அவசியமே இல்லாமலிருக்கும், அல்லது இயற்றப்படும் சட்டம் எதிர்ப்பின்றி சுலபமாக நிறைவேறக்கூடும். நான் கேட்பதிலும் ஒரு முறை இருக்கிறது. நான் பணிவுடன் கேட்கிறேன்; அதட்டியோ பயமுறுத்தியோ கேட்க விரும்பவில்லை. "நீங்கள் எனக்கு நிலம் கொடுக்கவில்லையானால் இரண்டு அல்லது நான்கு வருடங்களுக்குள் சட்டபூர்வமாக, பலவந்தமாக, எடுத்துக்கொள்வேன்" என்று நான் ஜனங்களிடம் கூறினால் நான் கேட்கும் முறையை அறியவில்லை என்பதாகும். நான் எனது நம்பிக்கையை விடக்கூடாது. நம்பிக்கை சுவரைப்போன்று நிற்கிறது. அது திரையைப்போன்று தொங்குவதில்லை; நிற்கிறது, அல்லது கிடக்கிறது. எட்டணா நான்கணா ஆவதில்லை. இருக்கிறது, அல்லது இல்லை. இருக்கிறது அல்லது இல்லாததைப்போன்று மனிதன் உயிரோடிருக்கிறான் அல்லது இல்லை. பாதி இறந்தும் பாதி உயிரோடும் இருப்பது இயலாது. இதுதான் பக்தியின் நிலைமையாகும். பக்தியின்றி எந்த வேலையும் நடைபெற இயலாது. பக்தியினால் செயல் உண்டாகிறது; செயலினால் நம்பிக்கை ஏற்படுகிறது; நம்பிக்கை ஏற்படுவதற்கு முன்பாக மனிதன் பக்தியினால் வேலை செய்யக்கூடும். அனுபவம் ஏற்பட்ட பிறகு நம்பிக்கை ஏற்படக்கூடும். ஆனால் ஆரம்பத்திலிருந்தே பக்தி இருக்கவேண்டும். நாம் ஆதமீக சக்தியைக் கொண்டு இப்பிரசினையைத் தீர்க்கவேண்டுமானால், அந்த முறையில் நமக்கு அசையாத நம்பிக்கை இருக்கவேண்டும்.

உலகப் பிரசினையைத் தீர்ப்பது யார்?

"நீங்கள் இந்தப் பிரசினையைத் தீர்க்க முடியுமா?" என்று அடிக்கடி என்னை சிலர் கேட்கிறார்கள். உலகப் பிரசினையை ராமனோ அல்லது கிருஷ்ணனோ தீர்க்கமுடியாது. உலகப் பிரசினையை உலகந்தான் தீர்க்க முடியும். உங்கள் பிரசினையை நான் தீர்க்க முடியும் என்ற அகந்தை எனக்கு இல்லை. ஆகையால், நான் எப்பொழுதும் கவலையற்றிருக்கிறேன்; இரவில் ஆழ்ந்து தூங்குகிறேன். தூக்கம் வருவதில் எனக்கு ஒரு நிமிஷங்கூட தாமதம் ஏற்படுவதில்லை. நாள் முழுதும் வேலைசெய்துகொண்டே இருக்கிறேன். சில சமயங்களில் நாலு ஏக்கர் நிலம் கிடைக்கிறது; சில சமயங்களில் நானூறு ஏக்கர் கிடைக்கிறது; மற்றும் சில சமயங்களில் நாலாயிரம் ஏக்கரும் கிடைக்கிறது. இருந்தபோதிலும், அதைப்பற்றி எனக்கு சந்தோஷமோ வருத்தமோ ஏற்படுவதில்லை. ஜனக மகாராஜரைப்போன்று தூங்குகிறேன். ஆகையால் நான் வேலை செய்யமுடிகிறது.

சத்தியாக்கிரகம் எப்பொழுது அவசியம்?

இரண்டாவது விஷயம் சத்தியாக்கிரகத்தைப் பற்றியது. எனக்கு ஏதாவது

144137

கௌரவம் இருக்கிறது என்றால் அது சத்தியாக்கிரகி என்ற முறையில்தான் இருக்கிறது என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். வேறு யாதொரு கௌரவமும் என்னிடம் இல்லை. சத்தியாக்கிரகம் செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டால் நான் அவசியம் சத்தியாக்கிரகம் செய்வேன். ஒரு அடி முன்னேறுவது போதுமானது என்று காந்திஜி கருதிவந்தார். இதுதான் அவருடைய முறையாகும். அதாவது, அடுத்த அடியைப் பற்றி நமக்குத்தெரியாது என்பதல்ல; ஆனால் அடுத்த அடியைப் பற்றி யோசிக்கும்போது நம்முடைய மனதில் நாம் எடுத்துவைத்த முதலடியின் வெற்றியைப் பற்றி நம்பிக்கையின்மை ஏற்படுகிறது. நான் எப்போதாவது நோயாளிக்கு சேவை செய்தால், 'ஒருக்கால் அவரின் நோய் குணமாகாது, இறந்து விட்டால் என்ன செய்வது? இப்பொழுதிருந்தே விறகைக் கொண்டுவந்து வைத்து விடுவோம்' என்ற எண்ணத்துடன் செய்யமாட்டேன். நோயாளி நமது உபசரணையினாலும், சேவையினாலும் அவசியம் குணமடைந்து விடுவார் என்ற எண்ணத்துடனும், நம்பிக்கையுடனும் செய்வேன். இறந்து போனால் அமைதியுடன் விறகு சேகரிப்பேன். ஜனங்கள் நம் வார்த்தையைக் கேட்க மாட்டார்கள், அவர்கள் நமக்கு நிலம் கொடுக்க மாட்டார்கள் என்பதற்காகத்தானே நாம் அடுத்த அடியைப் பற்றி ஆலோசனைசெய்கிறோம்? இம்மாதிரி கருதுவதனாலேயே எதிரிலுள்ளவர்களின் மீதுள்ள நம்முடைய அவநம்பிக்கை வெளியாகிறது. அப்படியானல் நாம் நம்பிக்கை யுள்ளவர்கள் என்று அழைக்கப்பட மாட்டோம்; கணக்கு எழுதுகிறவர்கள் என்று அழைக்கப்படுவோம். நிலத்தைப் பெறுவதற்கு வேறு ஏதாவது தயாரான உபாயம்இருந்தால் அதன் மூலமும்ஒருக்கால் நிலம் கிடைக்கக்கூடும். ஆனால் அது சரியான செயல்முறை யாகாது; அதனால் வேலை நடைபெறுவதற்குப் பதிலாக, கெட்டு விடுகிறது. இதனால் நமது சங்கற்பத்திற்கு பலவீனம் ஏற்படுகிறது. சங்கற்பத்திற்கு பலவீனம் ஏற்பட்டால் வேலை எப்படி நடைபெறும்? என்னுடைய மனதில் எழுந்த சங்கற்பங்களெல்லாம் பூர்த்தியாகியிருந்தன என்பதை எனது அனுபவத்தைக்கொண்டு சொல்கிறேன். ஆகையால், என்னுள் அமர்ந்திருக்கும் பகவான் அவர்களுள்ளும் இருக்கிறார் என்ற எண்ணத்துடனேயே ஜனங்களிடம் நிலம் கேட்கிறேன். அவர்களுக்கு நம்முடைய கருத்தைப் புரியவைக்கக் கூடும். ஒரு தடவை இரண்டு தடவை அல்ல, அநேகம் தடவைகள் புரியவைக்கக் கூடும். சங்கராச்சாரியரிடத்தில் தனது சித்தாந்தத்தை விளக்குவதைத் தவிர வேறு என்ன ஆயுதம் இருந்தது? ஏதாவது ஒரு பொருளின் மீது நமக்கு முடிவான நம்பிக்கை இருக்கக்கூடுமானால் அது நம்முடைய விளக்க சக்தியைப் பொறுத்தே இருக்கக் கூடும். குற்றம்செய்தவரை மன்னிக்கவேண்டும். மன்னிப்புக்கு எந்த எல்லையும் கிடையாது என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியிருக்கிறார். அதைப் போன்றே புரியவைப்பதற்கும் ஒரு வரையறையோ எல்லையோ இல்லை. ஆகையால், நீங்கள் சத்தியாக்கிரகம் என்று சொல்வது முடிந்த அளவு புரியவைக்கக்கூடிய முறையே யாகும். நிர்பந்திக்கக் கூடிய முறை வந்துவிட்டால் அது சத்தியாக்கிரக மாகாது. குழந்தை எப்போதாவது திருந்திவிடும் என்று தாயார் நம்பிக்கை வைத்திருப்பதைப் போன்று, சத்தியாக்கிரகிகளும் ஜனங்களுக்கு அவசியம் புலப்படும் என்று நம்பவேண்டும். இதனால்தான் சத்தியாக்கிரகத்திற்கும் இடமுண்டு. ஆனால் நாம் சத்தியாக்கிரகத்தைப் புரிந்துகொள்ளவில்லையானால் அந்த சத்தியாக்கிரகம் சத்தியாக்கிரகமாக இராமல் ஹிம்சையாக இருக்கும்.

பணக்காரரிடமிருந்து சிறிய தானம் ஏற்பதா?

"ஆயிரம் அல்லது பத்தாயிரம் ஏக்கர் நிலமுள்ள ஒருவர் குறைவான நிலத்தைக் கொடுத்தால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா, அல்லது வேண்டாமா? அவர்கொடுத்த அந்த தானத்தினால் என்னவாகும்?" என்று இன்று ஒரு சகோதரர் கேட்டார். நம்முடைய இயக்கத்தில் இந்தக் கேள்விக்குப் பெரும்பாலும் தினமும் பதிலளிக்கப்படுகிறது. எனது பிரசங்கத்திலும் செயலிலும் இதற்குப் பதிலளிக்கப்படுகிறது. ஏழைகளையோ பணக்காரர்களையோ நான் அவமதிக்க வேண்டியதில்லை என்று ஜனங்களுக்குச் சொல்கிறேன். ஆதலால் பெரியவர்கள் குறைவான நிலம் கொடுக்கும்போது நான் ஏற்றுக்கொள்வதில்லை. சிறிது எடுத்துக் கூறிய பிறகு ஜனங்கள் சரியான பாகத்தைக் கொடுக்கிறார்கள். தானாக விரும்பி 300 ஏக்கர் நிலமுள்ள ஒருவர் என்னிடம் வந்து ஒரு ஏக்கர் நிலம் கொடுக்கலானார். ஆனால் நான் அதை வாங்க மறுத்து, எனது நோக்கத்தை எடுத்துக்கூறிய பிறகு அந்த சகோதரர் உடனே முப்பது ஏக்கர் நிலம்

கொடுத்தார். காலணுக் கற்கண்டினுல் பகவான் திருப்தியடைகிருரென்ருல் மனிதன் ஒரு அணுவுக்குக் கற்கண்டு வாங்குவதில்லை. அவன் பகவானையும் திருப்திப்படுத்த முயற்சிக்கிருன், பணத்தையும் மீதப்படுத்த விரும்புகிருன். இரண்டிலும் மனிதன் அளவுள்ளவனுக இருக்கிருன். நான் ஏதாவது ஒரு கோயிலுக்கோ அல்லது மடத்திற்காகவோ நிலம் கேட்டிருந்தால் ஒன்றிரண்டு ஏக்கர் நிலத்திலுல் எனது வேலை நடைபெற்றிருக்கும். ஆனல் நானே ஏழைகளின் உரிமை என்ற முறையில் கேட்கிறேன். இன்றுவரை சுமார் பதினுயிரம் ஜனங்கள் தானம் கொடுத்திருக்கிருர்கள். அவற்றில் அநேக தானங்கள் மிகவும் பரிசுத்தமானவை. அவைகளின் நினைவு எனக்கு எப்பொழுதும் இருக்கும்.

"தானம் கொடுப்பவர்களின் மதிப்போ உயர்கிறது; ஆனல் நிலம் பெற்றுக்கொள்பவரின் மதிப்புக் குறைவதில்லையா?" என்று இன்னெரு சகோதரர் கேட்டார் "மதிப்புக் குறைவதில்லை" யென்று நான் சொல்கிறேன். ஏனென்ருல் நான் யாசகம் கேட்பதில்லை, ஏழைகளின் உரிமையைத்தான் கேட்கிறேன். நான் நிலத்திற்குப் பதிலாக அவர்களுக்கு தயாரித்தஉணவு கொடுத்தால் அவசியம் அவர்களை அவமதிப்பதாகும். தண்ணீர் கேட்பதனுல் தாகமாக இருப்பவரின் மதிப்புக் குறைவதில்லை. அதுபோன்று நிலத் தாகமாக இருப்பவர் நிலம் கேட்பதனல் அவரின் மதிப்புக் குறைவதில்லை. நிலம் கேட்பவருக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். ஏனென்ருல் நிலம் பெற்றுக்கொள்வதனல் மட்டும் அதில் விளைச்சல் ஏற்பட்டுவிடாது. விளைச்சல் ஏற்படுவதற்காக அவர் தனது வியர்வைசொட்ட உழைக்க வேண்டும். வருடம் முழுதும் உழைத்த பிறகு தான் அதில் விளைச்சல் ஏற்படும். ஆகையால் நிலம் பெற்றுக்கொள்பவரின் மதிப்புக் குறையாது.

இன்னும் சில ஆட்சேபங்கள் இருக்கின்றன. இம்மாதிரி நிலங்களைக்கேட்டு வாங்குவதால் நிலச்சுவான்தார்களுக்குச் சஞ்சீவி மாத்திரை கொடுத்துக் கொண்டிருக்கிறேன் என்று சில சகோதரர்கள் சொல்கிருர்கள். இந்த ஆட்சேபத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். ஏனென்ருல், ஜமீன்தார்களுக்கோ பணக்காரர்களுக்கோ சஞ்சீவி கிடைக்கிறதென்ருல், அவர்களின் ஜமீன்தாரிமுறையோ பணமோ நிலைக்க முடியாது, அது அழியக் கூடியதே யாகும். எனது சஞ்சீவியினுல் ஏழை ஏழையாக இருப்பதில்லை, பணக்காரர் பணக்காரராக இருப்பதில்லை, இதுதான் அதிலுள்ள விசேஷம். நான் ஜனங்களின் மனதில் நிலப் பசியை ஏற்படுத்தி, அவர்களைக் கலகக்காரர்களாக்குகிறேன் என்பது இரண்டாவது ஆட்சேபம். இந்த ஆட்சேபத்தைநான் ஏற்றுக்கொள்கிறேன். இரண்டு ஆட்சேபங்களையும் நான் அந்தந்த அர்த்தத்தில் ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்ருல், நான் ஒரு புரட்சியைத் தடுத்து மற்ருெரு புரட்சியைக் கொண்டுவர விரும்புகிறேன்; ஹிம்சைப் புரட்சியைத் தடுத்து அஹிம்சைப் புரட்சியைக் கொண்டு வர விரும்புகிறேன்.

சட்டத்தின் சௌகரிய அசௌகரியங்களைப் பற்றிச் சில கேள்விகள் எழுந்துள்ளன. சர்க்கார் சட்டவசதிகள் செய்து தரவில்லையானல் என்ன செய்வது என்ற சந்தேகத்தை ஒரு சகோதரர் எழுப்பியிருக்கிருர். சர்க்கார் ஒவ்வொரு விதமான வசதியையும், உதவியையும் அவசியம் கொடுக்கும் என்று நான் சொல்கிறேன். கொடுப்பது அதனுடைய கடமையாகும். ஆனல் கொடுக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம். அதனல் என்ன வாகும்? நம்முடையது ஒன்றும் கெட்டுப் போகாது. தானம் கொடுத்தவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு நான் சென்று விடுவேன். சந்நியாசிகளினுடையது ஒன்றும் கெட்டுவிடாது. சர்க்கார்தான் பின்னர் ஆலோசிக்க வேண்டியிருக்கும்.

இன்னுமொரு விஷயம். நாம் இங்கு எதற்காகக் கூடுகிருேம்? ஒரு புதிய சமுதாயத்தை அமைக்கும் நோக்கத்துடன் நாம் இங்கு கூடுகிருேம். சித்தத்தை சுத்தப்படுத்த ஏகாந்த சாதனை செய்வது மட்டும் நமது நோக்கமாக இருக்கமுடியாது. ஆச்சாரிய கிருபலானி அவர்கள் இந்த விஷயத்தை நன்ருக விளக்கினுர். ஆராய்ந்து இவ் விஷயத்தை நமக்குக் கூறினுர். எந்த வஸ்து எவ்வளவு பாரத்தைக் கொடுப்பது என்பதைத் தெரிந்துகொள்வதற்குப் பரிசோதனை உபயோகமாகும். இருந்தபோதிலும், பரிசோதிப்பதற்கும் ஒரு எல்லையுண்டு. ஆனல் வஸ்துவின் மூல ரூபம் கூறுபடுத்துவதால் விளங்காது. ஆனல், ஒன்ருகப் பொருத்துவதால்தான் விளங்கும். பரிசோதிப்பதினல் மட்டும் சிலசமயம் வஸ்துவின் உயிரே போய்விடுகிறது. லட்டு விருப்பமாக இருக்கிறது. நாம் லட்டிலுள்ள மாவை மாத்திரமோ, நெய்யை மாத்திரமோ, அல்லது சர்க்கரையை மாத்திரமோ விரும்பவில்லை. சமூகத்தில் மாறுதல் ஏற்படவேண்டுமென்று விரும்புகிருேம்; ஆகையால் தான் இந்த

★ சேவாபுரி சர்வோதய சம்மேளனம் ★

சர்வோதய சமாஜத்தின் நான்காவது வருஷ சம்மேளனம் காசிக்கருகில் சேவா புரியில் 1952 ஏப்ரல் 13, 14, 15-உகளில் நடந்தது. சேவாபுரி சம்பூரண கிராம சேவை நடைபெறும் ஒரு கேந்திரம். இதை ஸ்ரீ காந்தி ஆசிரமம் நடத்திவருகிறது. இதை ஆரம் பித்தவர் ஸ்ரீ தீரேந்திர மஜும்தார் 1949ல் இங்கு நூற்புக் கருவி மகாநாடு (சரஞ்சாம் சம்மேளனம்) நடந்தது. அப்பொழுது சர்க்கா சங்கத் தொண்டர்களும் இதர கதர் ஊழியர் களும் இங்கு நடந்துவரும் பல வேலைகளைப் பார்த்தார்கள். இந்த ஸ்தலத்தைப்பற்றி முன் னமே கதர் மலர் 1949 டிசம்பர் மாத இதழில் எழுதியுள்ளோம்.

முதலில் சம்மேளனத்தை சேவாகிராமத் தில் நடத்துவதாக இருந்தது. ஆனால் பூஜ்ய வினோபாஜி உத்தரப் பிரதேசத்தில் பூமிதான யக்ஞ யாத்திரை நடத்தி வருவதால், சேவா கிராமத்திற்கு அவர் வந்திருக்க இயலாது. இந்த வருஷம் தேசத்தின் கவனமெல்லாம் பூமிதான யக்ஞத்தில் ஆழ்ந்திருந்தது. சம் மேளனத்தில் முக்கிய புருஷர் வினோபாஜியே. ஆகவே அவருக்கு சௌகரியமான இடத் தில், காசிக்கருகில், சம்மேளனம் நடந்தது இயற்கையே.

நான்காவது சம்மேளனம் மகத்துவமா னது; காசிப் புண்ணிய க்ஷேத்திரத்தில் நடந் தது. கும்பமேளாவில் அல்லது தென்னாட்டில் மகாமகத்தில்போல ஜனங்கள் திரள் திரளாக வர ஆரம்பித்துவிட்டார்கள். ஏழைகளுக்கு நிலம் வாங்கிக் கொடுக்கும் வினோபாஜியின் தரிசனத்திற்காக ஆயிரக்கணக்கான கிராம வாசிகள் தினம் முழுவதும் வந்து போனார்கள். காசியும் கங்கையும் அதிக மான சர்வோதய ஊழியர்களை வசீகரித்தன. மேலும், சர்க்கார் முன் வருஷத்திற்போல அனுமதித்த ரயில் கட்டணத்தில் பாதிச் சலுகையினாலும் அதிக ஊழியர்கள் வந்தனர்.

சம்மேளனத்திற்குப் பல பாகங்களிலிருந் தும் வந்த ஊழியர்கள் சுமார் 2300 பேர். இவர்களில் பதிவு செய்துகொண்ட ஊழியர் எவ்வளவு என்று கணக்கிடமுடியவில்லை. பாதிக்குமேல் ரிஜிஸ்டர் ஆனவர்களாக இருக் கலாம். பெரும்பாலோர் உத்தரப் பிரதேசத்தி லிருந்தும், பீஹார் மாகாணத்திலிருந்தும் வந் தவர்கள். தென்னாட்டிலிருந்து மட்டும் வந்த வர்கள், உத்தேசமாக: தமிழ்நாடு 50; கேரளம் 25; ஆந்திரா 25; கர்நாடகம் 25; ஹைதரா பாத் 50.

ரயிலில் கூட்டம் அதிகம். பிரயாணம் மிகக் கஷ்டமாக இருந்தது. அதிலும் வெயிற்காலம். தென்நாட்டினருக்கு இந்த வெய்யில் முதல் அனுபவமாக இருக்கும். இவ்வளவு கஷ்டப் பட்டு, காசிக்கருகில் உபர்வார் என்ற ஸ்டே ஷனில் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக் கொண்டு மத்தியான வெய்யிலில் சேவாபுரி ஸ்தலத்திற்கு நடந்துபோன காட்சி விசே ஷம். சம்மேளன நிர்வாகக் கமிட்டியின ரிடமிருந்து ஜாகை சாப்பாட்டு டிக்கட்டு, ஊழியர் 'பாஸ்' முதலியவற்றை வாங்கு வதற்குள் வெய்யிலில் மணலில் நின்று கொண்டு எப்படியோ சமாளித்தார்கள்.

ஊழியர்கள் தங்குவதற்கு சிறிய கூடா ரங்கள் போடப்பட்டிருந்தன. ஒவ்வொன்றி லும் 4 பேர்தான் இருக்க முடியும். ஆனால் அதில் 16 பேர் வரை இருக்க வேண்டி நேர்ந்தது. இரண்டு நாள் முன்புதான் ஒரு புயல் காற்று வந்து எல்லாக் கூடாரங்களையும் மகாநாட்டுப் பந்தலையும் கீழே வீழ்த்திவிட் டது. ஒரு நாளைக்குள் மீண்டும் இவற்றை யெல்லாம் திரும்பப் போட்டு இவ்வளவு சௌகரியமாவது செய்யமுடிந்தது கடவுள் கிருபையால் தான்.

(முன் பக்கத் தொடர்ச்சி) காசி - சேவாபுரியில் சர்வோதய சம்மேளனம்

வேலையை ஆரம்பித்திருக்கிறோம். ஏழை களுக்கு இதனால் நிவாரணம் கிடைக்குமென் பதற்காக நாம் இந்த வேலையை ஆரம்பித்திருக் கிறோம். நாம் ஆத்ம சுத்தியையும் விரும்பு கிறோம். ஆகையால் இந்த வேலையை ஆரம் பித்திருக்கிறோம். இதனால் ஏற்படக்கூடிய நல்ல பலன்கள் யாவும் ஒருங்கே அடைவதற் காகவே நாங்கள் 'லட்டை'த் தயாரித்திருக் கிறோம்.

சர்வோதய சித்தாந்தங்களை ஏற்று இங்கு வந்திருப்பவர்கள், அவர்கள் செய்ய விரும்பு வதை பூமிதான வேள்வி மூலம் சாதிக்க முடி யும் என்று உணர்வார்களாக. இதுவே என் விருப்பம். ★ ★ ★

சாப்பாட்டிற்கு வெய்யிலில் 'க்யூ'வில் சுமார் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. வெளி ஊர்களிலிருந்து வந்த ஊழியர்களும் மற்றவர்களும் தினம் 2000 முதல் 3000 நபர்கள் வரை சாப்பிட்டார்கள்.

சாப்பாடு, சாதாரண முறையில், ஹோட்டல் சாப்பாடல்ல. ஸ்ரீ தீரேந்திர மஜும்தார் சென்ற மூன்று வருஷகாலமாகப் பிரசாரம் செய்துவந்ததை அவரும் அவர் சகாக்களும் சம்மேளனத்தில் நடைமுறையில் செய்து காண்பித்தார்கள். ஆகாரம் சம்பந்தமாக மில்லில் செய்தவற்றை பகிஷ்கரித்து, கிராமத்தில் மனித உழைப்பால் செய்தவற்றையே உபயோகித்தார்கள். அரிசி கையால் குத்தியது, மில்லில் அல்ல. ரொட்டிக்கு மாவு, மில் மாவு அல்ல; அவ்வளவும் கையால் அரைத்தது. மில் எண்ணை அல்ல; செக்கில் ஆட்டிய எண்ணை. நெய் வனஸ்பதி அல்ல; சுத்தமான பசு நெய். சுத்தமான பசும்பால், பசுவின் மோர். தினமும் 3000 பேருக்குச் சாப்பாடு போட இவைகளைச் சேகரிப்பது சாதாரண காரியமல்ல. சம்மேளனத்தில் வாசித்த சர்வ சேவா சங்கத் தீர்மானத்தை நிர்வாகக் கமிட்டியினர் நடைமுறையில் காட்டிவிட்டார்கள்.

சம்மேளனத்திற்கு வந்தவர்களுக்கு உண்மையில் சௌகரியக் குறைவுதான். முந்திய அளவில், ராவு, அங்கூல், சிவராம்பள்ளி சம்மேளனங்களில் இருந்த அவ்வளவு சௌகரியங்களும் வசதிகளும் இல்லை. ஆனாலும் சேவாபுரி சம்மேளனத்திற்கு வந்து போகிறவர்களுக்கு ஏற்பட்ட உற்சாகமும், மன உறுதியும், சகிப்புத் தன்மையும் அளவற்றது என்பது வெளிப்படையாயிற்று.

இந்த சம்மேளனத்தில் புரட்சிகரமான ஒரு தேசியத் திட்டமும் லட்சியமும் உருவாயிற்று. கஷ்டமான நிலப் பிரசினைக்கு ஒரு சாத்விக வழி தெளிவாயிற்று. சுதந்திரத்திற்குப் பின் திக்குத் தெரியாத காட்டில் நாம் சிக்கியிருந்தோம். அதிலிருந்து மீள வழி புலப்பட்டது. பொருளாதார இருட்டிலிருந்து ஒரு மின்னல்வெட்டு தென்பட்டது. இனி சுயராஜ்யத்தை உருவாக்க மார்க்கம் கிடைத்தது. மக்களிடத்தில் சொல்ல ஒரு அரிய பூமிதான யக்ஞ மந்திரம் கிடைத்தது.

இது மட்டுமல்ல. நிலப் பிரசினையுடன் தொழில் பிரசினையில் முடிவாக தேசியக் கொள்கையும் லட்சியமும் ஒப்புக்கொள்ளப்பட்டன. யந்திரத் தொழிலா, பலருக்கு வேலையா? குவியல் முறை உற்பத்தியா, பரவல் முறை மனித உழைப்பா? உணவு, உடை சம்பந்தமான மூலப்பொருள்களைப் பக்குவப்படுத்தும் தொழில் அவைகளை உற்பத்தி செய்பவனுக்கா, அல்லது யந்திர முதலாளிகளின் உரிமையா? நெல்லைக் குத்தும் வேலை, கோதுமையை மாவாக அரைக்கும் வேலை, எள்ளை எண்ணை யாக்குவது, கரும்பை வெல்லம் சர்க்கரை யாக்குவது, பருத்தியைத் துணியாகச் செய்வது ஆகிய எல்லா வேலைகளும், இந்த மூலப்பொருள்களை உற்பத்தி செய்பவர்களைச் சேர்ந்தவை யாகும். இந்தத் தொழில்களெல்லாம் அவர்களுடைய ஆகார உரிமை. மூலப்பொருள் உற்பத்தி செய்ய பூமியுடன், அந்த மூலப்பொருள்களைப் பக்குவப்படுத்தும் வேலையும் குடியானவருக்குக் கொடுத்தாக வேண்டும். ஒரு மாற்றுத் தொழிலின்றி நிலம் மட்டும் குடியானவர்களைக் காப்பாற்ற முடியாது. இது அடிப்படை உண்மை. இதை மறுக்கமுடியாது.

ஆகையால், இந்த உரிமையைப் பாதுகாக்க, உணவு துணி சம்பந்தமாக ஆலைகளில் தயாரித்தவற்றைப் பகிஷ்கரிப்பது நமது கடமை. அன்னிய ஆடையை முன்பு பகிஷ்கரித்தது போல், இன்று உணவு துணி முதலியவற்றில் ஆலைப் பொருள்களின் பகிஷ்கரிப்பு இயக்கம் தேசம் முழுவதும் தொடங்க வேண்டும்.

பூமிதானமும் பரவல் முறை குடிசைத் தொழிலும் இன்று தேசீய இயக்கமாகி விட்டது. இதுதான் இன்று சர்வோதயத்தின் கோஷம். பொருளாதார சுதந்திரத்திற்கு இதைத் தவிர வேறு வழியில்லை. இதுதான் காந்திஜி காட்டிய அஹிம்சா புரட்சி மார்க்கம். காசி க்ஷேத்திரத்தில், கங்கைக்கரையில், சர்வோதய ஊழியர்கள் புதிய உணர்ச்சியும், ஊக்கமும் பெற்றுத் திரும்பியுள்ளனர். அடுத்த சம்மேளனம் பீஹாரில் கூடும். அதற்குள்ளாக விநோபாஜி காட்டிய பூமிதான யக்ஞ இயக்கம் தேசம் முழுவதும் பரவிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

சேவாபுரி சம்மேளனம் பழய காலத்தில் 1920–24-ல் நடந்த காங்கிரஸ் சபைபோல விளங்கிற்று. ஒரே வருஷத்தில் சுயராஜ்யம் அடைய காந்திஜி போட்ட திட்டங்கள் எல்லாம் சேவாபுரியில் நினைவுக்குவந்தன. சேவாபுரியில் நடந்த சர்வோதய ஊழியர்களின் சம்மேளனம் இந்திய சரித்திரத்தில் முக்கியமான கட்டம் என்று சொல்வது மிகையல்ல.

சர்வோதய சம்மேளனத்தை எங்கு நடத்துவது என்பதை முடிவுசெய்ய மிகத் தாமதம் ஆயிற்று. உத்தரப் பிரதேசத்தில் இதை நடத்தக் கூடியவர்கள் ஸ்ரீ காந்தி ஆசிரமத்தின் ஊழியர்கள். முன்னமே இவர்கள் பூமிதான யக்ஞத்தில் ஈடுபட்டு வந்ததால் சம்மேளனத்திற்கு ஏற்பாடு செய்ய அவகாசமில்லை. இருந்தாலும் ஸ்ரீ தீரேந்திர மஜும்தார் பொறுப்பேற்றுக் கொண்டு எல்லா ஏற்பாடுகளையும் வேகமாகச் செய்து முடித்தனர். உத்தரப் பிரதேச சர்க்கார் ரூ. 10,000 நிதி கொடுத்தனர். அத்துடன், தண்ணீர், மின்சாரம், சுகாதாரம் முதலிய ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தனர். சேவாபுரி ஆசிரமத்தைச் சுற்றிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் தங்கள் நிதியிலிருந்து கொஞ்சம் உதவி செய்தன.

கிராமவாசிகள் பலர் அரிசி, கோதுமை முதலிய தானியங்களும், காய்கறிகளும் இலவசமாகக் கொடுத்தனர். சிலர் கோதுமை மாவு அரைத்துக் கொடுத்தார்கள். பலரும் பலவிதத்தில் தங்கள் உழைப்பையும் உதவியையும் கொடுத்தனர். முந்திய சம்மேளனங்களில், ஒவ்வொன்றிலும் வரவுக்கு மேல் சுமார் 50,000 ரூ. அதிகம் செலவாயிற்று. ஆனால் இந்த சம்மேளனத்தில் செலவுக்கு மேல் சுமார் 10,000 ரூ. மீதம் வந்திருக்கிறது என்று தெரிகிறது.

சம்மேளனத்திற்கு, ஏப்ரல் 12-வயே நூற்றுக்கணக்கானவர்கள் வந்துவிட்டனர். அன்று மத்தியானம் விநோபாஜியும் அவர் கோஷ்டியாரும் வந்து சேர்ந்தனர். மாலை பிரார்த்தனையில் ஏராளமான கிராமவாசிகள் கூடினர். கிராமவாசிகளின் கஷ்டங்களை தீர்க்கவே சர்வோதய ஊழியர்கள் இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து வந்திருக்கின்றனர் என்று பிரார்த்தனைக் கூட்டத்தில் விநோபாஜி அவர்களுக்குச் சொன்னார்.

ஏப்ரல் 13-வ காலை நூற்பு யக்ஞமும் பிரார்த்தனையும் நடந்தது. பின்னர் ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு அவர்களின் தலைமையில் சம்மேளனம் ஆரம்பமாயிற்று. சுமார் இருபது ஊழியர்கள் பல பிரசினைகளைப்பற்றி தங்கள் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் வெளியிட்டனர்.

சுமார் 11 மணிக்கு ஸ்ரீ ஜாஜுஜி அவர்கள் கண்காட்சித் திறப்பு விழாப் பிரசங்கம் செய்தார். உத்தரப் பிரதேச சர்க்கார் ஓர் கண்காட்சியை நடத்தினார்கள். அதில் எல்லாக் குடிசைத் தொழில்களும் கதர் வேலையும் செய்து காண்பிக்கப்பட்டன. குடிசைத் தொழிலை எவ்வளவு தூரம் சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பது சந்தேகம். பெரிய ஆலைத்தொழில்களுடன் குடிசைத்தொழிலும் சுலபமாக வளரக்கூடியதல்ல. முதலில் சொன்னது இரண்டாவதை இப்பொழுது அழித்துக் கொண்டு வருகிறது. ஆலைத் தொழில்களுக்கு ஒரு வரம்பும் எல்லையும் நிச்சயம் செய்து கொண்ட பின்னர் குடிசைத் தொழிலை சர்க்கார் வளர்த்தால் மக்களுக்கு பயன் ஏற்படும் என்று ஸ்ரீ ஜாஜுஜி சொன்னார்.

பூஜ்ய விநோபாஜியின் பேச்சும் ஸ்ரீ கிருபளானியின் பேச்சும் காலையில் நடைபெறுவதாக இருந்து, மாலையில்தான் நடந்தன. காசியிலிருந்து ஏராளமான மாணவர்களும் மற்றவர்களும் காலையிலேயே கூடிவிட்டனர். மாலை 4-மணிக்கு கூடிய சம்மேளனத்தில், வரவேற்புக் கமிட்டியின் அக்கிராசனர் ஸ்ரீ பாபா ராகவதாஸ் சர்வோதய ஊழியர்களை வரவேற்றுப் பேசினார். பின்னர் ஆச்சாரிய கிருபளானி சம்மேளனத்தை ஆரம்பித்து வைத்துப் பேசினார். அவருடைய பேச்சு சிந்தனையைத் தூண்டக்கூடியதாயிருந்தது. அதன் சாரம் அடுத்த இதழில் கொடுக்கப்படும். பின்னர் சர்வ சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் சென்ற ஒரு வருஷ காலமாக நடந்த வேலையைப் பற்றி விளக்கினார். ஆச்சாரிய விநோபாஜியின் பிரசங்கம் ஒரு மணி நேரத்திற்கு அதிகமாய் நடந்தது. அதன் மொழி பெயர்ப்பை இந்த இதழில் காணலாம்.

ஏப்ரல் 14-வ காலை பண்டிட் சுந்தர்லால், பாபு புருஷோத்தமதாஸ் தண்டன், மத்திய சர்க்கார் திட்டக் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீ ஆர். கே. பாட்டீல், முதலியவர்கள் முக்கியமாக பூமிதான யக்ஞத்தைப்பற்றிப் பேசினர். சர்வ சேவா சங்கம் பூமிதான யக்ஞத்தைப் பற்றியும், பரவல் முறையில் சுய தேவைப் பூர்த்திக்காகக் குடிசைத் தொழிலின் அவசியம், உணவு ஆடை சம்பந்தமாக ஆலைப் பொருள்களின் பகிஷ்காரம் முதலியவைகளைப் பற்றியும் செய்த தீர்மானத்தை நிறைவேற்றிற்று. இந்தத் தீர்மானம் ஆச்சாரிய விநோபாஜி தயாரித்தது. 14-வ மாலை இந்தத் தீர்மானத்தை ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் சம்மேளனத்தில் படித்து விளக்கினர்.

ஏப்ரல் 15-வ காலை மீண்டும் பல ஊழியர்கள் பேச சந்தர்ப்பம் பெற்றனர். முன் சம்மேளனத்தைவிட சேவாபுரியில் அதிகமான

ஸ்திரீகள் வந்திருந்தனர். 15-உ மத்தியானம் ஒருவர்க்கொருவர் பரிச்சயம் செய்துகொள்ள எண்ணி, ஸ்திரீகளின் கூட்டம் ஒன்று நடந்தது. இதற்குப் பின் சம்மேளனம் கூடிற்று. தொழிலாளிகளுடன் நிர்மாண ஊழியர்கள் கலந்துகொண்டு மாதம் 2, 3 தினங்களாவது சரீர உழைப்புச் செய்வதுடன், மற்ற உழைப்பாளிகளைப்போல் கூலி பெற்று அதைத் தங்கள் சங்கத்தில் வரவு வைக்க வேண்டுமென்று முன்னமே சர்க்கா சங்கம் ஒரு தீர்மானம் செய்தது, கதர் மலர் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். இதன் அடிப்படைக் கருத்தை விளக்கி ஸ்ரீ ஜாஜுஜி பேசினர். ஸ்ரீமதி ராமேஸ்வரி நேரு தன் அபிப்பிராயத்தைச் சொன்னர். சர்க்கா சங்கத் தீர்மானத்தின் நோக்கத்தை சர்வோதய ஊழியர்கள் அறிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் சம்மேளனத்தில் ஏற்பட்டது. ஊழியர்கள் கூடுமானவரை இதைப் பின்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

உத்தரப் பிரதேச மந்திரிகளில் பலர் வந்தனர். மத்திய சர்க்காரில் ஸ்ரீமான்கள் குல்ஜாரிலால் நந்தா, மஹதாப், ஆர். கே. பாட்டீல் முதலியவர்களும், ஸ்ரீமான்கள் லால்பஹதூர் சாஸ்திரி, தண்டன்ஜி, காகா கலேல்கர், பண்டிட் சுந்தர்லால் முதலிய பல தலைவர்களும், மந்திரிகளும் விஜயம் செய்தது இந்த மகாநாட்டின் விசேஷம்.

விநோபாஜி தினமும் பிரார்த்தனைக்குப் பின் பேசினர். முதல் நாளும் மறு நாளும் சம்மேளனம் நடந்த சமயத்தில் பேசினர். அவருடைய பேச்சு முழுவதும் உள்ளத்திலிருந்து தங்கு தடையில்லாமல் தாரை தாரையாக அமிர்த மயமாக வந்துகொண்டிருந்தது. பகலில் நடந்த சர்ச்சை, பிரசினைகள் எல்லாவற்றிற்கும் அவருடைய பிரார்த்தனைப் பிரசங்கத்தில் தகுந்த பதிலைக் காணலாம். சென்ற வருஷம் ஏப்ரல்-மீ 18-உ பூமிதான யக்ஞத்தை விநோபாஜி ஆரம்பித்தார். இது அவருக்குத் தோன்றியது, தெய்வப் பிரசாதம் என்று சொல்லவேண்டும். சென்ற ஒரு வருஷமாக தினம் சுமார் 15 மைல் வீதம் நடந்து, கிராமம் கிராமமாகப் போய், இதுவரை சுமார் ஒன்றரை லட்சம் ஏக்கர் பூமிதானம் வாங்கியுள்ளார். சுமார் பத்தாயிரம் பேர்களின் உள்ளத்தில் புகுந்து, அவர்களின் மனதைக் கவர்ந்து, ஏழையானாலும் பணக்காரரானாலும் தங்கள் நிலத்தை மனப் பூர்வமாகக் கொடுக்கும்படி செய்துள்ளார். இம் மாதிரி மனப் புரட்சி அதிசயமானது; சரித்திரத்தில் நாம் காணாதது. நிலம் சம்பந்தமான பொருளாதார சமத்துவத்திற்கு இது அஹிம்சா புரட்சியாகும். சர்வோதய ஊழியர்கள் இதை தேசீய இயக்கமாகச் செய்து அஹிம்சா புரட்சியைப் பூர்த்திசெய்ய இப்பொழுது நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

விநோபாஜி உத்தரப் பிரதேசத்தில் ஐந்து லட்சம் ஏக்கர் கிடைக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் யாத்திரை செய்துவருகிறார். அருகிலுள்ள பீஹாரில் நான்கு லட்சம் ஏக்கர் கொடுப்பதாக வாக்களித்தார்கள். விநோபாஜி உத்தரப் பிரதேசத்திலிருந்து பீஹாரில் யாத்திரை செய்வார். அநேகமாக அடுத்த வருஷம் சம்மேளனம் பீஹாரில் நடைபெறும். பின்னர் விநோபாஜி வங்காளம், ஒரிஸ்ஸா, ஆந்திரா வழியாகத் தமிழ்நாட்டுக்கு வரக்கூடும். அவர் எப்பொழுது வந்தாலும் தமிழ்நாட்டினர் பூமிதான யக்ஞத்தில் தங்கள் பங்காகிய 2 லட்சம் ஏக்காரவைப் பூர்த்தி செய்ய இப்பொழுதே எல்லா முயற்சியும் செய்ய முன்வருவார்கள் என்று நம்புகிறோம்.

★ ★ ★

அஹிம்சையை வெவ்வேறு பகுதிகளாகக் கூறுபோட்டுப் பேசமுடியாது. அஹிம்சை என்பது மனிதனிடம் இயற்கையாகவே அமைந்துள்ள குணமாகும்; அல்லது அவன் விழித்திருக்கும் பொழுதேனும் அவனிடம் இருந்துவர வேண்டிய குணமெனலாம். மனிதனுடைய விழித்த நிலையின் உச்சஸ்தானத்தை அஹிம்சையிடம் ஆழ்ந்த பற்றென்று கூறலாம். நாம் அஹிம்சையை இவ்வகையில் ஆராயும்பொழுது நம் தேவைகளை யெல்லாம் நம் சொந்த உழைப்பைக் கொண்டே தேடிக்கொள்ளுதல் அவசியமாகிறது. நாம் இவ்வாறு செய்யாவிட்டால் பிறர் உதவியை எதிர்பார்க்க நேரும். பிறரை அண்டி, பிறர் உதவியை எதிர்பார்த்து வாழும் ஒருவன் அஞ்சாத நிலையை எய்த முடியாது. நாம் யந்திரங்களை மேன்மேலும் பெருக்கிக் கொண்டே போவோமானல் அவைகளின் பாதுகாப்புக்காக நம் சக்தியை யெல்லாம் செலவிட வேண்டிய மற்றொரு ஆபத்தும் விளையும். அதாவது, இப்பொழுது உலகத்தில் நடந்துவருவதைப்போல் நாமும் பெரிய ராணுவத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டி வரும்.

காந்திஜி

'ராட்டை — தத்துவ விளக்கம்'

பூமிதான இயக்கமும் பரவல்முறை குடிசைத் தொழிலும்

காசி - சேவாபுரியில் சர்வ சேவா சங்கத்தின் தீர்மானம்

[காசி - சேவாபுரியில் சர்வோதய சம்மேளனம் ஏப்ரல் 13, 14, 15-உகளில் நடந்தது. அகில பாரத சர்வ சேவா சங்கம் செய்த தீர்மானத்தை சம்மேளனத்தில் சங்கம் சமர்ப்பித்தது. சம்மேளனம் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றுவதில்லை. சம்மேளனத்தின் கருத்துக்களுக்கு உருக்கொடுத்து செயல்மூலம் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு சர்வசேவா சங்கத்தினுடையது. இந்தத் தீர்மானம் தேசத்தில் உள்ள எல்லா சர்வோதய ஊழியர்களுடைய தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தை மக்கள் ஏற்று அதன்படி நடந்தால் ஒரு வருஷத்திற்குள் பொருளாதார சுதந்திரம் கிடைத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.]

எந்தவிதமான சுரண்டலும் இல்லாத, ஜாதி - வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதே சர்வோதய சமாஜத்தின் லட்சியம். அப்பொழுதுதான் ஒவ்வொருவருக்கும் முழு வளர்ச்சிக்குப் பூரண சுதந்திரமும் சந்தர்ப்பமும் கிடைக்கும். இந்த லட்சியத்தை அடைய தேசத்தில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வை நீக்கவேண்டும். இதை எப்படிச் செய்வது என்பது நம்முன் உள்ள முக்கிய பிரசினை. சென்ற சம்மேளனத்திற்குப் பின் விநோபாஜி ஆரம்பித்து நடத்திவரும் பூமிதான யக்ஞ இயக்கம் இதற்குத் தகுந்த மார்க்கத்தைக் காட்டுகிறது.

பூமிதான யக்ஞம் அஹிம்சையின் சக்தியை நமக்குத் தெளிவாக நிரூபித்து வருகிறது. அஹிம்சா முறையில் நமது நம்பிக்கையை திடப்படுத்திவருகிறது. நம் தேச மக்களைத் தவிர, வெளி உலக மக்களையும் இந்த இயக்கம் வசீகரித்து வருகிறது என்பதைப்பற்றி நாம் பெருமைப்படுகிறோம்: இந்த நவீனமான புரட்சி இயக்கம் தேசத்தில் பெரிய அளவில் பரவுவதற்கு சர்வ சேவா சங்கம் பொறுப்பேற்றுத் தலைமை தாங்கி வழிகாட்ட வேண்டுமென்று ஊழியர்களும் பொது ஜனங்களும் எதிர்பார்க்கிறார்கள்.

விநோபாஜியின் சொந்த தனிப்பட்ட முயற்சியை மட்டும் நம்பியிராமல் பூமிதான யக்ஞம் தேசிய இயக்கமாகப் பெரிய அளவில் நடைபெறவேண்டும் என்பதும் விநோபாஜியின் விருப்பம். ஆதலால் பூஜ்ய விநோபாஜியின் தலைமையின்கீழ் இதன் பொறுப்பை ஏற்றுக்கொள்வது சர்வ சேவா சங்கத்தின் கடமையாகும்.

ஒரு தாயினிடத்தில் அவள் குழந்தைகள் எல்லோருக்கும் உள்ள உரிமையைப் போலவே, பூமாதேவியின் குழந்தைகள் எல்லோருக்கும் பூமியின்பேரில் சம உரிமை உண்டு என்பது பூமிதான யக்ஞ இயக்கத்தின் அடிப்படையான கொள்கை. ஆகவே, நம் தேசத்தில் உள்ள நிலத்தை எல்லா மக்களுக்கும் நியாயமாகப் பங்கிடு செய்யவேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும், நஞ்சை நிலமானால் ஒரு ஏக்கரும், புஞ்சை நிலமானால் 5 ஏக்கர் வீதமும் பங்கிடு செய்யவேண்டும்.

இம்முறையில் பங்கிடு செய்வதற்கு மக்களின் மனப்பான்மை மாறி, அவர்களுடைய மனச்சாட்சி தூண்டப்பட்டு, சமூக நீதியைப்பற்றி அவர்கள் உணரத் தகுந்த சூழ்நிலை ஏற்படவேண்டும். ஐந்து லட்சம் கிராமங்களில் வாழ்ந்துவரும் மக்களின் பெயரில், ஒவ்வொரு கிராமத்திலும் 5 ஏக்கர் வீதம், தேசத்தில் குறைந்தது 25 லட்சம் ஏக்கர் நிலம் தானமாகச் சேகரிக்கவேண்டும். வேறு ஜீவனமில்லாமலும், சொந்த நிலம் இல்லாமலும் இருப்பவர்கள், தாங்களே விவசாயம் செய்யக்கூடியவர்கள், அல்லது விவசாயம் செய்ய விரும்புகிறவர்களுக்கு பூமிதானத்தில் கிடைத்த நிலம் விநியோகிக்கப்படும்.

சர்வோதயத் தத்துவத்தின்படி ஓர் புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்கவேண்டுமானால், எல்லோருக்கும் போதிய வேலை கிடைத்து அவர்களின் வாழ்க்கை பொருளாதார சமத்துவத்தை நோக்கி முன்னேறுவது அவசியம். கிராம-குடிசைத் தொழில்கள்மூலம் பரவல் முறையில் அமைந்த உற்பத்தி - விநியோகத் திட்டத்தின் வாயிலாகத்தான் இந்த லட்சியத்தை அடைய முடியுமென்று நம்புகிறோம். இந்த நோக்கத்துடன் சுயதேவைப் பூர்த்திக்காகப் பரவல் முறையில் அமைந்த கிராமத்தின் பொருளாதாரநிலைக்குத் தீங்கிழைக்கும், குவியல் முறையில் ஆலைகளில் தயாராகும் உணவு உடை சம்பந்தமான எல்லாப் பொருள்களையும் தீவிரமாக பகிஷ்கரிக்கவேண்டும்.

*   *   *

வினேபாஜி தேசமக்களுக்கு விடுத்த வேண்டுகோள்

பூமிதான வேள்வியின் கங்கோத்ரி

அன்பான பாரத தேச சகோதரர்களே,

சென்ற வருஷம் கோடையில் நான் தெலுங்கானாவில் யாத்திரை செய்துகொண்டிருந்தேன். அங்கு எழுந்திருந்த பயங்கரப் பிரசினையைப் பற்றி நான் தினமும் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் ஹரிஜனங்கள் கோரியதின் பேரில், கிராமத்தவர்களிடம் நான் பூமி தானத்தைப் பற்றிக் கூறினேன். கிராமத்தவர்கள் அவ்விஷயத்தை ஏற்றுக் கொண்டார்கள். எனக்கு முதலாவது பூமி தானம் கிடைத்தது. இது 18-4-'51 ந்தேதி நடந்தது. அதன் பிறகு பூமிதான வேள்வியைப் பற்றிய கற்பனை எனக்கு தோன்றியது. தெலுங்கானா யாத்திரையில் நான் அதைச் சோதனை செய்தேன். நல்ல பலன் ஏற்பட்டது; இரண்டு மாதத்தில் பன்னிரண்டாயிரம் ஏக்கர் நிலம் கிடைத்தது. அங்கிருந்த சூழ்நிலையின் சிக்கலை நீக்குவதற்கு பூமிதான வேள்வியினால் அதிக உதவி கிடைத்தது என்பது என்னுடைய எண்ணம். தேசம் முழுவதிலும் அதன் பிரபாவம் ஏற்பட்டது. தெலுங்கானாவின் சூழ்நிலையில் இன்று போதுமான அமைதி ஏற்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

காந்திஜி இறந்த பிறகு, அஹிம்சையில் பிரயோகிப்பதற்காக நான் ஒரு மார்க்கம் தேடிக்கொண்டிருந்தேன். மேவாத் (இந்தப் பிரதேசம் ராஜபுதனத்திற்கும் சிந்துவுக்கும் மத்தியில் இருக்கிறது) முஸல்மான்களைக் குடியமர்த்தும் பிரசினையை, இந்த எண்ணத்துடன் தான் நான் ஏற்றேன். அதில் சிறிது அனுபவம் கிடைத்தது. அதை ஆதாரமாகக் கொண்டு தெலுங்கானாவிற்குச் செல்லத் துணிந்தேன். அங்கு பூமிதான யக்ஞத்தின் மூலம் அஹிம்சை எனக்குக் காட்சி யளித்தது.

தெலுங்கானாவில் பூமிதானம் கிடைத்ததற்கு அங்கு ஒரு ஆதாரம் இருந்தது. அந்த ஆதாரமில்லாமல் இந்தியாவினுடைய மற்ற பாகங்களில் ஒருக்கால் பூமிதான வேள்வி நடைபெறுமா நடைபெறாதா என்ற சந்தேகம் ஏற்படக் கூடியதாக இருந்தது. அந்த சந்தேகத்தை நீக்குவதற்காக, மற்ற பிரதேசங்களில் பூமிதான யக்ஞத்தைச் சோதிப்பது அவசியமாக இருந்தது. திட்டக் கமிஷனிடத்தில் என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்காக பண்டித நேருஜி என்னை அழைத்திருந்தார். அதன் காரணமாக நான் கால் நடை யாத்திரை செய்ய நேர்ந்தது. டில்லி செல்லும் வரை, இரண்டு மாதங்களில், சுமார் பதினெட்டாயிரம் ஏக்கர் நிலம் எனக்குக் கிடைத்தது. அஹிம்சை மார்க்கத்தைப் பின்பற்றுவதில் மக்கள் உற்சாகமாக இருப்பதை நான் கண்டேன்.

இருபத்தைந்து லட்சம் ஏக்கர் தானம் பெற சங்கற்பம்

சர்வோதயக் கருத்துக்களில் சிரத்தை கொண்ட உத்தரப் பிரதேசத்தொண்டர்களது கோரிக்கையின் பேரில் அம் மாகாணத்தின் விசாலமான பிரதேசத்தில் பூமிதான வேள்வியின் ஆராய்ச்சியை ஆரம்பித்தேன். உத்தரப் பிரதேசத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சர்வோதயக்குடும்பத்தைக் குடியேற்ற வேண்டும், அக் குடும்பத்திற்கு குறைந்தபட்சம் ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டும் என்ற கணக்கைக் கொண்டு ஐந்து லட்சம் ஏக்கர் நிலம் தானம் பெறுவதென்று சங்கற்பம் செய்யப்பட்டது. இடையில் மூன்று மாதம் தொண்டர்கள் எல்லோரும் தேர்தலில் ஈடுபட்டிருந்துங்கூட, ஜனங்களின் ஒத்துழைப்பு நன்றாக இருந்தது. ஒரு லட்சம் ஏக்கர் வரை எங்களுக்குக் கிடைத்தது. நான் இதில் ஈசுவரனின் சைகையைக் காண்கிறேன். என்னுடைய நண்பர்களனைவருக்கும் இதே தோன்றியது. இதன் பலனாக, இவ் வருடம் ஏப்ரல் மாதம் சேவாபுரியில் நடந்த சர்வோதய சம்மேளனத்தில், அனைவரும் சேர்ந்து அடுத்த இரண்டு வருடங்களுக்குள் இந்தியா முழுவதிலிருந்தும் குறைந்தபட்சம் இருபத்தைந்து லட்சம் ஏக்கர் நிலம் தானமாகப் பெறுவதென்று சங்கற்பம் செய்தார்கள்.

இருபத்தைந்து லட்சம் ஏக்கர் நிலத்தினால் இந்தியாவிலுள்ள நிலமில்லாதவர்களின் பிரசினை தீர்ந்து விடும் என்பதல்ல. அதற்குக் குறைந்த பட்சம் ஐந்து கோடி ஏக்கர் நிலம் வேண்டும். ஆனால், முதல்தவணை என்ற முறையில் நாம் இருபத்தைந்து லட்சம் ஏக்கர் நிலம் தானமாகப் பெற்று இந்தியாவிலுள்ள ஐந்து

லட்சம் கிராமங்களிலும் அஹிம்சா மார்க்கத்தை கையாண்டால், நிலத்தின் நியாயமான விநியோகத்திற்குத் தகுந்த சூழ்நிலை ஏற்பட்டு விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பெரிய பெரிய விவசாயிகளிடமும், ஜமீந்தார்களிடமும் நான் நிலம் கேட்கிறேன். ஆனால் சிறிய சிறிய விவசாயிகளிடமும் இவ் வேலையில் ஒத்துழைக்கும்படி நான் வேண்டுகிறேன். விசால இதயமுடைய சிறிய விவசாயிகள் மிகவும் அன்புடன் என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்கள் என்பதைச் சொல்வதற்கு நான் சந்தோஷமடைகிறேன். இந்த வேள்வியில் அநேக 'சபரி' கள் தங்கள் 'இலந்தைப்பழங்களை'க் கொடுத்திருக்கிறார்கள், அநேக 'குசேலர்' கள் தங்கள் 'அவலை' சமர்ப்பணம் செய்திருக்கிறார்கள். எனக்கு இது என்றைக்கும் ஞாபகமிருக்கும் பக்தர்களின் ஒரு சரித்திரமாகிவிட்டது. இதில் ஏழைகளுக்கு ஆத்ம முன்னேற்றத்திற்குரிய தூண்டுதல் ஏற்படுகிறது; பணக்காரர்களுக்கு ஆத்ம சுத்திக்கும், நில முதலாளித்துவத்திலிருந்து விலகுவதற்கும் தூண்டுதல் கிடைத்திருக்கிறது.

எல்லாவிதமான ஜனங்களும் எனக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், மற்ற மதத்தவர்கள் ஆகிய அனைவரும் எனக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். எல்லா வகையிலும் பின்னடைந்தவர்கள் என்று கருதப்படுகிற ஹரிஜனங்களும் கொடுத்தார்கள். நிலத்தின்மீது உரிமை இல்லையென்று கருதப்படுகிற பெண்களும் கொடுத்திருக்கிறார்கள். கொடுப்பவர்களில் எல்லாக் கூட்டத்தவர்களும், எல்லாக் கட்சியினரும் சேர்ந்திருக்கிறார்கள். தரித்திர நாராயணனை தங்களின் குடும்பத்தில் ஒருவராகக் கருதி, உரிமையென்ற முறையில் நிலம் கொடுக்கப்படவேண்டுமென்று நான் கோரியிருந்தேன். அதே எண்ணத்துடன் ஜனங்கள் கொடுத்தார்கள்.

தானம் என்பதன் பொருள்

பூமிதான யக்ஞம் என்பதில் 'தானம்' என்ற வார்த்தை வருகிறது. அதை விலக்க வேண்டிய அவசியம் இல்லை. 'தானம்' அதாவது 'சம பங்கீடு' என்பதாகும். இதுதான் தானம் என்பதற்கு சங்கராச்சாரியர் கூறும் பொருள். இதே அர்த்தத்தில்தான் நாம் அந்த வார்த்தையை உபயோகிக்கிறோம். யாருக்கு நிலம் கிடைக்கிறதோ அவர்கள் உழைக்காமல் இனமாகச் சாப்பிடமுடியாது; அவர் நிலத்தில் உழைப்பார்; தனது வியர்வை சொட்ட உழைத்தால்தான் சாப்பிட முடியும். ஆகையால் அவரை எளியவராக்குவதற்குக் காரணம் ஒன்றுமில்லை. அவருடைய சொந்த உரிமையை நாம் அவருக்குக் கொடுக்கிறோம்.

மூன்று சூத்திரங்கள்

நாம் பணிவுடனும், அன்புடனும், உண்மை நிலைமையை விளக்கியும் நிலம் கேட்கிறோம். நம்முடைய மூன்று சூத்திரங்கள் கீழேயுள்ளன:

1. நம்முடைய கருத்தைப் புரிந்துகொண்டும் யாராவது கொடுக்கவில்லையென்றால், அதற்கு நாம் வருத்தப்படுகிறதில்லை. ஏனென்றால், இன்று கொடுக்காதவர்கள் நாளைக்குக் கொடுப்பார்கள். கருத்தின் விதை வளராமல் இராது என்று நாம் கருதுகிறோம்.

2. நம்முடைய கருத்தைப் புரிந்துகொண்டு யாராவது கொடுக்கிறார்களென்றால் அதனால் நாம் சந்தோஷப்படுகிறோம். ஏனென்றால் அதனால் எல்லாவித நல்லெண்ணங்களும் உண்டாகின்றன.

3. நம்முடைய கருத்தைப் புரிந்துகொள்ளாமல், வற்புறுத்தலின் காரணமாக யாராவது கொடுத்தால் நமக்கு துக்கம் ஏற்படும். நாம் எந்தவிதமாவது நிலத்தைச் சேகரிக்க வேண்டுமென்பதல்ல. ஆனால் சமதர்ம, சர்வோதய மனப்பான்மையை உண்டாக்க வேண்டும்.

எல்லாக் கட்சிகளுக்கும் வேலைத் திட்டம்

நமக்குக் கிடைத்திருக்கிற வேலைத்திட்டத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் சமமாக வேலை செய்வதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கிறது என்று நான் கருதுகிறேன். ஜனங்கள் காங்கிரஸைப் புனிதப்படுத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். தூய்மை எல்லா ஸ்தாபனங்களுக்கும் அவசியமாகும். ஆனால் பெரிய ஸ்தாபனம் என்பதற்காகத்தான் காங்கிரஸின் பெயர் சொல்லப் படுகிறது. காங்கிரஸும் மற்ற ஸ்தாபனங்களும் இந்த வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு, சத்தியம், அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட முறையில் நடத்தினார்களானால், அதன் மூலம் எல்லா ஸ்தாபனங்களும் தூய்மையாகும்; எல்லாவற்றின் பலமும் பெருகும்; எல்லாவற்றிலும் ஒற்றுமை ஏற்படும்.

ஒத்துழைப்பு யாசகம்

எனது இந்திய சகோதரர்களே! இந்தப் "பிரஜாஸூய வேள்வி"க்கு உங்கள் பங்கைக் கொடுங்கள் என்று உங்களிடம் வேண்டிக் கொள்கிறேன். இந்த வேலையில் வெற்றியடைந்து பொருளாதாரத் துறையில் அஹிம்சைக்கு கௌரவம் அளியுங்கள். என்னுடைய இந்த வேலையில் மூன்றுவித நோக்கங்கள் இருக்கின்றன.

முதலாவது, இந்தியப் பண்பிற்கு இது பொருத்தமா யிருக்கிறது. இரண்டாவது, இதில் சமூக - பொருளாதாரப் புரட்சியின் வித்து இருக்கிறது. மூன்ருவது, இதன் மூலம் உலகத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு உதவி கிடைக்கக்கூடும்.

இந்தியா முழுமைக்கும் ஏதாவது ஒரு வேலைத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரம் இல்லை யென்பதை நான் அறிவேன். ஜனங்களுக்குக் கட்டளையிடுவதற்கு நான் ஒரு தலைவனல்ல; கிராமத்தவர்களின் சேவையே எனக்கு முக்திக்குரிய சாதனையாகக் கருதி, பக்தி மார்க்கத்தில் செல்கிற ஒரு மனிதன். இன்று காந்திஜி இருந்திருந்தால் இம்மாதிரி ஜனங்களுக்கு முன் நான் வந்திருக்க மாட்டேன். நான், முன்போல, அதே கிராமத் தோட்டி வேலைசெய்து கொண்டிருப்பதையும், பணப் பிடிப்பிலிருந்து விடுபடுவதற்காக விவசாய ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதையும் நீங்கள் பார்ப்பீர்கள். ஆனால் நிலைமையின் காரணமாக நான் வெளியில் வர நேரிட்டது. மேலும், இந்தப் பெரிய வேள்விக்கு ஆச்சாரியனுகக் கூடிய தைரியமான காரியத்திற்கு முன்வர நேரிட்டது. இது தைரியமான காரியமாக இருந்தாலும் சரி, பணிவதாக இருந்தாலும் சரி, எல்லாவற்றையும் பரமேசுவரனுக்கு அர்ப்பணித்துவிட்டு, எல்லா சகோதர சகோதரிகளின் ஒத்துழைப்பையும் யாசித்துக் கொண்டிருக்கிறேன்.

அக்பர்புர் (உத்தரப் பிரதேசம்) — வினோபா, 28—4—'52

★ ★ ★

குறிப்பும் செய்தியும்

கிராமக் கைத்தொழில் நயி தாலிம்

வர்தாவில், மகன்வாடியில், அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தில் சென்ற இரண்டு வருஷங்களாக ஒரு விசேஷப் பயிற்சி நடந்தது. அதற்கு 'கிராமக் கைத்தொழில் நயி தாலிம்' (*Gram Udyog Nayi Talim*) என்று பெயர். இதற்குமுன் குடிசைத் தொழில்களில் மட்டும் பயிற்சி கொடுக்கப்பட்டது. இந்தப் புதிய பயிற்சியில் தொழிலுடன், அதை ஆதாரமாகக் கொண்டோ, அத்துடன் சம்பந்தப்பட்டோ, பொதுக் கல்வியும் தத்துவ ஞானமும் போதிக்கும் முறை கையாளப்பட்டது. ஆதாரக் கல்வி முறைத் தத்துவத்தை முதியோர் கல்வியிலும் தொழிலிலும் இணைத்துப் புதிய பயிற்சி முறையை முதன் முதலில் ஆரம்பித்தவர் ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன். அவர் தலைமையில் நடந்த இந்தப் பயிற்சி 30-4-'52உ யுடன் முடிவடைந்தது. இதில் பல மாகாணங்களிலிருந்தும் ஆண்களும் பெண்களும் சுமார் 50 பேர் பயிற்சி பெற்ருர்கள். ஏப்ரல் 30-உ பயிற்சியின் முடிவு விழா மகன்வாடியில் நடந்தது. இதற்கு ஸ்ரீ பி. ஸி. கோஷ் தலைமை வகித்தார். ஸ்ரீ ஜாஜூஜி, ஸ்ரீ கிஷோரிலால் முதலியவர்கள் பேசினர்கள். ஸ்ரீ பரதன் குமரப்பா கண்காட்சியைத் திறந்து வைத்தார். பொது ஜனங்கள் ஏராளமாகக் கலந்துகொண்டனர். பயிற்சி பெற்றவர்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டது.

கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி முகாம்

மதுரை ஜில்லாவில் காந்தி கிராமத்தில் ஊழியர் சங்கத்தின் கீழ் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு மாதப் பயிற்சி முகாம் 15-4-'52 முதல் 15—5—'52 வரை நடந்தது. இதில் 6 கல்லூரிகளைச் சேர்ந்த 18 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதுமாதிரி முந்திய வருஷங்களில் மூன்று முகாம்கள் நடந்தன. காந்தீய - சர்வோதயத் தத்துவம் மாணவர்களிடையே பரவ வேண்டுமானல் இந்தமாதிரி ஒவ்வொரு ஜில்லாவிலும் கோடை விடுமுறையில் முகாம்கள் நடைபெற வேண்டிய அவசியத்தை அதிகம் வற்புறுத்தத் தேவையில்லை.

ஸ்ரீ ஜே. ஸி. குமரப்பா

ஸ்ரீ ஜே. ஸி. குமரப்பா ரஷ்யாவில் மாஸ்கோவில் நடந்த சர்வதேசப் பொருளாதார மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக மார்ச்சு மாதம் சென்றவர் இந்தமாதம் 10-உ திரும்பி வந்தார்.

★ ● ★

★ தமிழ்நாட்டில் பூமிதான யக்ஞப் பிரசாரம் ★

ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் விஜயம்

சர்வோதய சம்மேளனம் எப்ரல் 15-உ முடிவடைந்தது. விநோபாஜியின் தலைமையில் பூமிதான யக்ஞத்தை நடத்தும் பொறுப்பை சர்வ சேவா சங்கம் ஏற்க முடிவு செய்தது. தேசம் முழுவதிலும் இரண்டு வருஷத்திற்குள் 25 லட்சம் ஏக்கர் நிலம் பூமிதானம் மூலம் சேகரித்து நிலம் இல்லாத விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவேண்டும் என்பது நம் தேசீயத் திட்டம். இதற்கு உடனடியாக ஒவ்வொரு மாகாணத்திலும் எவ்வளவு நிலம் சேகரிக்க வேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது.

இப்பொழுது சர்வ சேவா சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ சங்கர்ராவ் தேவ். இவர் காங்கிரஸ் காரியதரிசியாக இருந்தவர். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினராகப் பல வருஷங்கள் இருந்திருக்கிறார். எல்லா அரசியல் வேலைகளிலிருந்தும் விலகி, காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினர் பதவியையும் சமீபத்தில் ராஜிநாமாச் செய்துவிட்டார். முழு நேரமும் சர்வ சேவா சங்கத்தின் மூலம் பூமிதான யக்ஞத்திற்கு உழைக்க சங்கற்பம் செய்துகொண்டுள்ளார்.

சேவாபுரி சம்மேளனம் முடிந்ததும் ஒவ்வொரு மாகாணத்திலும் பூமிதான யக்ஞ இயக்கத்தை நடத்த ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்று முடிவாயிற்று. இந்தக் கமிட்டி இறுதியில் விநோபாஜியின் அங்கீகாரம் பெறவேண்டும். இதற்காக ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் ஒவ்வொரு மாகாணத்திலும், நேரில் போய், கமிட்டியை அமைப்பதற்கு சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார்.

ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் மே மீ 5-உ சென்னைக்கு வந்தார். அங்கு பத்திரிகை நிருபர்களிடம் பூமிதான யக்ஞத்தைப்பற்றி விளக்கினார். மலையாளத்தில் நீலாம்பூர் பக்கத்தில் அமரம்பலம் என்ற இடத்திலும்,கள்ளிக்கோட்டைக்குப் பக்கத்தில் கடம்பழிபுரம் என்ற இடத்திலும் நிர்மாண ஊழியர்கள் மகாநாடு நடந்தது. இந்த இரண்டு இடங்களுக்கும் 7-உ முதல் 10-உ வரை அவர் விஜயம் செய்து பூமிதான யக்ஞத்தைப் பற்றிப் பேசினார்.

தமிழ்நாட்டு நிர்மாண ஊழியர்களின் மகாநாட்டை மதுரையில் மே-மீ 10, 11உ களில் நடத்துவதாக சேவாபுரியிலேயே நிச்சயம் செய்யப்பட்டது. இதற்காகவே மதுரைக்கு மே-மீ 11-உ. வந்தார்.

மதுரையில் நடத்துவதென்று நிச்சமாகியிருந்த மகாநாட்டை சில அசௌகரியங்களால் நடத்தமுடியவில்லை. அடுத்த ஜூன் மாதம் 22, 23 தேதிகளில் அது நடைபெறும். அதற்கு ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் விஜயம் செய்வார். மகாநாடு ஒத்திபோடப்பட்டிருந்தாலும் அங்கு வந்திருந்த ஸ்ரீ நா. ம. ரா. சுப்பராமன், ஸ்ரீ அ. வேதரத்னம், ஸ்ரீ ரா. குருசாமி, ஸ்ரீ ஜெகந்நாதன் போன்றவர்களுடன் மாகாண பூமிதானக் கமிட்டி அமைப்பதைப்பற்றி அவர் கலந்து பேசினார்.

மதுரையில் அன்று மாலை சௌராஷ்டிர பெண்கள் பள்ளிக்கூடத்தில் நிர்மாண ஊழியர்களின் கூட்டம் நடந்தது. சித்திரை உற்சவக் காலத்தில் இம்மாதிரியான கூட்டமும் மகாநாடும் மதுரையில் கூட்டுவது சிறிது சிரமமே. அதிகம்பேர் வரமாட்டார்கள். ஆனால் அன்று கூட்டத்திற்கு ஏராளமாக ஜனங்கள் வந்தனர். ஸ்ரீ ஜெகந்நாதன் ஆச்சாரிய விநோபாஜியுடன் சுமார் நான்கு மாத காலமாகக் கால் நடை யாத்திரை செய்து இப்பொழுது தான் திரும்பி வந்தார். அவர் தலைமையில் கூட்டம் நடந்தது. விநோபாஜியின் யாத்திரையில் நடந்த பல அதிசய சம்பவங்களைப்பற்றி அவர் கூறி, பூமிதான யக்ஞத்தைப் பற்றி விளக்கினார். ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் பூமிதான யக்ஞத்தின் அடிப்படையான சித்தாந்தத்தைப் பற்றி ஹிந்தியில் பேசினார். பேச்சு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் ஆழ்ந்த சிரத்தையுடன் கேட்டனர். இறுதியில் ஒரு நண்பர் பூமிதானம் கொடுக்கத் தனக்கு நிலம் இல்லையென்றும், ஆனால் ஒரு ஏழைக் குடியானவனுக்கு ஒரு ஜோடி எருது தானம் அளிப்பதாகவும் கூறினார். தமிழ் நாட்டில் எந்த இயக்கமும் அங்குரார்ப்பணம் ஆவது பெரும்பாலும் மதுரையில் தான். தமிழ் நாட்டிற்கு வழி துலக்குவதும் மதுரையே. பூமிதான யக்ஞத்தை ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் மதுரையில் ஆரம்பித்து வைத்தது பொருத்தமே யாகும். * * *

1424137

Edited and Published by N. Ramaswami
For Sarvodaya Prachuralayam, All India Spinners' Association, Veerapandy, Tirupur.
Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

ஸர்வோதய பிரசுராலயம்

முக்கிய அறிவிப்பு

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளை மூலம் ஸர்வோதய பிரசுராலயம் சென்ற மூன்று வருடங்களாக காந்தீய-கதர்-சர்வோதய இலக்கிய சேவை புரிந்து வருவது அன்பர்கள் அறிந்ததே. 1951-ஜுலை மாதம் முதல் சேவாகிராமம், சர்க்கா சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் பிரசுர இலாகா வுடன் ஸர்வோதய பிரசுராலயம் இணைக்கப்பட்டு வேலை செய்துவந்தது.

சர்க்கா சங்க விதிகள் பிரசுர இலாகாவை மேலும் விரிவுபடுத்த இடங் கொடுக்கவில்லை. ஆகவே, அகில பாரத சர்வ சேவா சங்கத்தினிடம் வர்தாவி லிருந்த தனது பிரசுர இலாகாவை சர்க்கா சங்கம் ஒப்படைத்து விட்டது.

காந்திய சர்வோதய நூல்களை மக்களிடை லட்சக்கணக்கில் பரப்புவது இக்காலத்தில் அவசரமான முக்கிய பணியாகும். அதற்கு இதுதான் தக்க சந்தர்ப்பம். இதை யுணர்ந்து சர்வ சேவா சங்கம் தென்நாட்டில் ஓர் பிரசுர இலா காவை ஆரம்பிக்க 29—4—'52-ல் நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம் முடிவு செய்துள்ளது. தென்நாட்டு பாஷைகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகியவற்றிலும், ஆங்கிலத்திலும் காந்தீய - சர்வோதய நூல்களை வெளியிடுவதே சர்வ சேவா சங்கத்தின் தென்நாட்டுப் பிரசுர இலாகாவின் நோக்கம்.

இத்துறையில் சென்ற மூன்று வருஷ காலமாக சேவை செய்துவரும் ஸர்வோதய பிரசுராலயத்தை முழுவதுமாக ஏற்று நடத்த சர்வ சேவா சங்கம் முன்வந்துள்ள நற்செய்தியை அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸர்வோதய பிரசுராலயத்தின் வசமுள்ள எல்லா நூல்களையும், "கதர் மலர்" "The Khadi World (கதர் உலகம்)" இரண்டு மாதப் பத்திரிகைகளையும், பிரசுராலயத்தின் நன்மதிப்புடன், சர்வ சேவா சங்கத்திற்கு மாற்றிவிட சர்க்கா சங்கத்தின் டிரஸ்டிகள் தீர்மானித்ததற்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறோம்.

இந்த மாறுதல் 1952-ஞு மே மாதம் 16-ம் தேதி முதல் அமுலுக்கு வருகிறது.

இதுவரை சர்க்கா சங்கத்தின் ஸர்வோதய பிரசுராலயமா யிருந்து வந்தது, இனி 'சர்வசேவா சங்கத்தின் ஸர்வோதய பிரசுராலயம்' என்று அழைக்கப்பெறும். பிரசுராலயம் முன்போலவே திருப்பூர் - வீரபாண்டியிலுள்ள சர்க்கா சங்க வித்தி யாலயத்தில் 1953-ஞு ஜூன் மாதம் வரை ஒரு வருடத்திற்கு தொடர்ந்து இருந்து வர சர்க்கா சங்கம் அன்புகூர்ந்து அனுமதித்துள்ளது. மலையாளம், மற்றும் இதர தென்னிந்திய பாஷைகளில் பிரசுர வேலை வளர்ந்து அதற்கேற்ப பிரசுராலயத்தை மாற்றும் அவசியம் ஏற்படும் பொழுது பிரசுராலயம் தக்க இடத்திற்கு மாறும். அதுவரை "நிர்வாக ஆசிரியர், ஸர்வோதய பிரசுராலயம், வீரபாண்டி, திருப்பூர்" என்ற விலாசத்திற்கே எல்லா கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளக் கோரு கிறோம்.

"கதர் மலர்", "The Khadi World (கதர் உலகம்)" பத்திரிகைகளுக்கும் எமது மற்ற எல்லாப் பிரசுரங்களுக்கும் ஏராளமாக இதுவரை அன்பர்கள் ஆதரவு கொடுத்து வந்தார்கள். அதுபோல் இனியும் சர்வ சேவா சங்கத்தின் தென் னிந்திய பிரசுர இலாகாவாகிய ஸர்வோதய பிரசுராலயத்திற்குத் தொடர்ந்து அதிக ஆதரவும் ஒத்துழைப்பும் உற்சாகமும் அளித்து சர்வோதய லட்சியத்தைப் பரப்பும் பணியில் உதவியளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

காந்தீய - சர்வோதய இலக்கியம்

தொகுப்பு நூல்

		ரூ. அ.
1-3	கதர் மலர் செ. I, II, III	0—[illegible]
4-5	புனர் நிர்மாணம் செ. I, II	0—8

கதர் சாஸ்திரம்

6	நூற்புக் கணிதம் பாகம் I	0—6
7	„ „ II	0—8
8	„ „ III	0-14
9	„ „ IV	1—0
10	நூற்புக் கலையின் நுணுக்கங்கள்	1—0
11	தக்ளியால் நூற்பதெப்படி?	0—8
12	கதர் உபகரணங்கள்	1—0
13	கைராட்டை	1—8
14	கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை	1—0
15	நரம்பு செய்தல்	0—8
16	பட்டை போட சுலப வழி	0—4
17	பருத்திப் பிரசினை	0—6

தத்துவ நூல்கள்

18	காந்திய நவநீதம்	2—0
19	புதிய கதர் இயக்கம் (கைவசமில்லை)	0-12
20	சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	1—0
21	சர்க்கா சங்க வேலைத்திட்டம்	0—8
22	சர்க்கா சங்க வரலாறு	1—0
23	சேவாகிராம முகாம்	1—0
24	ராட்டைப் புரட்சி	0—6
25	கதர் தத்துவமும் சேவையும்	0-12
26	விநோபா அறிவுரைகள்	0-12
27	„ பிரார்த்தனைப் பிரசங்கம்	0—8
28	ஸ்வராஜ்யமும் சர்க்காவும்	0—8
29	மூலஜல சுத்தி	0—8
30	துப்புரவு விஞ்ஞானம்	0—8
31	சுயம்பூரண கிராமம்	0—5

காந்திஜி எழுதியவை

		ரூ. அ.
32	ஸர்வோதயம்	0—6
33	சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்	0—4
34	ஆசிரம வாழ்க்கை	1—4
35	நீதி தர்மம்	0—4
36	ராமநாமம்	0-12
37	ஆசிரம பஜனாவளி (தொகுப்பு)	0—6
38	ராட்டை — தத்துவ விளக்கம்	1—4

காந்திஜியைப் பற்றியவை

39	பாப்பாவின் காந்தி	0-12
40	பாபூ என் தாய்	0-10
41	எமது பா பாகம் I	1—4
42	„ „ II	1—4
43	காந்திக் காட்சிகள்	1—4
44	காந்திஜியின் குரல்	0—6

இதர நூல்கள்

45	தன்னம்பிக்கை	0—8
46	புக்கர் வாஷிங்டன்	0—8

சிறு பிரசுரங்கள்

47	தமிழ்நாட்டு விபாகங்கள்	0—2
48	கதாயி மண்டல்	0—2
49	விநோபாஜியின் ஸர்வோதய யாத்திரையும், பூமிதான யக்ஞமும்	0—2
50	சுயராஜ்யத்தின் உண்மைப் போர் பாகம் I	0—3
51	„ „ பாகம் II	0—3
52	இதென்ன சுயராஜ்யம்?	0—3

English Publications

53	Revolutionary Charkha	0—6
54	Demand of the Times	0-12
55	New Programme of A. I. S. A.	0-10
56	Prayer for Peace	0—2
57	The Ideology of the Charkha	0-14

"கதர் மலர்"

காந்தீய - சர்வோதய தத்துவப் பிரசார, மாதப் பத்திரிகை. எல்லா காதி வஸ்திராலயங்களிலும் கிடைக்கும்.

வருட சந்தா ரூ. 3 தனிப்பிரதி அணா 4

THE KHADI WORLD

A Monthly English Digest devoted to the Science and Philosophy of Khadi, other Constructive Programme and Gandhian - Sarvodaya Ideology.

Started in July 1951.

Annual Subs: Rs. 3 Price: As. 4

ஸர்வோதய பிரசுராலயம், வீரபாண்டி — திருப்பூர்

தந்தி விலாசம்:- "VASTRALAYA" (TIRUPUR) போன் நெ. 133

கமலா பிரஸ், திருப்பூர்